உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 11 திங்கட்கிழமை (27.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 305

# வலி. வடக்கில் நாளை மீள்குடியமர்வு அமைச்சர் பஸில் ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், செப். 26

வலிகாமம் வடக்கில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் நாளை உத்தி யோக பூர்மாக ஆரம்பமாக உள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான பஸில் ராஜபக்ஷ மீள்குடியமர்வை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார் என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

''நாளை யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மூன்று நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள உள்ளார். அவர் வலி.வடக்கில் மீள்குடியமர்வை ஆரம்பித்து வைப்பார். எனினும் மீள்குடியேற்றத்தை வலி.வடக்கின் எந்தப் பிரதேசத்தில் அமைச்சர் ஆரம்பித்து வைப்பார் என்பது குறித்து எமக்கு உத்தியோகபூர்வமாக இதுவரை எந்த அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை'' - என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நேற்றிரவு தெரிவித்தார்.

வலி. வடக்கில் பலாலி உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனை ய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என அண்மையில் அமைச்சர் பஸில் தெரிவித்திருந்தார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதனடிப்படையில் மீள்குடியமர்வுப் பணிகள் நாளை ஆரம்பிக்கப்பட உள்ளன.

மீள்குடியமர்வுப் பணிகள் வயாவிளான் பகுதியிலேயே பெரும்பாலும் ஆரம்பிக்கப் படும் என்று செயலக வட்டாரங்கள் கூறின. இதற்கு ஏற்ப (24ஆம் பக்கம் பார்க்க)

# புதிய நாடாளுமன்ற சபை இயங்க முடியாத நிலையில்!

## ரணில் அங்கம் வகிக்க மறுத்துவிட்டதால்



கொழும்பு, செப்ரெம்பர் 27

**18ஆவது அரசமைப்பின் கீழ், புதிதாக உருவாக்கப் பட்டுள்ள நாடாளுமன்ற சபை (Constitutional Council) இயங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

நாடாளுமன்றச் சபைக்கு பிரதிநிதியொருவரை நியமிக்கும்படி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார். அதனை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை நியமித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்பதவியை நிராகரித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கும் எனத் தெரிந்துதான், எம்.ஏ.சுமந்திரன் (24ஆம் பக்கம் பார்க்க)

### சீதுவையில் ரயில் மோதி மூவர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, செப். 27

கட்டுநாயக்க, சீதுவைப் பகுதியில் நேற்று இரவு ரயிலில் மோதுண்டு கைக்குழந்தை ஒன்றும் இரு பெண்களும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார். இவர் (24ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைச் சிறைக்குள் நேற்று கைதிகள் சேர்ந்து தீ வைப்பு!

### அதிகாரிகள் நடத்திய சோதனையின் பின்னர்

திருகோணமலை, செப்.27

திருகோணமலை சிறைச்சாலைக்குள் நேற்று தீ வைப்புச் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

இத் தீயினால் ஏற்பட்ட கடும் புகை காரணமாக சிறைச்சாலைக் கைதிகள் சுவாசிப்பதில் கடும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் தீயணைப்புப் படையினருக்கு தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் கைதிகளைக் காற்றோட்டமான இடத்துக்கு கொண்டு சென்றதோடு தீயையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் நேற்றுக்காலை கைதிகளைச் சோதனையிட்டபோது கையடக்கத் தொலைபேசி, சில வானொலிகள் மற்றும் பணம் ஆகியவற்றை சில கைதிகள் வைத்திருந்தனர் என்றும் இவற்றைப் பறிமுதல் செய்த போது இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே கைதிகள் சிறைச்சாலையிலுள்ள பொருள்களுக்குத் தீ மூட்டினர் என்றும் சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் பீரிஸுக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒக். 7இல் சபையில் விவாதம்



கொழும்பு, செப். 27

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை விவாதம் எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவருக்கு எதிரான முதலாவது நம்பிக்கை இல்லாப் பிரேரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகார அமைச்ச ருக்கு எதிரான இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களாக ஜோன் அமரதுங்க, ரவி கருணா நாயக்க, லக்ஷ்மன் கிரியல்ல, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இப்பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்துவது என கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன், போரின் இறுதியில் இலங்கையில் இடம்பெற்றதாகக் (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைகிறார் ஜோன் அமரதுங்க

### ஐ.தே.கவுக்கு மற்றொரு இழப்பு



கொழும்பு, செப்.27

நியூயோர்க்கிலிருந்து திரும்பியதும் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜோன் அமரதுங்க, அரசுடன் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நியூயோர்க் சென்றுள்ள ஜோன் அமரதுங்கவின் வீட்டுக்குத் தற்போது விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க. இலங்கை வெளி விவகார அமைச்சின் விசேட அழைப்பின் பேரில் தாம் நியூயோர்க் செல்ல இருப்பதாக முன்னர் தெரிவித்தார். இதற்கு ஐ.தே.கட்சிக்குள் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதன் பின்னர், தாம் தனிப்பட்ட விஜயமொன்றை (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஆறு சிரேஷ்ட புலிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

### சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 27.

விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஆறு சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட உள்ளன என சட்ட மா அதிபர், மேல் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

குறித்த உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுத் தொடர்பில் பதிலளித்தபோதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராகவும் கொழும்பு மற்றும் வவுனியாமேல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விசாரணையின்றி சிறையில் வாடும் எம்மை பிணையில் செல்லவாவது அனுமதியுங்கள்

## தமிழ் அரசியல் கைதிகள் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கோரிக்கை

விசாரணைகளின்றி வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களை நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்லவாவது அனுமதிக்க வேண்டும் - என்று நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தமிழ் அரசியல் கைதிகள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் நடைபெற்ற காலங்களில் ஏற்பட்ட போர்நிறுத்தங்களின் போது அரசியல் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்திருந்தது. இதைக் கருத்திற் கொண்டு, நிரந்தர சமாதானம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவிடம் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக விசாரணைகளின்றி, வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களை நிபந்தனையின் அடிப்படையிலாவது பிணையில் வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போருக்குப் பிந்திய சூழ்நிலையில் இன்று மீள்குடியேற்றம், அபிவிருத்தி, நல்லிணக்கம் என பல்வேறு வகைகளில் நாட்டில் சமாதானத்தின் பேரில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அன்றைய இராணுவ, அரசியல் சூழ்நிலையில் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட தங்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்து தமது குடும்பங்களுடன் இணைத்து தங்களையும் இந்த நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றில் பங்காளர்காளக்குவதற்கு இந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அனுராதபுரம் சிறைச்சாலையைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகள் உருக்கமாக வேண்டியுள்ளனர்.



மூத்த சட்டத்தரணி சபா. ரவீந்திரன் எழுதிய மூன்றாவது நூலான பராமரிப்புச் சட்டம் என்னும் நூல் வெளியீட்டு விழா தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் நா. நடராஜசுந்தரத்தையும் ஏனைய விருந்தினர்களையும் வரவேற்பதை படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

# சுற்றுலா பஸ் பள்ளத்தில் பாய்ந்ததில் காயமுற்ற 23 பேர் வைத்தியசாலையில்

## நுவரெலியா சென்று திரும்பியபோது பரிதாபம்

கொழும்பு, செப். 27

நுவரெலியாவிற்குச் சுற்றுலா சென்று விட்டுத் திரும்பும் வழியில் பஸ் ஒன்று பள்ளத்தில் பாய்ந்ததில் 23 பேர் காயமடைந்துள்ளனார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்விபத்து சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சீத்தா எலிய பொல்கறவங்குவ என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது.

அம்பாந்தோட்டையில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் சுமார் 43 பயணிகள் தனியார் பஸ் ஒன்றில் நுவரெலியாவிற்கு சுற்றுலா வந்து விட்டு திரும்பும் வழியிலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 23 பேர் நுவரெலியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 3 பெண்களும் அடங் குவர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நெருக்கடிக்கு விரைவில் தீர்வு என்கிறது ஐ.தே.க

கொழும்பு, செப். 27

கட்சியின் நெருக்கடிகள் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் பொது இணக்கப்பாட்டிற்கு வரமுடியும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கட்சியின் அனைத்துத் தரப்பினருடனும், இது வரை விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணும் முகமாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரமதாச தரப்பினருக்கு இடையே மத்தியஸ்தராக கபீர் ஹசீம் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெருகல் ஆற்றில் மூழ்கி 8 வயதுச் சிறுமி மரணம்!

கொழும்பு, செப். 27

திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லையில் உள்ள வெருகல் ஆற்றில் நேற்றுக்காலை 11 மணியளவில் நீராடிய எட்டு வயதுச் சிறுமி ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைக் கிராமத்தைச் சேர்ந்த தி.மதுரஷிகா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது குடும்பத்தவர்கள் இவ்வாற்றில் வழமையாக நீராடுவது வழக்கம். அவ்வாறு நேற்று நீராடியபோதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. சிறுமி நீரோட்டத்தில் சிக்கியபோது கைகளை உயர்த்திக் காட்டி உதவி கோரினார் .

ஆனால் அங்கு அங்கு நின்றவர்கள் சிறுமியை முதலை ஒன்று தான் இழுத்துக்கொண்டு செல்கின்றது என்று தவறாக நினைத்து விட்டமையால் காப்பாற்றத் தவறிவிட்டனர்.

இந்த அனர்த்தத்தில் சிறுமியின் அண்ணனும் (வயது 10) சிக்கியிருந்தார். ஆனால் அவர் காப்பாற்றப்பட்டு விட்டார்.

# ஐ.தே. கட்சியால் மாத்திரமே நாட்டைப் பாதுகாக்க முடியும்

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 27

ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே இந்த நாட்டைப் பாதுகாக்க முடியும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசால் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

களனித் தேர்தல் தொகுதியில் கட்சி ஆதரவாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ரவி கருணாநாயக்க கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

சுயாதீனமாக இயங்க வேண்டுமாயின் கட்சி என்ற ஒன்று அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# இருதய நோயால் இலங்கையில் தினமும் 100 பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 27

இருதய நோய்களால் இலங்கையில் நாள் ஒன்றுக்கு 100 பேர் உயிரிழக்கின்றனர் என தொற்று நோய் அல்லாத சுகாதாரப் பிரிவின் நிபுணர் பாலித கருணாகரப் பெரும தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலும் இருதய நோய்களால் வருடாந்தம் பதினேழு மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக இருதய தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் வருடாந்தம் சம்பவிக்கும் மரணங்களில் 30 வீதமானவை இருதய நோய்களுடன் தொடர்புடையவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, புகைப்பிடித்தல் போன்ற காரணங்களினால் இருதய நோய் அதிகமாக ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் 80 வீதமான நோய்களிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

(சி)

# உயிரும், உடலும் துடிதுடிக்க தன் முன்னே மரணத்தை மண்டியிட வைத்தவன் திலீபன்

## அந்த ரத்தம் இன்னும் உறையவில்லை என்கிறார் வைகோ



சென்னை, செப். 27

ஈழத் தமிழரின் அஹிம்சை வழியிலான் விடுதலைப் போராட்டக் களத்திலே உண்ணாவிரதமிருந்து தன் முன்னே தியாகி திலீபன் மரணத்தை மண்டியிட வைத்தான். அந்த ரத்தம் இன்னும் உறையவில்லை.

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவுப் பீரங்கியும், தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ தெரிவித்துள்ளார்.

யாழ். நல்லூரில் ஈழத் தமிழர் விடுதலை கோரி 12 நாட்கள் ஒருதுளி நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை அர்ப்பணித்த தியாகி திலீபனின் 23 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதையொட்டி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சென்னையிலும் தீலிபனின் நினைவுதின நிகழ்வு நடைபெற்றுள்ளது. திலீபன் படத்திற்கு திருமாவளவன் எம்.பி. மலர் தூவி மரியாதை செய்தார். அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌனமாக அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் திருச்சியில் ஓவியர் புகழேந்தியின் போர் முகங்கள் என்ற ஓவியக் [illegible] காட்சி நடந்து வருகிறது. [illegible] ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

ஓவியர் புகழேந்தி உலகின் மிக சிறந்த ஓவியர் ஆவார். இந்த ஓவியங்கள் இலங்கை தமிழர்கள் இந்திய அரசின் உதவியோடு கொல்லப்பட்டதை உலகுக்கு உணர்த்தும் விதத்தில் அமைந்துள்ளன. இவற்றைப் பார்த்தால், ஈழத்தமிழர்கள் மிகவும் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த ஓவியங்கள் மூலம் தமிழ் ஈழ ஆதரவை ஏற்படுத்த வேண்டும்.

ஈழத் தமிழரின் விடுதலைக்காக திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். அவரின் [illegible] திலே தனது உயிர் துடிதுடிக்க தன் முன்னே திலீபன் மரணத்தை மண்டியிட வைத்தான். விடுதலைப் புலிகளின் எண்ணம் வீண் போவது இல்லை. தமிழ் ஈழம் அமைந்தே தீரும்.

தற்போது இலங்கை அரசு, தமிழர்களே இல்லாத நிலையை ஏற்படுத்த முயன்று வருகிறது. இலங்கையில் தமிழர் பகுதியில் புத்தர் சிலையை வைத்து வருகின்றனர். இதன்மூலம் ஈழத்தமிழர்கள் வாழ்ந்த இடத்தை அழிக்கும் முயற்சியில் மஹிந்த ராஜபக்ஷ அரசு ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளை அழித்து விட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மட்டும் நீட்டிப்பது ஏன்?

இதுகுறித்தான வழக்கில் டில்லி உயர் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் நான் வாதாடினேன். இந்தத் தீர்ப்பாயத்தில் மத்திய அரசு மூலம் தமிழக அரசு சார்பில் அரசிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் விடுதலைப் புலிகள் தமிழ் ஈழத்துடன் தமிழ்நாடும் ஒரு பகுதி என்று கூறியுள்ளனர். எனவே தமிழ் ஈழம் அமைந்தால் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கூறியுள்ளார்கள். இது பச்சைச் துரோகம்.

விடுதலைப்புலிகள் எந்த ஒரு தீர்மானத்திலும் எந்த ஒரு பகுதியிலும் தமிழ் ஈழத்தின் ஒரு பகுதி தமிழ்நாடு என குறிப்பிடவில்லை.

இலங்கைத் தமிழர்கள் அனைவருமே விடுதலைப் புலிகள் என நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் எங்கும் செல்ல முடியவில்லை. இதனால் ஈழத்தமிழர்கள் உலக அனாதையாகி விட்டார்கள்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கினால், ஈழத் தமிழர்கள் இலங்கையில் நடந்த போர் குற்றம் குறித்து உலகுக்கு வெளிப்படுத்துவார்கள் என்பதால் தடை நீடிக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அகதிகள் நாடு திரும்ப ஏன் தயங்குகிறார்கள்?

# நல்லிணக்க ஆணைக்குழு தமிழ்நாடு செல்லவேண்டும்

### வர்த்தக சம்மேளன முன்னாள் தலைவர் சாட்சியம்

கொழும்பு, செப். 27

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் இலங்கை வர மறுப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து அவர்களின் தயக்கத்தை கேட்டறிய கற்றுக்கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு தமிழகத்துக்கும் செல்லவேண்டும். - இப்படி இலங்கை வர்த்தக சம்மேள னத்தின் முன்னாள் தலைவர் சந் திரா ஜெயரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே சந்திரா ஜெயரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லிணக்கம் எனும்போது நாம் கடந்தகாலங்களில் இழந்த சந்தர்ப்பங்களைச் சரிபார்க்க வேண்டும்; பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காணவேண்டும்; மக்களைத் தலைவர்களே ஒன்றிணைக்க வேண்டும். இது தொடர்பில் பொதுவான பொறிமுறை ஒன்று அவசியமாகும்.

பல சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நாங்கள் இழந்துள்ளோம். எனவே, கற்றுக்கொண்ட பாடங்களும், அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் கருத்துகளைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் கூட்டுப் பொறுப்பை ஏற்று நாட்டை மறுசீரமைக்க முன்வர வேண்டும். வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் கஷ்டப் பிரதேசங்களை அபிவிருத்திச் செய்ய முன்வரவேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில தேசிய சொத்துகள் சமமான முறையில் பகிரப் பட வேண்டும்.

எதிர்கால அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் சர்வதேச உறவுகள் மிகவும் முக்கியமானவையாகும். இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இந்தியாவுடனான தொடர்புகளும் முக்கியமானதாகும். சர்வதேச வர்த்தக உடன் படிக்கைகளுக்கு செல்லும்போது பல துறைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது அவசியம் என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

இதனைத்தவிர இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு காணி, வீடு மற்றும் ஏனைய வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(சி)

## நோயாளியுடன் வந்த அம்புலன்ஸ் மின்கம்பத்துடன் மோதி விபத்து

### வைத்தியசாலை சிற்றூழியர் காயம்

யாழ்ப்பாணம், செப்.27

மந்திகை வைத்தியசாலையில் இருந்து நோயாளியை ஏற்றிக் கொண்டு வந்த அம்புலன்ஸ் வண்டி மின்கம்பத்துடன் மோ தி விபத்துக்குள்ளாகியது.

இச்சம்பவம் நேற்று மாலை கோப்பாய் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

மருதங்கேணி வைத்தியசாலைக்கு சொந்தமான இந்த அம்புலன்ஸ் வண்டி,மந்திகை வைத்தியசாலையில் நோயாளியொருவரை ஏற்றிக்கொண்டு யாழ். போதனாவைத்தியசாலைக்கு வந்து கொண்டிருந்த வேளை கோப்பாய் பகுதியில் மின்கம்பத்துடன் மோதியதில் மந்திகை வைத்தியசாலை சிற்றூழியரான அல்வாய் வடக்கைச் சேர்ந்த எஸ்.பிரணவன் (வயது-35) என்பவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-16-78)

## கொக்கிளாய் கிராம மக்கள் 26 வருடங்களின் பின் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, செப்.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கிராம சேவையாளர் பிரிவில் இருந்து 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் 26 வருடங்களின் பின் மீள்குடியமர்த்தப்படவிருக்கின்றனர்.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் இத்தகவலைத் தெரிவித்தார். இந்த மீள்குடியமர்வு தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

கொக்கிளாய் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர 34 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

அந்தக் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் 34 குடும்பங்கள் மீளக்குடியமர பதி வுகளை மேற்கொண்டன.

தற்சமயம் வவுனியா மெனிக் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள அந்தக்குடும்பங்கள் இன்று முல்லைத்தீவிற்கு அழைத்து வரப் படவிருக்கின்றன.

அவர்கள் தற்காலிகமாக பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு ,தற் காலிக குடிசைகளில் குடியமர்த்தப்படுவர்.

இதேவேளை, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் எதிர் வரும் 29 ஆம் திகதி மக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீளக்குடியமர்வதற்கு என மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 250 குடும்பங்களைச் சேர்ந்த 900 அங்கத்தவர்கள் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். மக்கள் தமது பகுதிகளில் மீளக் குடியமர்வதற்கான போக்குவரத்து சேவையை ஐ.ஓ. எம் நிறுவனம் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி வருகிறது- என்றார்.

(ஐ-க-14)

## அன்று பொன்சேகாவை புகழ்ந்தோர் இன்று மௌனம் சாதிப்பது வெட்கக்கேடு

### களனிக் கூட்டத்தில் ரணில் சாட்டை

கொழும்பு, செப்.27

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் அவரைப்பற்றி உயர் வாகப்பேசிய சிங்கள அமைப்புகள், சட்டத் தரணிகளின் அமைப்புகள், பத்திரிகைகள், தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் இன்று அவருக்கேற்பட்டுள்ள நிலை குறித்துமௌன மாகியிருப்பது குறித்து நாம் ஒரே இனம் என்ற ரீதியில் வெட்கப்படவேண்டும்.

- இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியை மீளக் கட்டியெழுப்பும் வகையில் களனியில் கட்சிக் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

'ஹைகோப்' நிறுவனத்தில் தனுன திலகரத்ன என்றொருவர் இல்லை என இராணுவ நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சாட்சியங்களில் நிரூபணமானது. இருந்தும் இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருட



சிறைத்தண்டனை வழங்கியது. இந்த இராணுவ நீதிமன்ற நீதிபதிகள் குழு சட்டவிரோதமாகத் தீர்ப்பளித்துள்ளது. அவர்கள் நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறியுள்ளனர். அவர்களை சிறப்புரிமைக் குழுவுக்கு முன்னால் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும். எனக்கும் சட்டங்கள் தெரியும்.

மகாநாயக்கர்கள் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதப்போகிறார்கள் எனச் செய்தி வெளிவந்திருந்தது. இது நல்ல விடயம். அன்று யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதற்காக என்னைத் துரோகி என்றனர். யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்த சரத் பொன்சேகாவை மாபெரும் வீரர் என வர்ணித்தனர். இன்று சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து மாதுறுவாவே சோபித தேர ரும், ஜே.வி.பி யும், துரோகி யான நானும் மாத்திரமே குரல் எழுப்புகின்றோம். அன்று வர்ணித்தவர்கள் இன்று எங்கே?

அன்று ஆனந்தாக் கல்லூரி கோத்தபாய, சரத் பொன்சேகா போன்றோரை அழைத்துப் பாராட்டி விருது வழங்கியது. அதுமட்டுமன்றி, ஆனந்தாக் கல்லூரியின் 'தங்க மகன்கள்' என்றும் இவர்களைப் புகழ்ந்துரைத்தனர். சரத் பொன்சேகாவை 'ஆனந்தாவின் தங்க மகன்' என்றவர்கள் இன்று அவருக்கு நேர்ந்துள்ள நிலையைக் கண்டு மௌனம் சாதிப்பதையிட்டு வெட்கப்படவேண்டும்.

ஐ.தே.கட்சி இந்த அநீதியைப் பார்த்துக்கொண்டிருக்காது. சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து ஐ.தே.க. தொடர்ந்து போராடும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## மயிலணி சைவ மகா வித்தி. நூற்றாண்டு விழா நேற்று



வலிவடக்கு, செப்.27

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நேற்றுக் காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் நா. சிவநேசன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக சுன்னாகம் பூதராஜர் கோயிலில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. ஆலயத்தில் இருந்து விருந்தினர்கள் பாடசாலை பாண்ட் வாத்திய அணியுடன் ஊர்வலமாக வித்தியாலய மண்டபத்துக்கு அழைத்து வரப் பட்டார்கள்.


பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன், வலி காமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர சிவம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை தொடக்கி வைத்தனர்.

நூற்றாண்டு மலரினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைக்க ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அலுவலர் குலேந்திரா பெற்றுக்கொண்டார். மலர் அறிமுக உரையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம் நிகழ்த்த மலர் ஆய்வினை அகவிழ் பிரதம ஆசிரியர் எஸ். மதுசூதன் நிகழ்த்தினார்.

நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி க. பரமசுவாமி நிகழ்த்தினார். மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

(உ -86)

## இந்திய அரசினால் மாநகரசபைக்கு வழங்கப்பட்ட பஸ்கள் அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடும்




பஸ் சேவை தொடர்பாக மாநகர சபை வெளியிட்டுள்ள வரைபடம் இது.

யாழ்ப்பாணம், செப்.27

யாழ்.மாநகர சபையின் பஸ் சேவைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை இந்திய நட்புறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தினால் யாழ். மாநகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பஸ் வண்டிகள் போக்குவரத்து வாகன வசதிகளற்ற யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்கள் ஊடாக சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

இச் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய வார நாள்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பின்வரும் பாதைகள் ஊடாக இடம்பெற உள்ளது.

இரு வழியாக இச் சேவை இடம்பெறவுள்ளது.

முதற்பாதை ஊடாக பயணிக்கும் பஸ் மாம்பழம் சந்தியிலிருந்து ஆரம்பித்து கண்டி வீதி, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் வீதி, கடற் கரை வீதி, மூன் றாம் குறுக்குத்தெரு, பிரதான வீதி, இரண்டாம் குறுக்குத் தெரு ஆஸ்பத்திரி வீதி, சிவன்பண்ணை வீதி, காரைநகர் வீதி, நாவலர் வீதி ஆகியவற்றின் ஊடாக பயணித்து மீண்டும் மாம்பழம் சந்தியை வந்தடையும்.

இரண்டாம் பாதை ஊடாகப் பயணிக்கும் பஸ்கள் மாம்பழம் சந்தியில் இருந்து ஆரம்பித்து கனகரத்தனம் வீதி, ஆடியபாதம் வீதி, சட்டநாதர் வீதி, இராமநாதன் வீதி, சிவப்பிரகாசம் வீதி, காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி என்பவற்றின் ஊடாக பயணித்து கனகரத்தினம் வீதி வழியாக மாம்பழம் சந்தியை வந்தடையும்.

(ஐ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறை, ஆழியவளைப் பிரதேசங்களில் மேலும் 1,500 பேர் நாளை மீள்குடியமர்வு

வடமராட்சி கிழக்கு உடுத்துறை, ஆழியவளை பிரதேசங்களைச் சேர்ந்த - உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள ஆயிரத்து 500 பேர் நாளை மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ரி. திருலிங்கநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராம உத்தியோத்தர் பிரிவுகளில் இதுவரை 16 பிரிவுகளில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தோர் உள்ளடங்குவார்கள்.

தற்போது உடுத்துறை, ஆழியவளை பகுதிகளைச் சேர்ந்த உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள 1, 500 பேர் நாளை அவர்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மீள்குடியமர்த்தப்படவுள்ள இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (ஐ-9)


**வேளாதோப்பு அம்மன் ஆலய கும்பாபிஷேக நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் (25.09.2010)**

1வது பரிசிலுக்குரிய இலக்கம் 2606
2வது பரிசிலுக்குரிய இலக்கம் 596
3வது பரிசிலுக்குரிய இலக்கம் 563
4வது பரிசிலுக்குரிய இலக்கம் 1760
5வது பரிசிலுக்குரிய இலக்கம் 2908

வேளாதோப்பு அம்மன் ஆலயம் (சி-571392) பரிபாலனசபை.


## அல்லாரையில் இடிமின்னல் தாக்கியது

தென்மராட்சியில் நேற்று பெய்த மழையின் போது அல்வாரைவடக்கில் உள்ள வீடொன்றின் மீது இடிமின்னல் தாக்கியதில் அங்கிருந்த இளம் யுவதியொருவர் அதிர்ச்சிக்குள்ளாகி, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுபிற்பகல் 2.45, மணியளவில் தென்மராட்சியில் இடி முழக்கத்துடன் கூடிய மழை பெய்துகொண்டிருந்த போது. திடீரென அந்த வீட்டின் மீது இடி மின்னல் தாக்கியது. அப்போது அங்கிருந்த றிப்கவிச் வெடித்துச்சிதறியதாகவும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் உணவருந்திக்கொண்டிருந்ததாகவும் அவர்கள் மூவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பிக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கௌசிகா (வயது 17) என்ற யுவதி அதிர்ச்சிக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9-131)


**விளையும் புலமையை முளையிலே வாழ்த்துவோம்**



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்று தான் கற்ற உடுவில் மகளிர் கல்லூரிக்கும் உறவுகளான எமக்கும் பெருமை சேர்த்துத் தந்த செல்வி பாலேந்திரன் தாரணி அவர்களை மனதார வாழ்த்துவதோடு அவர் கல்வித்துறையில் தொடர்ந்து சாதனைகள் புரிய ஆசிகள் கூறுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமாமார்,
உடுப்பிட்டி. அத்தை, அன்ரிமார், சித்தப்பாமார். (103873)



**GENRAL ENGLISH LEADING TO SPOKEN & BUSINESS ENGLISH COMMUNICATION & PRESENTATION**

**ஆரம்ப நாள் தெளிவுரைகள்**

கணிப்பீடு பூரண விளக்கங்களுடன் கூடிய கலந்துரையாடல், மாணவ மாணவிகளுக்கான தகுதிகான் பரீட்சைகள் (PLACEMENT TEST)

மாணவியரின் ஆங்கில அறிவு தனிப்பட்டமுறையில் பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான பிரிவுக்குள் உள்வாங்கப்படுவர்

**தெளிவுரைகள் பின்வரும் இடங்களில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் இடம்பெறும்.**

**UNI ICT CAMPUS MANIPAY**

1) வெள்ளி (01.10.2010) → 9 AM --- 12 PM வரை
2) சனி (02.10.2010) → 3 PM --- 6 PM வரை
3) ஞாயிறு (03.10.2010) → 3 PM --- 6 PM வரை

**UNI ICT CAMPUS KANTHARMADAM, JAFFNA**

1) வெள்ளி (01.10.2010) → 2 PM --- 5.30 PM
2) சனி (02.10.2010) → 9 AM --- 12 PM
3) ஞாயிறு (03.10.2010) → 10 AM --- 1 PM

→ பதிவுகளை மேற்கொண்டவர்கள் தங்களின் வசதியான நேரத்திற்கு பதிவினை மேற்கொண்ட இடத்திற்கு வருகை தரவும்.
→ இதுவரை பதிவு மேற்கொள்ளாதவர்கள் இந்த இறுதி வாரத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.
→ தூரப் பிரதேசங்களிற்குச் செல்லும் யாழ்.பல்கலைக்கழக, ஆசிரிய கலாசாலை, உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியரை கந்தர்மட வளாகத்தில் சந்திக்கலாம்.

(ச-571391) மேலதிக விபரங்களுக்கு: 0776110802



**யா/ ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்**

**சித்திபெற்றோர் விவரம்**

1. மகேந்திரம் ஐந்துரன் - 162 புள்ளிகள்
2. உதயகுமார் கிருஷாந் - 150 புள்ளிகள்
3. புஸ்பராஜா சாருஜன் - 150 புள்ளிகள்
4. சிறீரங்கநாதன் கம்சியா - 150 புள்ளிகள்
5. கண்ணன் டெபோறா - 144 புள்ளிகள்

**நூறு புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெற்றவர்கள் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 01. யோ.தட்ஷாயினி | - 141 | 14. க.நிஹர்ஜன் | - 115 |
| 02. த.திலக்ஷனா | - 138 | 15. ஜெ.சாலுஜா | - 112 |
| 03. ப.பிரதீபன் | - 138 | 16. ம.சகானா | - 112 |
| 04. வி.ரிஷாந்தி | - 135 | 17. ந.றகுப்பிரியா | - 110 |
| 05. வ.டக்சிகா | - 134 | 18. சி.யாதவன் | - 105 |
| 06. சி.விதுர்ஷிகா | - 133 | 19. ஜெ.யதுர்ஷன் | - 103 |
| 07. அ.டிசாந் | - 132 | 20. உ.லக்ஷனா | - 102 |
| 08. ச.நிஷாளினி | - 129 | 21. ச.தர்மிகா | - 102 |
| 09. ஜெ.ரெலக்ஷன் | - 127 | | |
| 10. க.கானப்பிரியா | - 124 | | |
| 11. செ.விதுஷா | - 121 | | |
| 12. ம.அபிஷேக் | - 116 | | |
| 13. கு.விதுர்சிகன் | - 115 | | |

மேற்படி சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களையும் அதற்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை, சுதுமலை, சண்டிலிப்பாய்.


# சாமஸ்ரீ விருது விழா இரத்தினபுரியில்

2010 சாமஸ்ரீ - தேசிய பாராட்டு விழா வெகு கோலாகலமாக நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் இடம்பெற்றது.

அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ டி.ஜெ.செனிவிரட்ண பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சாமஸ்ரீ விருதுகளையும் - சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இதன் பயனாக, யாழ்.பாஷையூரைச் சேர்ந்த சமய - சமூக சேவையாளன் இம்மானுவேல் ஆர்னோல்ட் தேசமான்ய விருதும் - சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 50 வருட காலத்திற்கு மேலாக வட பகுதியின் விவசாயிகளின் வளர்ச்சி - அபிவிருத்திக்காகவும், சமய சமூக கலை - கலாசார மற்றும் பொருளாதார விருத்திக்காக சேவையாற்றிய சி.பொ.வ.மா.க.முதலியாருக்கு (ச.நீ) சாமஸ்ரீ தேச கீர்த்தி விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ-302)


**கண்ணீர் அஞ்சலி**



**துரைசிங்கம் விஜயமனோகர்**

*இவன் எங்கள் அணியில் மூத்தவன்*
*தேவை அறிந்து உதவுபவன்*
*தனிமையில் இனிமை காண்பதும்*
*இவன் இயல்பாகும்.*

*எமது நண்பன் துரைசிங்கம் விஜயமனோகர் 2001 'பாலம்' இதழ் முகாமைத்துவ கற்கைகள் வணிகம் அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நண்பர்கள் கழகம்
*96/97 முகாமைத்துவ கற்கைகள் வர்த்தகபீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்*
*(103877)*



**மரண அறிவித்தல்**

**திருமதி சின்னத்துரை பாக்கியம்**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பாக்கியம் அவர்கள் (25.09.2010) அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, அன்னம்மா, இரத்தினம், தங்கம்மா மற்றும் இராசதுரை (நீர்வேலி), அமரர் நடராசா மற்றும் பூமணி (நீர்வேலி) ஆகியோரின் சகோதரியும் வரதராசா (சுவிஸ்), ருக்மணிதேவி (சுவிஸ்), சோதிமலர் (நீர்வேலி), குமுதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலா (சுவிஸ்), இராஜசிவம் (சுவிஸ்), சிவகுமார் (பிரதம சிறாப்பர், யாழ்ப்பாண மாநகரசபை), சண்முகதாஸ் (சுவிஸ்), லோகநாயகி, மகேஸ்வரி, லோகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ராம்ஜி, சரண்ஜி, நிவேதா (சுவிஸ்), அபிசா, அபிமுகன் (சுவிஸ்), விநோத்குமார் (லண்டன்), துசானிக்கா, சிநேகா (சுவிஸ்), முருகதாசன், ஜெயரூபா, சுகரூபா, வத்சலா, கோகுலதாசன், அருட்குமரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2010) திங்கட்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாசிவன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0778034061, 0213734699 (103879) சு.சிவகுமார் *(மருமகன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9833 தொலைநகல்.: 222 9944

## தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய செயற்பாடுகள்

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தின் அவசியம் குறித்து இன்று பலரும் வலியுறுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தாம் விடுக்கும் அறிக்கை கள், கருத்துரைகள் யாவற்றிலும் இதுபற்றி வலியுறுத் தாமல் விடுவதில்லை.

போர்செயற்பாடுகள் கொடூர கட்டத்தை அடைந்திருந்தவேளையில், பலவீன தரப்பினர்களான பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் வயோதிபர்களான பொதுமக்கள் கொத்துக் கொத்தாக குடும்பம் குடும்பமாக குண்டுவீசிக் கொல்லப்பட்டமை ஒருபுறமிருக்க-

விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்ட கணவன்மார், சுற்றிவளைக்கப்பட்ட இளைஞர்கள், அண்ணன், தம்பி, தங்கைமார் எல்லாம் என்ன ஆனார்கள் என்றே தெரியாமல் இருப்பதாக அப்பகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் கதை கதையாக கண்ணீருடன் விவரித்திருப்பதை பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம்.

போர் இரண்டு நாடுகளுக்கிடையில் நடைபெறவில்லை, அரசின் படைகளுக்கும் அரசை எதிர்த்து நின்ற ஒரு பிரிவினருக்கும் இடையிலேயே அது நடைபெற்றது. ஆனால் அப்பிரதேசங்களில் இருந்த வீடுகள் மற்றும் கட்டடங்கள் எல்லாம் தரைமட்டமாகி சுட்டெரித்த சுடுகாடாகக் கிடப்பதைப் பார்க்கையில் இரண்டு நாடுகளின் படைகளுக்கிடையில் இடம்பெற்ற மோதலின் விளைவு போன்றே காட்சியளிக்கின்றன. போரின் போது அங்கிருந்து வெளியேறி காவல் முகாம்களிலும், இடைத்தங்கல் நிலையங்களிலும் தஞ்சமடைந்திருந்த மக்கள் இப்பொழுதுதான் தாங்கள் பட்ட துன்பங்களை, துயரங்களை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவ்வாறு தொலைந்துபோன பிரதேசங்களை, அங்கிருந்த கட்டடங்களை, வீடுகளை,கோயில் குளங்களை எல்லாம் மீண்டும் கட்டியெழுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. ஊரை விட்டு உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடிய மக்கள் மெதுமெதுவாகத் திரும்பிக் கொண்டிருக்கிறார் கள். பாரம்பரியமாக ஊரோடும் உறவுகளோடும், வாழ்ந்த பகுதிகளில் தற்காலிக குடிசைகளிலும், கூடாரங்களிலும் அவர்களின் புதுவாழ்க்கை ஆரம்பித் திருக்கிறது.

அவர்கள் அனுபவித்த துன்ப,துயரங்களுக்குக் காலம்தான் மருந்தாக அமைய முடியும். நிரந்தரமான வீடுகளும், குடியிருப்புக்களும், தொழில் வாய்ப்புக்களும் ஏனைய வசதிகளும் உருவாகி வாழ்க்கை நிலைமை படிப்படியாகச் சீரடையும் போது வெகுகாலம் முடிந்துவிடும். ஒரு வேளை முன்பிருந்ததைவிடவும் வாழ்வாதாரம் உயரவும் செய்யலாம்.

ஆனால், இவையெல்லாம் தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வந்துவிடுமா என்பது முக்கியமான ஒருகேள்வியாக நம்முன் இப்பொழுது எழுந்து நிற்கின்றது.

போர் முடிந்தமைக்கான காரணத்தை நாம் மீண்டும் மீண்டும் இங்கு விலாவாரியா எடுத்து விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

அது இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்ல வெளிநாட்டவர்களுக்கும் தெரியும். அதனால்தான் அவர்கள் தேசிய நல்லிணக்கம் தேவை, அதற்கான முயற்சிகளில் அரசு உடனடியாக இறங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டுவிட்ட அனைத்துப் பிரசேங்களும் முன்னுரிமையுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமே. அதைவிட போர் மூளக் காரணமாக இருந்த அடிப்படை அம்சங்களைக் களைய அரசு முற்பட வேண்டும்.

அதனையே 58 வருடங்களுக்கும் மேலாக உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வெளிநாட்டு அரசுகளும் அதனையே வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக வலியுறுத்தி வருகின்றன.

எனவே தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கும் முன் முயற்சியாக தமிழர் தரப்புடன் அரசு சுமுகமான பேச்சுக்களை ஆரம்பிப்பது அவசியம் - மட்டுமல்ல அதுவே முன் முயற்சியாகவும் இருக்க முடியும்.

தமிழர் தரப்புக்களுடன் அரசு வெளிப்படையாகவும் திறந்த மனதுடனும் பேசும் அதேவேளை, பெரும்பான்மை மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ள சிறுபான்மை மக்களுக்கெதிரான துவேச மூலத்தையும் அதுகிளை பரப்பியுள்ள நச்சுத் தன்மைகளையும் நீக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதேவிதமாக சிறுபான்மை யோரும் பெரும்பான்மை மக்களோடு சினேக உறவுகளை வளர்ப்பதற்கான மார்க்கங்களைக் கடைப்பிடிப்பது அவசியம் என்பது ஒதுக்கி விலகக் கூடியதல்ல.

அண்மைக்காலங்களில் விளையாட்டு மற்றும் கலாசாரத் துறைகளில் சிறு சிறு முயற்சிகள் நடைபெறுவதைக் காண்கின்றோம்.

குறிப்பாக ஊவாமாகாண சபை கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திக்கு உதவிபுரிய முன்வந்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி மகிழ்ச்சி தருவதாகும். இதேமாதிரி முயற்சிகள் இருதரப்பிலும் வளரும் போது தேசிய நல்லிணக்கத்துக்கு உதவுவதாக அவை அமையும். பலவந்தமாக ஒருவர் மற்றவர் மீது எதனைத் திணிக்க முயன்றாலும் அது பகைமைக்கு பலம் சேர்ப்பதாகவே முடியும். இதனைப் பெரும் பான்மையினர் எப்போது புரிந்து செயற்படுகிறார்களோ அவ் வேளை தான் நல்லிணக்கம் எங்கள் தேசத்தை எட்டிப் பார்க்கும்!

# பொன்சேகா இப்போது ஒரு எம்.பி.அல்லர்; இனிமேல் அவர் ஒரு சிறைக்கைதியே!

நேற்று 26.09.2010 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.

கடந்த வியாழக்கிழமை மதியம் போல் அமைச்சர் மகிந்த சமரசிங்க இராணுவத்தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியாவுக்கு டெலிபோன் செய்து சரத்பொன்சேகா எம்.பி.ஏன் நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரப்படவில்லையென்று வினவினார்.

அது இராணுவ சட்டத்துக்கு மாறான செயற்பாடு, எனவே சட்டப்படி அது சாத்தியமில்லாமல் இருந்தது என்று இராணுவத் தளபதி தெரிவித்திருந்தார். இராணுவ நீதிமன்றச் சட்டங்களின் கீழ் தளபதி நடந்து கொண்டார் என்று இராணுவத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

கடந்த வியாழக்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நாடாளுமன்றத்தில் பேசும் போது எவராலும் ஒருநாடாளுமன்ற உறுப்பினரின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மீறிச் செயற்பட முடியாது என்று வாதித்தார்.

ஐ.தே.க. குருநாகல் உறுப்பினர் கிளப்பியிருந்த சிறப்புரிமைப் பிரச்சினையொன்றின் மீது அவர் பேசினார். பொன்சேகா மீதான தீர்ப்பு பிரகடனப்படுத்தப்படும்வரை அவர் நாடாளுமன்றத்தில் கலந்து கொள்ள முடியும் என்று ரணில் வாதிட்டார். ஜே.வி.பியின் அனுரா குமார திஸாநாயக்காவும் இப்பிரச்சினை தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

இந்த விடயத்தில் ராணுவத் தளபதியா, ரணில் விக்கிரமசிங்காவா தவறு விடுகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க நாடாளுமன்றத்துக்கு பொன்சேகா வரமுடியாமல் போனமையானது ஒரு விடயத்தை தெளிவாக உணர்த்தியுள்ளது. அவர் இப்போது நாடாளுமன்றத்தில் இல்லை, அரசாங்கத்தைப் பொறுத்தவரை சிறைத் தண்டனை அனுபவிக்கவிருக்கின்ற ஒரு கைதியாவார். அவர் வருங்காலத்தில் அவர் நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமைக்காக உலகிலேயே சிறந்த ராணுவத்தளபதியென்று போற்றப்பட்டவரான பொன்சேகா, பட்டம், பதவி, பதக்கங்களை இழந்து, வீர விருதுகள், ஓய்வூதியம் யாவற்றையும் இழந்து கைதியாக நிற்கின்றார். அரசியலில் ஈடுபட்ட அவர் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் தோல்வியுற்று நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டார்.

பொன்சேகா இரண்டரை ஆண்டு காலம் சாதாரண சிறைத் தண்டனையா அல்லது கடுங்காவல் தண்டனையா அனுபவிப்பார் என்பதை அடுத்த வாரம் ஜனாதிபதி ராஜபக்ஷ தீர்மானிக்கவிருக்கிறார். ராணுவ சட்டங்களின்படி ஜனாதிபதியே இதில் உறுதிப்படுத்தும் அதிகாரியாவார். வேறு சில வழக்குகளிலும் சிவில் நீதிமன்றங்களில் அவருக்குச் சிறைத் தண்டனைகள் விதிக்கப்படுமானால் அவைகளையும் அவர் அனுபவித்தாக வேண்டும்.

பொன்சேகா விடயத்தில் அமைச்சர் சமரசிங்க ராணுவத் தளபதியிடம் கேள்வி எழுப்பியமை ஒன்றும் பெரிய விடயமல்ல. அடுத்தவாரம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றங்களின் யூனியன் மனித உரிமைக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதில் ஈடுபட்டுள்ளார்.ஒக்ரோபர் 2 ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதிவரை இக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. ஐ.தே.கட்சி தெரிவித்துள்ள முறைப்பாடுகளையடுத்து அவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் இரண்டாவது தடவையாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அங்கு வெளிப்படுத்தும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. முதலில் கென்யா, நைரோபியில் நடந்த 56வது கமன்வெல்த் நாடாளுமன்றங்களின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் சமரசிங்க ஆவணங்கள் சகிதம் அனுப்பி வைக்கப் பட்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்த சரத்பொன்சேகா எம்.பி.யால் போக முடியவில்லை. இங்குள்ள கமன்வெல்த் நாடாளுமன்றக் குழு அவர் செல்வதை அங்கீகரிக்கவில்லை. இலங்கைக்

## இராணுவத் தரப்பின் நிலைப்பாடு இதுவாம்

குழுவில் ஜே.வி.பி. உறுப்பினர் விஜித்த ஹேரத் சென்றார். அவர் அங்கு பிரச்சினைகளைக் கிளப்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் முறையான அமர்வுகளில் பிரச் சினைகள் எதுவும் பெரிதாகக் கிளப்பப்படவில்லை. சிங்களத்தில் போன்று அவர் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் திறமை குறைந்தவராய் இருப்பதால் அமர்வுகளுக்கு வந்த பிரதிநிதிகளுக்கு அச்சடிக்கப்பட்ட பிரசுரங்களையே அதிகமாக வழங்கி னார்.

ஆனால் ஐ.தே.கவின் சார்பில் செயலாளர் அன்டர்ஸ் பி.ஜோன்சனுக்கு டொக்டர் ஜயவர்த்தன அனுப்பியுள்ள ஏழு பக்கங்களைக் கொண்ட மகஜர் ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகா கொழும்பில் தமது அலுவலகத்தில் இருந்த போது இலங்கை இராணுவத்தால் சட்ட விரோதமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் காவலில் வைக்கப்பட்டார். அவர் பெரும்பாலும் பலவந்தமாகவே கைது செய்யப்பட்டார். இராணுவத்தின் துரித சேவையிலிருந்து விலகியிருந்த நிலையிலும் இதுவரை காலமும் இராணுவக் காவலில் அவரது படை உரிமைகளுக்கு மாறாக காவ லில் வைக்கப்பட்டுள்ளார்.

### மேர்வின் சில்வா தெரிவித்துள்ள குற்றச்சாட்டு

நாடாளுமன்றத்தில் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் பாரதூரமான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்கவின் கொலையுடன் சரத்பொன்சேகாவுக்கு தொடர்புண்டு. அதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கின்றனவென்று அவர் கூறினார். அவர் கூறியதாவது:-

நெடுங்காலமாக லசந்த, ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியவர்களுக்கு எதிராக எழுதி வந்திருக்கிறார் என்பது எமக்குத் தெரியும். ஆனால் அவருக்கு எதுவித இடைஞ்சலும் ஏற்படவில்லை. சாவதற்கு முன்னர் ஜனாதிபதியையும் அவர் சந்தித்து இருக்கிறார். ஆனால் சரத்பொன்சேகாவைப் பற்றி அவர் எழுதத் தொடங்கியதன் பின்னரே கொல்லப்பட்டார்.

இந்தக் கொலையில் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருந்தமைக்கான ஆதாரம் என்னிடம் இருக்கின்றது. அவரைக் கொல்வதல்ல அவர்களின் நோக்கம். ஆனால் தாக்குதல் காரணமாக அவர் இறந்தார்.

உபாலி தென்னக்கோன், கெயத் நொயஹர் போன்ற பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களிலும் இவருக்குத் தொடர்பு உண்டு.

ஐ.தே.கட்சியினரை நான் கேட்டுக் கொள்கிறேன் கொலைகாரர் களுக்கு பாதுகாப்பாகச் செயல்படா தீர்கள் என்று. இந்த விடயங்கள் குறித்து விசாரணைகளை நடத்துமாறு அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றேன் என்றார் அவர்.

பிரதி அமைச்சர் சில்வாவின் கூற்றுக்களைப் பெரிதாக எடுத்துக் கொள்வதற்கில்லைதான். ஆனால் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் அவருக்குள்ள தொடர்புகளை நிரூபிப்பது குறித்து தம்மிடம் ஆதாரம் இருப்பதாக அவர் கூறியிருப்பது குற்றப்புலன் ஆய்வுத் திணைக்களத்துக்குப் பெறுமதியான தகவல் கிடைத்திருப்பதாகக் கருதமுடியும்.

பலமாதங்களாக லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக புலன் விசாரணையாளர்கள் விசாரணைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். ஊடக வியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் ஆராய்ந்து வருகிறார்கள். பல ராணுவத்தினர் கைது செய்யப் பட்டும், காவலில் வைக்கப்பட்டும் உள்ளனர்.

தமிழில்: கோகுலன்

**நாளை**

| | | |
|---|---|---|
| புரட்டாதி 12 | | 28.09.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | பஞ்சமி மு.இ.07.26 வரை |
| நட்சத்திரம் | : | கார்த்திகை பி.ப. 05.49 வரை |
| சுபநேரம் | : | 10.32-12.02 வரை |
| ராகுகாலம் | : | 03.02-04.32 வரை |

# குறுகியகால நன்மைக்காக மனித உரிமை மீறப்படுகிறது

## ஐ.நாவில் ஒபாமாவின் கிண்டல்

நியூயோர்க், செப்.27

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்தவாரம் ஐ.நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்திய போது இலங்கையின் இன்றைய அரசியல் போக்கு குறித்து இலேசாக இடித்துக் கூறியதாக பார்வையாளர்கள் கருதுகிறார்கள், ஒபாமா பின்வருமாறு சபையில் பேசியிருந்தார்.

பொருளாதார சங்கடங்கள் ஏற்படும் போது மனித உரிமைகள் தொடர்பாகவும் கவலைகள் அதிகரிக்கின்றன.

கடந்தகாலங்களில் போலவே இன்றும் கூட பொருளாதார சீரழிவுகள் தோன்றும் போது சிலர் குறுகிய கால உறுதிப்பாட்டுக்காக அல்லது அதன் திறத்தை சீரழிப்பதன் மூலம் பொருளாதாரம் வளரும் என்ற தவறான எண்ணத்தில் மனித உரிமைகளை அப்பால் தள்ளி விடுகிறார்கள்.

சில தலைவர்கள் தம் பதவிக் கால வரையறைகளை இல்லாமல் செய்துவிடுவதைக் காண்கின்றோம். சிவில் சமூகத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுவதைப் பார்க்கின்றோம். தொழில் துறைகளிலும், நல்லாட்சி துறையிலும் ஊழல்கள் மலிந்து கிடப்பதைப் பார்க்கிறோம்.தீர்க்கமற்ற முறையில் ஜனநாயக மறுமலர்ச்சிமாற்றப்படுவதைப் பார்க்கின்றோம் என்றவாறு ஒபாமா பேசினார்.

வெனிசூலாவின் ஜனாதிபதி சாவேஸ், இந்தத் தாக்குதலுக்குள்ளாவதாக இருக்கலாம். உகண்டாவின் ஜனாதிபதி முஸவெனியும் இப்போது பதவிக்காலத்தை நீடிக்க முயல்கிறார். ஆனால் இலங்கையின் அனுபவம் மிகவும் சமகாலத்திற்குரியதாக விருக்கின்றது.கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஒபாமா பேசியதற்கு பிறகே இலங்கைத் தலைவருக்கு பேசும் சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அப்பேச்சுக்கு எதுவித பதிலும் இலங்கை தரப்பில் வெளிப்படுத்தப்பட வில்லையென்பதாகும். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கல்வி கற்று 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 11 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட

செல்வன் மதிவதனன் மேருஜன்

மேலும் கல்வி உலகில் மேன்மை பெற்று ஒரு சிறந்த அறிஞராக விளங்க எங்கள் குல தெய்வம் கும்பளாவளைப் பிள்ளையாரை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மப்பா சேனேதிராச்சா குடும்பம், மாமா பிறேமகுமார் குடும்பம், சித்தப்பா மகிந்தன் குடும்பம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (சி/571347)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2159 திகதி 25-09-2010

ஆங்கில எழுத்திற்கும் E

வெற்றி எண்கள்: 03 17 28 61

போனஸ் இல: 64

ஜக்பொட் பரிசு ரூ. 14,918,875/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 169089 | 20/- | 3,381,780/- |
| 2 இல | 12141 | 100/- | 1,214,100/- |
| 3 இல | 246 | 1,000/- | 246,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6666 | 40/- | 266,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 458 | 1,000/- | 458,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,918,875/- | - |
| 1 இல + போனஸ் இல | 7915 | 100/- | 791,500/- |
| 2 இல + போனஸ் இல | 384 | 500/- | 192,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 410 | 200/- | 82,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,011,520/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 197342 | | 8,611,520/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 302358513-1-01 |
| கொழும்பு | 302358682-7-19 |
| மாத்தளை | 302356667-2-04 |
| கண்டி | 302356327-1-46 |
| குருணாகல் | 302353481-6-07 |
| அம்பாந்தோட்டை | 302354958-5-42 |
| கம்பஹா | 302367602-1-11 |
| கொழும்பு | 302371488-8-11 |
| அம்பாறை | 302374717-6-11 |
| பொலன்னறுவை | 302371073-6-19 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 15,380,500/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 29ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


# ஷெல்காஸ்

பாவனையாளர்களுக்கு

## ஓர் நற்செய்தி

யாழ்ப்பாணத்திலே சுவைமிகு உணவுகளை இலகுவாகவும் துரிதமாகவும் தயார்செய்துகொள்ளவும். புகை, கரி போன்ற கஷ்டங்களைத் தவிர்க்கவும் இப்போது புதிய ஷெல்காஸ் சிலிண்டர்களை அனைத்து ஷெல்காஸ் விற்பனையாளர்களிடமும் இலகுவாக பெற்றுக்கொள்ளமுடியும்.

27.09.2010 - கிளிநொச்சி, பரந்தன், கொடிகாமம் ஆகிய இடங்களிலும்
28.09.2010 - யாழ்.நகர் சந்தை, கொட்டடி மீன்சந்தை, நல்லூர், திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும்
29.09.2010 - மருதனார்மடம், சுன்னாகம், சங்கானை ஆகிய சந்தைகளுக்கு மத்தியிலும்
30.09.2010 - நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய இடங்களில்

பாதுகாப்பிற்கும் நம்பிக்கைக்கும் பெயர்பெற்றது 'ஷெல் காஸ்'

ஷெல்காஸ் கம்பனியாலும், யாழ்.குடாநாட்டு விநியோகஸ்தர்களாலும் 'ஷெல்காஸ்' விற்பனை விரிவாக்கம் செய்யப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பாதுகாப்பு பற்றியும் பாவனையின்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கும் உரிய சந்தேகங்களையும் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

S.V. முருகேசு
ஷெல்காஸ் விற்பனை முகவர்

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8899, 0776053660.




## தேசிய வாசிப்பு மாதமாக ஒக்டோபர் பிரகடனம்

மூதூர், செப்.27

ஒக்ரோபர் மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகத் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. இதனைத் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக அனுஷ்டிப்பதற்குத் திட்டமிட்டுள்ளன.

இந்த மாதத்தில் வாசிப்பு, நூலக அபிவிருத்தி ஆகியவை தொடர்பான விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கும் இம்மன்றங்கள் திட்டமிட்டுள்ளன.

பிரதேச மக்கள் மத்தியில் வாசிப்பை ஊக்குவித்தல், நூலகங்களை அபிவிருத்தி செய்தல், வளங்களை அதிகரித்தல் ஆகியவை இச்செயற்றிட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இத் தேசிய வாசிப்பு மாதத்தை முறையான திட்டமிடலுடன் அனுசரிப்பதற்கு திருகோணமலை நகரசபையின் பொது நூலகம் பல முக்கிய நிகழ்வுகளை நடத்தவுள்ளது என பிரதம நூலகர் திருமதி சுகந்தி சதாசிவமூர்த்தி தெரிவித்தார்.

பாடசாலை மட்டங்களுக்கிடையிலான வில்லுப்பாட்டுப் போட்டி, விவாதம், கட்டுரைப் போட்டி ஆகியவை இத்திட்டத் தில் இடம்பெறும். முதலிடம் பெறும் மாணவர்களின் நிகழ்வுகள் வாசிப்பு மாத இறுதி நிகழ்வில் இடம்பெறும் என்றும் நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி மேலும் தெரிவித்தார்.(எ- 229)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.27

கிளி/முருகானந்த ம.வியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற இருப்பதால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (201)

## திருவிழாவையொட்டி கொழும்புத் துறைக்கு புதுப்பொலிவு

கொழும்புத்துறை,செப்.27

கொழும்புத்துறைப்பகுதி வீதிகளுக்கு மின்விளக்குப் பொருத்துதல், வீதிகளைச் சீர்செய்தல் போன்ற பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவையொட்டி இடம்பெறும் தேர்ப்பவனி செல்லும் வீதிகளிலேயே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கை மின்சார சபையினர் வீதி விளக்குகளைப் பொருத்துவதிலும் யாழ். மாநகர சபையினர் வீதித் திருத்தங்களை மேற்கொள்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஒக்ரோபர்மாதம் 3ஆம் திகதி இடம்பெறும் திருவிழா தேர்ப்பவனி ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை வீதி, இலந்தைக்குளம் வீதி, வில்வம் தெருவீதி, 3ஆம் ஒழுங்கை, ஆனந்தன் வடலி வீதி வழியாக நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-135)

## குழம்பு கொட்டி குழந்தையின் தலை அவிந்தது

தென்மராட்சி,செப்.27

கறிக்குழம்புகொட்டியதால் இரண்டு வயதுப் பெண் குழந்தையின் தலை அவிந்தது. இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

அடுப்பிலிருந்த கறியை இறக்கிய போது கை தவறி குழந்தையின் தலையில் குழம்பு கொட்டியது.

இதே இடத்தைச் சேர்ந்த என்.அர்ச்சனா (வயது 2) என்னும் குழந்தை காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (201-207)

## ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 59
திகதி - 25.09.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Z அதிர்ஷ்ட இலக்கம்: 08 வெற்றி இலக்கம்: 6 5 0 9 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z 08 6 5 0 9 8 | ரூ. 18,508,345.00 | - |
| 1 பரிசு | 08 6 5 0 9 8 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 6 5 0 9 8 | ரூ. 100,000.00 | 01 |
| 3 பரிசு | 5 0 9 8 | ரூ. 10,000.00 | 20 |
| 4 பரிசு | 0 9 8 | ரூ. 1,000.00 | 229 |
| 5 பரிசு | 9 8 | ரூ. 50.00 | 2299 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 21997 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 6 5 0 9 | ரூ. 1,000.00 | 22 |
| 8 பரிசு | 6 5 0 | ரூ. 100.00 | 227 |
| 9 பரிசு | 6 5 | ரூ. 50.00 | 2315 |
| 10 பரிசு | Z | ரூ. 20.00 | 9165 |
| 11 பரிசு | Z 08 | ரூ. 100.00 | 1019 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,529,540.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 18,508,345.00

## மக்கள் வங்கி அறிவித்தல்

1986ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1981ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத் தின் 29ஃ எனும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 29ஃ என்னும் பிரிவின் கீழ்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2008.08.29ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படு கின்றது.

யாழ்.பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 14.02.2004ஆம் திகதி கொண்ட இலக்கம் 4224 கொண்ட மற்றும் 10.04.2005ஆம் திகதி கொண்ட இலக்கம் 5041 ஈட்டு முறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு.இராசலிங்கம் சிறீராம் மற்றும் மகாலக்சுமி சிறீராம் அல்லது மகாலெட்சுமி சிறீராம் ஆகியோர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் ரூபா எட்டு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நாநூற்றி நாற்பத்து நான்கும் சதம் எழுபத்தைந்து (ரூபா 862,444/75 சதம்) மட்டும் பணத் தொகையை ஈடுமுறியிலக்கம் 4224இன் பிரகாரமும் ரூபா பத்து இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்றி எண் பத்து மூன்றும் சதம் பதினேழு (ரூபா 1,033,483/17 சதம்) பணத் தொகையை ஈட்டு முறி இலக்கம் 5041இன் பிரகாரமும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர்சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக் கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டுமுறி இலக்கம் 4224 மற்றும் 5041கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவு அதிகாரம் பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய ரூபா எட்டு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நாநூற்றி நாற்பத்து நாலும் சதம் எழுபத்தைந்து (ரூபா 862,444/75 சதம்)யும் அத்துடன் ரூபா எட்டு இலட்சத்து இருபத்தி ஏழு ஆயிரத்து ஐந்நூறுக்கு (ரூபா 827,500/=) 01.05.2007ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வீதம் வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபா பத்து இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்றி எண்பத்து மூன்று சதம் பதினேழையும் (ரூபா 1,033, 483/17 சதம்) அத்துடன் ரூபா பத்து இலட்சத்து ஐநூறு மட்டும் (1,000,500/=)க்கும் 07.04.2007ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை 20.25% வீதம் வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கி சட்டம் 29 'L' பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவு தொகை களையும் அறவிட வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

ஈடு வைக்கப்பட்டுள்ள ஆசனத்தின் விவரம் -

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி, சங்கானைப் பிரிவு தொல்புரம் இறை -

''வளக்கம்புறெய்'' என அழைக்கப்படும் நிலப்பரப்பு 3 வ. செ. 17.4 குளி விஸ்தீரணம். உறுதியின் படி கொண்டது. ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.இராமச்சந்திரன் 9.11.2003ஆம் திகதி யிட்டு தயாரித்த வரைபடம் இலக்கம் 3099இல் துண்டு 1ல் இருந்து 4 வரை நில.பர.3 வ.செ.16.33 குளியுடன் கட்டடமும், பயிர் வகைகளும். இதன் தென்மேற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப் பங்கும் துறவையும் அதற்குரிய வழிவாய்க்காலும் சேர்ந்தது மாகும். சொல்லப்பட்ட 3 பரப்பு 16.33 குளி விஸ்தீரணம் கொண்டுள்ள ஆதனத் தின் எல்லைகள்

கிழக்கு - சுப்பிரமணியம் ஆறுமுகநாதனின் ஆதனம்,
வடக்கு - றோட்டு,
மேற்கு - தங்கம்மா பெண் இராமேஸ்வரனின் ஆதனமும்,
தெற்கு - முத்துக்குமாரு சுப்பிரமணியத்தின் ஆதனம்.
இவையனைத்தும் -

யாழ்ப்பாணம் காணிப்பதிவு காரியாலயத்தில் கே.736/219இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி
ஒப்பம்
உதவிப்பொதுமுகாமையாளர், வடக்கு வலயம். (சி-571374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையை ஆயுதமாகப் பயன்படுத்திய ரஷ்ய பெண் உளவாளி அன்னா சாப்மன்

நியூயோர்க், செப். 27

ரஷ்ய பெண் உளவாளி அன்னா சாப்மன், தனது பெண்மையை ஆயுதமாகப் பயன்படுத்தினார் என அவரது முன்னாள் காதலர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் பெண் உளவாளியான அன்னா சாப்மன், அமெரிக்காவிலிருந்து தனது தாய்நாட்டுக்குத் திரும்பியுள்ளார். தனது அழகால், ஆண்களின் மனங்களை வீழ்த்திய அன்னாவுக்கு, 'கவர்ச்சி உளவாளி' என்று பட்டப்பெயரிட்டு அழைக்கின்றனர்.

மேலும், தனது பெண்மையை, உளவு வேலைக்கு மிகச் சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்தினார் என அவரது முன்னாள் காதலர்கள் கூறியுள்ளனர். இதுகுறித்து, அன்னாவின் மூன்று முன்னாள் காதலர்கள் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளனர்.

டென்னிஸ் இர்டிட் என்பவர் குறிப்பிடுகையில், எதிராளியிடம் தனக்கு வேண்டிய தகவல்களைப் பெறுவதற்கு, அன்னா தனது பெண்மையை மிகப் பெரிய ஆயுதமாக கையாண்டுள்ளார். அதற்காக, அவர் எந்த எல்லைக்கும் போவார்.

ஆனால், அன்னாவின் ஆரம்பகட்ட காதல் விளையாட்டுகளான, சிறிய தொடுகை, காதுமடல் அருகே இரகசியமாக கிசுகிசுப்பது, கைகோர்த்துக் கொள்வது, எதேச்சையாக படுவது போன்று உதடுகளால் உதடுகளை உரசுவது போன்றவற்றால், எதிராளி ஆரம்பத்திலேயே கவிழ்ந்துபோவார்.

- இவ்வாறு இர்டிட் கூறினார்.

ஒன் - லைன் ரியல் எஸ்டேட் வணிக நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருக்கும் பில் சான்போர்ட் குறிப்பிடுகையில், அன்னாவைப் பற்றி சொல்ல நிறைய விடயங்கள் இருக்கின்றன.

அவரின் நடை, உடை, பாவனைகளைப் பார்த்தாலே, டீன் - ஏஜ் இளைஞர்கள் முதல், வயது முதிர்ந்தவர்கள் வரை காதல் வயப்பட்டுவிடுவர். அவரது சிவந்த கூந்தலும், உடல் அமைப்பும், அங்க அசைவுகளுமே என்னைக் கவர்ந்தன.

தனது பணியின் நிமித்தமாக, அவர் மற்றவர்களுடன் செயற்கையான உறவை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம், ஆனால், அவர் என்னிடம் உண்மையாக இருந்தார் என்று தெரிவித்துள்ளார். இவர் 90ஆம் ஆண்டுகளில், நிகரகுவா, கொலம்பியா, பெரு ஆகிய நாடுகளில் உளவாளியாகப் பணிபுரிந்துள்ளார்.

அன்னா மட்டுமல்ல, உளவுப் பணியில் ஈடுபடும் அனைத்து பெண்களுமே, தங்களுக்கு வேண்டிய தகவல்களை பெற இந்த வழிமுறைகளை கடைபிடித்துள்ளார்கள் என்கிறார் அன்னாவுடன் நீண்ட நாள் தொடர்பில் இருந்த சைன்தியா மர்பி.

# சர்வதேசத்தின் வில்லன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா

தெஹ்ரன், செப். 27

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர் ஒரு சர்வதேச வில்லன் எனச் சாடியுள்ளார்.

அணுசக்தி கொள்கை தொடர்பாக அமெரிக்காவுக்கும், ஈரானுக்கு மிடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஒரு தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அணுசக்தி உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஈரானுடன் பேச்சுகள் நடத்த அமெரிக்கா தயாராக உள்ளது. இரு நாடுகளுக்கிடையே நல்லுறவை வளர்க்க அது உதவும்.

ஈரானும் அதை விரும்பும் எனக் கருதுகிறேன். உலக நாடுகளும் அதையேதான் விரும்புகின்றன என்று தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்து சமீபத்தில் நியூயோர்க்கில் நடந்த ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஈரான் ஜனாதிபதி முஹம்மத் அஹமதி நிஜாத் பேசினார்.

அப்போது அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் இஸ்லாமிய குடியரசுகளின் மீது மதிப்புடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டால் அணுசக்தி குறித்த புதிய பேச்சுகள் நடத்த ஈரான் தயாராக உள்ளது என்றார்.

இந்த நிலையில் ஷிராஷ் நகருக்கு வந்த ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் அலிலரிஜான் ஒரு செய்தி நிறுவனத்துக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஒரு உலக வில்லன். அவர் எப்படி ஈரானுக்கு உதவி செய்ய முடியும். அமெரிக்கர்கள் உலகம் முழுவதும் பழி பாவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, ஒபாமாவின் உதவி எங்களுக்குத் தேவையில்லை. அவரது வார்த்தையில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார்.



ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் லைபீரியா ஜனாதிபதி ஜோன்சன்-சர்லீபை 65ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் சந்தித்துப் பேசுகிறார்.

# அட்டைப் பெட்டிக்குள் தூங்கும் பிரி. பிரதமரின் பெண் குழந்தை

லண்டன், செப். 27

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூனுக்கு 6 வயதில் நான்சி என்ற பெண் குழந்தையும், 4 வயதில் எல்வின் என்ற மகனும் உள்ளனர்.

இந்த நிலையில் கர்ப்பிணியாக இருந்த இவரது மனைவி கடந்த மாதம் சுற்றுலா சென்றிருந்தபோது மற்றொரு பெண் குழந்தையை பெற்றார்.

அக்குழந்தைக்கு பிளோரன்ஸ் எனப் பெயரிட்டுள்ளனர். இக்குழந்தை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பிறந்ததால் செயற்கையாக தயாரிக்கப்பட்ட ஒரு அட்டைப்பெட்டியில் வைத்து பாதுகாப்பாக தூங்க வைத்தனர்.

இந்த நிலை தற்போதும் தொடர்கிறது. இதற்கிடையே சுற்றுலாவின்போது பிறந்த அக்குழந்தையை டவுனிங் தெருவிலுள்ள பிரதமர் இல்லத்துக்குக் கொண்டுவரும்போதுகூட அட்டைப்பெட்டியில் வைத்துதான் தூக்கி வந்தனர்.

குழந்தைக்கு என்று தனியாக சிறிய கட்டில் எதுவும் வாங்கவில்லை. எனவே, பிறந்தபோது தூங்கிய பழக்கத்தில் தொடர்ந்து அட்டைப்பெட்டிக்கு உள்ளேயே படுத்து தூங்குகிறது.

புதிதாகப் பிறந்துள்ள தனது குழந்தை மிகவும் அபூர்வமானது. அவள் நன்றாக பழகுகிறாள். நன்றாக சாப்பிட்டு விட்டு தூங்குகிறாள் என பிரதமர் கெமரூன் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# யோகாசனப் பயிற்சியில் பின்லாந்து பனிக்கரடி



லண்டன், செப். 27

பின்லாந்திலுள்ள மிருகக்காட்சிச் சாலையில் பனிக்கரடி ஒன்று தினமும் 15 நிமிடங்கள் யோகாசனம் செய்கிறது. இதை பார்வையாளர்கள் ஆச்சரியத்தோடு பார்த்துச் செல்கின்றனர்.

பின்லாந்திலுள்ள அட்டாரி மிருகக் காட்சி சாலையில், 'சான்ட்ரா' என்ற ஆண் பனிக்கரடி ஒன்று உள்ளது. அந்தக் கரடி தினசரி காலை எழுந்ததும், 15 நிமிடங்கள் யோகாசனம் செய்கிறது. அது கால்களை நீட்டியும், கைகளை தரையில் ஊன்றியும், கண்களை ஒரே இடத்தில் நிலை நிறுத்தியும் யோகாசனம் செய்கிறது.

பின்னர், கால்களை உயர்த்தி, கைகளால் காலை தொடுகிறது. பின்னர், கால்களை உயரே தூக்குகிறது. பார்வையாளர்களை வியக்க வைக்கும் வகையில், பல்வேறு கோணங்களில், கரடி செய்யும் இந்த யோகாசனப் பயிற்சி 15 நிமிடங்கள் வரை நீடிக்கிறது.

இந்த அரிய காட்சிகளைப் பார்ப்பதற்கு, அந்த மிருகக் காட்சி சாலையில் தினமும் பெரும் கூட்டம் கூடுகிறது. ஆன்மிகம் சார்ந்த உடற்பயிற்சியான யோகாவை, கரடி எப்படி கற்றுக்கொண்டது என்றும் அதைப் பற்றி அதற்கு என்ன தெரியும் என்றும் பார்வையாளர்கள் வியப்போடு கேள்வி எழுப்புகின்றனர்.

# உயர் கல்வியில் இந்தியாவை விட அமெரிக்கா, சீனா முன்னணியில்!

## யேல் பல்கலைக்கழகப் பேராசிரியர் தகவல்

உயர் கல்வியில் அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள், இந்தியாவை முந்திவிட்டன என யேல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

யேல் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறைப் பேராசிரியர் சியாம் சுந்தர், இந்தியாவில், கடந்த 2003ஆம் ஆண்டு முதல் உயர் கல்வியில் அறிவியல் தொடர்பான பாடங்களில் கலாநிதிப் பட்டம் பெறுவது குறைந்து வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவை சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் முந்திவிட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''கடந்த 2003ஆம் ஆண்டில், உயர் கல்வியில் (பிஎச்.டி.) கலை தொடர்பான பாடங்களில் இந்தியர்கள் 6,144 பேரும், சீனர்கள் 1,580 பேரும், அமெரிக்கர்கள் 5,020 பேரும் கலாநிதி பட்டம் பெற்றுள்ளனர்.

ஆனால், அறிவியல் தொடர்பான பாடங்களில் இந்தியர்கள் 4,976 பேரும், சீனர்கள் 6,653 பேரும், அமெரிக்கர்கள் மிக அதிகமாக 20,001 பேரும் பட்டம் பெற்றுள்ளனர்.

கடந்த 2004ஆம் ஆண்டில், கலை தொடர்பான பாடத்தில், இந்தியர்கள் 7,873, சீனர்கள் 1,750, அமெரிக்கர்கள் 5,012 பேர் பட்டம் பெற்றுள்ளனர்.

அறிவியல் தொடர்பான பாடத்தில், முறையே 5 ஆயிரத்து 612 பேரும், 7 ஆயிரத்து 827 பேரும், 20 ஆயிரத்து 496 பேரும் பட்டம் பெற்றுள்ளனர். இதேபோன்று 2005ஆம் ஆண்டிலும், இந்தியர்கள் கலை தொடர்பான பாடங்களில் மட்டுமே அதிக அளவில் பட்டம் பெற்றுள்ளனர்.

அறிவியல் தொடர்பான பாடங்களில், அமெரிக்கர்களும், சீனர்களுமே முன்னிலையில் இருக்கின்றனர். எனவே, இந்தியர்களின் கல்வி விவகாரத்தில், அரசு கவனம் செலுத்த வேண்டும். உயர்கல்வி கற்பதற்காக, போதிய நிதியை ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# மீன்பிடிப் படகு கப்டன் கைது விவகாரம்: ஜப்பானிடம் நட்டஈடு கோருகின்றது சீனா

பீஜிங், செப். 27

''எங்கள் நாட்டைச் சேர்ந்த மீன்பிடிப் படகின் கப்டனை சட்டவிரோதமாகக் கைதுசெய்ததற்கு, ஜப்பான் மன்னிப்பு கேட்க வேண்டும்; இந்தச் சம்பவத்துக்காக நஷ்ட ஈடும் தரவேண்டும்'' என சீனா எச்சரித்துள்ளது.

ஜப்பான் அருகிலுள்ள சின்னஞ்சிறு தீவு சென்காகு. இது, டையாயு என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. இந்தத் தீவு யாருக்குச் சொந்தம் என்பதில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே பெரும் சர்ச்சை நிலவுகிறது.

இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி இந்தத் தீவின் அருகே, சீனாவின் மீன்பிடி படகில் சென்றவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு ரோந்து வந்த ஜப்பான் கடலோர காவல் படையினர், சீனாவின் மீன்பிடி படகைக் கைப்பற்றினர். அத்துடன், அதில் இருந்தவர்களையும் கைது செய்தனர்.

பின்னர், படகையும், மீனவர்களையும் விடுவித்தனர். இருந்தாலும், மீன்பிடிப் படகின் கப்டன் ஷான் ஜியாங்கை மட்டும், தொடர்ந்து காவலில் வைத்திருந்தனர். இதனால், சீன அதிகாரிகள் ஆத்திரம் அடைந்தனர்.

இதற்கு பதிலடியாக, சீனாவின் இராணுவத் தளங்களை வேவு பார்க்கும் வகையில் வீடியோ எடுத்தனர் என ஜப்பானைச் சேர்ந்த மூன்று பேரை சீன அதிகாரிகள் கைது செய்தனர்.

# பாகிஸ்தான் விமானம் சுவீடனில் குண்டு மிரட்டலால் தரையிறக்கம்

ஸ்டாக்ஹோம், செப். 27

பாகிஸ்தான் விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால், சுவீடனில் அவசரமாக அது தரையிறக்கப்பட்டது. மேலும் விமானத்தில் பயணித்த சந்தேகத்திற்கிடமான நபரை கைதுசெய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

கனடாவிலுள்ள டொரன்டோவிலிருந்து, பாகிஸ்தானின் கராச்சி நகருக்கு 273 பயணிகளுடன் விமானம் ஒன்று சனிக்கிழமை புறப்பட்டது. சுவீடன் [illegible] லையில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் பயணிப்பவரில் ஒருவர் வெடிகுண்டு வைத்திருக்கிறார் என கனடா பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

உடனடியாக விமான கட்டுப்பாட்டு அறை மூலம் பொலிஸார் விமானிக்குத் தகவல் கொடுத்தனர். இதையடுத்து விமானத்தை அவசரமாக தரையிறக்க விமானி முடிவுசெய்தார். அருகிலிருந்த ஸ்டாக்ஹோம் நகரின் அர்லான்டா விமான நிலைய கட் டுப்பாட்டு அறையை தொடர்புகொண்டு விமானத்தை தரையிறக்க அனுமதி கோரினார்.

பின்னர் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டு, தனிமையான பகுதியில் நிறுத்தப்பட்டது. அங்கு தயார் நிலையில் இருந்த பொலிஸார் விமானத்திற்குள் இருந்த பயணிகளை ஒவ்வொருவராக கீழே இறக்கினர். அதில் சந்தேகப்படும்படியான பயணியை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட பயணியிடம் வெடிகுண்டுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. இருப்பினும், விமானத்திற்குள் வெடிகுண்டுகள் ஏதேனும் இருக்கிறதா என்பது குறித்து பொலிஸார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்எண்ணெயைத் தவறுதலாக அருந்திய சிறுமி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப். 27

தவறுதலாக மண்எண்ணெய் அருந்திய 3 வயதுச் சிறுமி ஒருத்தி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நாவற்குழிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாயுடன் கடைக்குச் சென்ற சிறுமி அங்கிருந்த மண்எண்ணெயை தவறுதலாக எடுத்து அருந்தினாள் எனக் கூறப்படுகின்றது.

நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த பு.லாவண்யா (வயது 3) என்ற சிறுமியே மண்எண்ணெய் அருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-139)


Internationally Recognized and Affordable
UK Qualification

HND in Business Management

அரச,அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பம்.

முகாமைத்துவத்துறையில் உங்கள் தகுதியையும்,தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900




IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


## தேசிய சாகித்திய மண்டல விருது வழங்கும் விழா

கொழும்பு, செப். 27

தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலில் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தேசிய சாகித்திய மண்டல விருது வழங்கும் விழா எதிர்வரும் 30ஆம் திகதி அலரி மாளிகையில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு விருதுகளை வழங்குவார். இலங்கை தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, பிரதி அமைச்சர் குணரட்ன வீரகோன் உட்பட அமைச்சர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர்.

தமிழ், சிங்கள இலக்கியத் துறை சார்ந்த பத்துப் பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன. ஒவ்வொரு துறையிலும் 2009 ஆம் ஆண்டு சிறப்பாகச் செயற்பட்ட தமிழ், சிங்களக் கலைஞர்களுக்குத் தனித் தனியே விருதுகள் வழங்கப்பட உள்ளன. கலாசார அமைச்சினால் இந்த விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன. இம்முறைக்கான விருதுகள் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட உள்ளன. (உ-319)

## பாராட்டி வாழ்த்து



20.காரைக் காட்டு ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

2010 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்ற யாழ். இந்துஆரம்பப்பாடசாலை மாணவனான ஸ்ரீ கஜலக்ஷன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கி.யோகரத்தினம்
(பெரியதந்தை குடும்பம்.)

## பாராட்டி வாழ்த்து



நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

2010 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த யாழ் சென்ஜோன் பொஸ்கோ மகாவித்தியாலய மாணவன் நவரட்ணம் பானுஜன் மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அப்பம்மா, அக்கா ருட்சிகா, கோப்பாய்த் தாத்தா குடும்பம், மல்லாவித் தாத்தா குடும்பம், பெரியம்மா குடும்பம், சித்தி குடும்பம், அத்தை குடும்பம், ரஞ்சன் மாமா குடும்பம், கோப்பாய் அன்ரா குடும்பம், முள்ளியவளை ஆசைமாமா குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



புதுவளவு,
ஏழாலை மேற்கு.

ஏழாலை மேற்கை சேர்ந்த சுகிர்தன் ஜெயந்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி

செல்வி சுகிர்தன் அபிநயா
(மாணவி யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வி உலகில் சாதனையீட்ட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, ஜீவன்மாமா, மாமி, மைத்துனன், ஹரன்மாமா, ஜெகன்மாமா.


Kalaimagal International College

KALAIMAGAL INTERNATIONAL COLLEGE
NOTHING IS IMPOSSIBLE

கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணப்பப்படிவங்கள் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.

எமது சிறப்பான செயற்பாடுகளாவன



- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை
- ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- ★ கணனி ஆய்வுகூடம்
- ★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம்
- ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த),வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டும் உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புக்களை மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்துகொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 15 முதல் உள்வாங்கப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும். சமர்ப்பிக்கவும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

The Director :
Kalaimagal International College
Church Lane, Kulappiti Junction. Kokuvil.
தொ.பே: 021 3215785, 0778834592.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனுமதி ஏதும் இன்றிக் கல் அகழ்ந்த 19 பேர் வல்வெட்டித்துறையில் கைது

வடமராட்சி, செப்.27

வல்வெட்டித்துறை, கொம்மாந்துறைப் பகுதியில் சட்டவிரோதமாகக் கற்கள் அகழ்ந்த 19 பேரை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜே.சமநாயக்கா தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் கைது செய்தனர்.

இரண்டு டிராக்டர்களும், அவற்றில் ஏற்றப்பட்ட கற்களும், கற்கள் அகழப் பயன்படுத்தப்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கல் அகழ்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சமரநாயக்க தெரிவித்தார்.

காங்கேசன்துறை மூன்றாம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான அவரது வழிகாட்டலில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த தலைமையில் உபபொலிஸ் பொறுப்பதிகாரி சேனரத்ன மற்றும் பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்குச் சென்று சந்தேகநபர்களைக் கைது செய்த இவர்கள் கற்களுடன் இரண்டு டிராக்டர் வண்டிகளையும் கைப்பற்றினர். கைதானவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

கற்களுடன் கூடிய டிராக்டர் வண்டிகள் இரண்டும், கற்கள் அகழப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் நீதிமன்றப் பாதுப்பில் வைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட 19 சந்தேகநபர்களில் 7 பேர் மீது எதிர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (உ-236)

# பழைய இரும்புக் குவியல்களை அகற்றும் பணி நகரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் குவியலாகப் போடப்பட்ட பழைய இரும்புகளை அகற்றும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

கொட்டடி, வண்ணார்பண்ணை, நாவாந்துறை போன்ற இடங்களில் குவித்து வைக்கப்பட்ட இரும்புகளால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குவித்து வைக்கப்படும் இரும்புகளால் நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற கழிவு இரும்புகளை அகற்றுமாறு மாநகராட்சி மன்றம் அறிவித்தமையைத் தொடர்ந்து சுத்திகரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (204-26)

# யாழ்.நகரில் கட்டாக்காலி கால்நடைகள் வாகனங்கள் செல்வதில் அதிக இடையூறு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வீதிகளை ஆக்கிரமிக்கும் கட்டாக்காலி நாய்கள் மற்றும் ஆடு, மாடுகளினால் போக்குவரத்துச் செய்வதில் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

யாழ்.நகரில் அண்மைக் காலமாக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் கட்டாக்காலி மிருகங்களின் நடமாட்டமும் விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இத்தகைய கட்டாக்காலி மிருகங்களைக் கட்டுப்படுத்த வேண்டியது மாநகரசபையினரின் கடமையாகும்.

நாய்கள் விடயத்தில்தான் சமாதானங்களைக் கூறினாலும் ஆடு, மாடுகளையேனும் உரிமையாளர்களைக் கொண்டு கட்டி வளர்க்க ஆவன செய்ய வேண்டும் என வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர். (204-86)

# சுகாதாரச் சீர்கேடுகளின் மையமாக யாழ்.புகையிரத நிலைய வளாகம்

வலி.வடக்கு, செப். 27

யாழ்ப்பாணம் புகையிரத நிலையப் பகுதியில் காணப்படும் குப்பைகளினாலும் பற்றைகளினாலும் சுற்றாடலில் உள்ள மக்கள் நுளம்புத் தாக்கம் உட்பட சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது -

யாழ்ப்பாணம் புகையிரத வளாகம் புற்களும் பற்றைகளும் வளர்ந்து காணப்படுவதுடன் கழிவுப் பொருள்களைக் கொட்டும் இடமாகவும் மாறியுள்ளது.

புகையிரத நிலையத்தில் தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் கூட இரவு நேரத்தைக் கழித்துச் செல்கின்றார்கள். இதனால் அப்பகுதியில் கழிவுகள் பெருமளவில் சேர்கின்றன.



சுற்றாடல் பகுதியில் இரவு நேரங்களில் நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதுடன் துர்நாற்றம் வீசி வருவதாகவும் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் கூறுகின்றார்கள். மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் இத்தகைய தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதாகவும் உரியவர்கள்கவனமெடுத்து ஆகக் குறைந்தது புகையிரத வளாக பற்றைகள், புற்களை வெட்டி விட்டால் நுளம்பின் தாக்கம் குறைந்து விடுமென்றும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். (க-86)

# அனர்த்த முகாமைத்துவ இணைப்பதிகாரி பதவி இரு வருடங்களாக வெற்றிடமான நிலையில்

நாவற்குழி, செப். 27

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ இணைப்பதிகாரி பதவி கடந்த இரு வருடங்களாக வெற்றிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக கடந்த 2008 டிசெம்பரில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. தெரிவும் இடம் பெற்றது. ஆனால் சில நடைமுறைச் சிக்கல்களினால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியேற்கவில்லை. இதனால் இப்பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகவே உள்ளது. அதேவேளை நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்து ஒருவரை நியமிக்கும் நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

முக்கியமான இந்தப் பதவிக்கு இனியும் தாமதிக்காது ஒருவரை நியமிக்குமாறு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏ.டி.எஸ்.எல் இணைய வசதி யாழ்ப்பாண மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், செப். 27

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் ''பைபர் ஒப்ரிக்கல் கேபிள்'' மூலமான ஏ.டி.எஸ்.எல். இணைய வசதியினைப் பெற்றுக்கொள்வதில் பெருமளவு மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்று ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பணிப்பாளர் எஸ்.சிவானந்தன் தெரிவித்துதார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஏழு பரிவர்த்தனை நிலையங்கள் ஏ.டி.எஸ்.எல். இணையத்தை வழங்கும் வசதிகளைக் கொண்டுள்ளன எனத் தெரிவித்த அவர் மாதாந்தம் 300 முதல் 400 வரையான இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் கூறினார்.

இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை விசேட கொடுப்பனவுகளில் எஸ்.எல்.சி. புரோட்பாண்ட் இணைப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (204-15)

# கொத்தணிப் பாடசாலைகள் இனி வடமராட்சி கிழக்கில் தனித்து இயங்கும்

யாழ்ப்பாணம், செப்.27

மீள்குடியேற்றம் துரிதமாக இடம்பெற்று வரும் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கொத்தணி அடிப்படையில் தற்போது இயங்கி வரும் பாடசாலைகள் இவ்வாரம் முதல் தனித்தனியாக இயங்கவுள்ளன என மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பொன்னையா தெரிவித்தார்.

உடுத்துறை மகா வித்தியாலத்தில் கொத்தணியாக இயங்கிவரும் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் இயங்கவுள்ளது. அதேபோல மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையையும் தனியான இடத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கொத்தணியாக இயங்கிவரும் செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மாமுனை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றை செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் தேவாலயத்தில் இன்று திங்கட்கிழமை முதல் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை அதே இடத்தில் தற்காலிகக் கொட்டகையில் நாளை மறுதினம் புதன்கிழமை முதல் இயங்கவுள்ளது. (உ-14-236)

# ஜமுனா ஏரி வீதியின் புனரமைப்பு ஆரம்பம்

கொழும்புத்துறை, செப். 27

நல்லூர் ஜமுனாஏரி வீதிக்குப் புதிதாக வீதி அமைக்கும் பணிகள் யாழ்.மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகரசபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மழைக் காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு நீர் தேங்கி நிற்பதால் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசாவின் பணிப்பின்பேரில் செயலாளரின் நேரடிக் கண்காணிப்பில் புதிய வீதி அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றது.

சங்கிலி மன்னனின் வரலாற்றுப் பதிவுகளில் ஒன்றான ஜமுனா ஏரியைச் சூழ வசித்துவரும் மக்கள் சீரற்ற பழைய வீதியால் பயணிப்பதால் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். (204-135)

# பருத்தித்துறை-ஆழியவளை பஸ்சேவையை நாகர்கோயிலூடாக நடத்தும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.27

பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைவரை நடத்தப்படும் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்சேவையை அம்பன், நாகர்கோவில் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம், புதுக்காடு வீதியூடாக ஆழியவளைக்கான பஸ்சேவை தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்தச் சேவையை அம்பன், நாகர்கோவில் பகுதிகளூடாக நடதுவதன் மூலம் பயணிகள் பல்வேறு நன்மைகளை பெறக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நேரவிரயம், பயணச் செலவு என்பவற்றை இதன் மூலம் தவிர்த்துக்கொள்ளமுடியும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பருத்தித்துறைக்கும் ஆழியவளைக்கும் இடையிலான பஸ் சேவையினை கொடிகாமம், புதுக்காடு ஊடாக மேற்கொள்வதற்கு சுமார் மூன்று மணித்தியாலங்கள் எடுக்கின்றது. இச்சேவையினை நாகர்கோவில் ஊடாக மேற்கொள்வதன் மூலம் சுமார் ஒன்றரை மணி நேரத்தில் பயணத்தை முடித்துக் கொள்ளமுடியும்.

மீளக்குடியமர்ந்துள்ள வடமராட்சி கிழக்கு மக்களின் நலன்கருதி பருத்தித்துறைக்கும் ஆழியவளைக்கும் இடையிலான பஸ்சேவையை நாகர்கோவில் ஊடாக மேற்கொள்ளுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயணி ஒருவர் தெரிவித்தார். (உ-14)




யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது, சங்கத்தின் செயலாளர் அங்கத்தவர் ஒருவருக்கு விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பாடசாலை மாணவருக்கு பாற்பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு பாற்பொருள்கள் விற்பனை செய்வதற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார். பாடசாலை [illegible] வர்களின் வசதி கருதி விற்கப்படும் இந்தப் பாற்பொருள்களால் அவர்கள் பெரிதும் நன்மையடைவர் என தெரிவிக்கப்படுகின்றது. (204-26)

# மத்தியஸ்தக் குழுக்கள் வடக்கில் விஸ்தரிப்பு

...றை, செப்.27

வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ள மத்தியஸ்த குழுக்கள் இம்மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இதன்படி வடமாகாணத்தில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் மத்தியஸ்த குழுக்களை அமைப்பதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் மட்டுமே மத்தியஸ்த குழுக்கள் முதலில் அமைக்கப்பட்டன. தற்போது அங்கு14 மத்தியஸ்த குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் மத்தியஸ்த உறுப்பினர்களாக இணைந்துகொள்ள விரும்புபவர்கள் தத்தம் பகுதியிலுள்ள பிரதேச செயலகத்திலிருந்து இதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



சுபச் செலவுகள் ஏற்படும். பண விவகாரங்களில் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களை புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்ளலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அதிக அக்கறை காட்டுவர். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். மாற்று மொழி பேசுவோரால் ஆதாயம் பெறலாம்.

### இடபம்



உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ சில செலவுகளைச் செய்யலாம். தொலைபேசி வழியில் கேட்கும் செய்தியால் சந்தோஷம் அடையலாம் அல்லது வருத்தம் அடையலாம். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். வீண் பழிகள் ஏற்படலாம்.

### மிதுனம்



உறவினர்கள் வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். பல நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம். நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். வரவாக வந்த பணம் ஒன்றை ஒரு விடயத்திற்காக தாராளமாக செலவு செய்வீர்கள். பிள்ளைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

### கடகம்



தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். தம்பதியர் இடையே அன்யோன்யம் உண்டாகும். மற்றவர்கள் பிரச்சினையாக நினைக்கும் ஒரு விடயத்தை நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்வீர்கள். வருமானத்தை பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். இனிய உதவி கிடைக்கும்.

### சிங்கம்



சில விடயங்களில் மற்றவர்களின் தயவு இல்லாமல் தனித்து செயற்பட முற்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம்.

### கன்னி



மன அமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். பல முறை முயற்சித்தும் சில காரியங்கள் முடியாமல் போகலாம். சொந்த விடயங்களை பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். மறதியால் அவதியுண்டு.

### துலாம்



வழக்கமான வேலைகளை இடையூறுகள் இன்றி சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். நண்பர்கள் உங்களின் எண்ணம் போல நடந்து பெருமை சேர்ப்பர். குறைவான பலனை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

### விருச்சிகம்



அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் இடையே ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறலாம். தேக ஆரோக்கியம் தெம்பு ஊற்சாகம் தரும். சிலருக்கு மனம் உவந்து உதவி செய்வீர்கள்.

### தனுசு



கடன் விவகாரங்களில் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். மற்றவர்கள் செலவில் சில தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வீட்டுக்கு தேவையான பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு பல இடங்களுக்கு அலையலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம்.

### மகரம்



பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். மற்றவர்கள் பேச்சை நம்பி சில வேலைகளில் இறங்கி விட்டு அவதிப்படலாம். உங்களுக்கு தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்துவீர்கள்.

### கும்பம்



மற்றவர்களின் யோசனையை கேட்காமல் எந்த விடயத்திலும் தனித்துச் செயல்பட முற்படுவீர்கள். எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெண்கள் ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சிலரிடம் பொய் பேசி உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பீர்கள்.

### மீனம்



உறவினர்கள் வருகையால் உங்களின் சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். நீண்ட நாள்களாக பார்க்காத ஒருவரை திடீரென பாதையில் சந்திக்கலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று பல மணி நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம்.

## அறிவித்தல்

### மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை- 285

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான.1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 27.06.2008ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 30.05.2004 திகதி கொண்ட இல.4403 மற்றும் 19.05.2005 திகதி கொண்ட 5145 ஆகிய ஈட்டு முறிகளின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்தவேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு. சச்சிதானந்தம் சூரியப்பெருமான் அவர்கள் தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பத்து லட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐந்நூறு ரூபா 1,055,500 பணத்தொகையை ஈட்டு முறி இல.4403இன் பிரகாரமும், ரூபா பதின் மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா 1,325,000 பணத் தொகையை ஈட்டுமுறி இல.5145இன் பிரகாரமும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டி உள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிட்ட ஈட்டு முறிகள் 4403 மற்றும் 5145கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பத்து லட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூறு (1,055,500)ஐயும் ரூபா பத்துலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 1,050,000) இற்கு 10.01.2006 திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபா பதின் மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (1,325,000) வையும் ரூபா பதின்மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (1,325,000) 06.11.2006 ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரைக்கும் 20.25% வருடாந்த வட்டியும் "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரம்

1.வடக்குமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பிரிவு, பருத்தித்துறை பரிஷ், வென்றிபாகுதேவன் குறிச்சி, இறை புலோலி கிழக்கு "ஆயில் நின்றகலட்டி" நிலப்பரப்பு 01 வ.செ.குளி 14 என உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.வேல்முருகு வின் திகதி 06.03.2005 இலக்க 1718 வரைபடத்தின் படி இப்பொழுது துண்டு 1 என்று வெளிப்படுத்தப்பட்டு மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பு 01 வ.செ.குளி.14 வீடும் கட்டடங்களும் உரிய அனுபந்தங்களுடன் சொல்லப்பட்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 1வ.செ. 14 குளிக்கும் எல்லை கிழக்கு இராசையா கைம்பெண் லட்சுமிப்பிள்ளையின் உரிமையாளரின் ஆதனம். வடக்கு விஷ்வலிங்கம் வேலாயுதத்தினது ஆதனம். மேற்கு பிரதான வீதி, தெற்கு பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமான ஆதனமும் ஒழுங்கையுடன் வடக்கு எல்லையில் இருக்கும் கிணற்றின் மூன்றில் இரண்டு பங்கு (2/3) பருத்தித்துறைக் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இல.ஏ579/167 இன் கீழ் இவ்விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,
ஒப்பம்,

(சி/571375) உதவிப் பொதுமுகாமையாளர், வடக்கு வலயம்.

## ஞானச்சுடர் வெளி வந்துள்ளது

யாழ்ப்பாணம், செப்.27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது.

மாதந்தோறும் வெளிவரும் இந்த மலர் சைவப் பெருமக்களிடையே ஆன்மிக உணர்வைத் தூண்டி வருகிறது. இந்த மாத இதழின் முகப்பு அட்டையை சந்நிதி முருகனின் அழகிய படம் அலங்கரிக்கின்றது.

மலரின் உள்ளே ரி.நாகராசா, இரா.சாந்தன், திருமதி கு.செந்தில்பிரியா,ஜக்கி வாசுதேவ், க.நாகேஸ்வரன், நீர்வைமணி, க.சிவசங்கரநாதன், செல்வி.பா.வேலுப்பிள்ளை, கு.கோபிராஜ், ஆறுமுகநாவலர், சு.அருளம்பலவனார், வாரியார் சுவாமிகள், கு.நவரத்தினராசா, ந.அரியரத்தினம், வல்லையூர் அப்பண்ணா ஆகியோரின் ஆக்கங்கள் தெய்வீக மணம் வீசுகின்றன. அத்துடன் இந்த மலரில் இணைக்கப்பட்டுள்ள படங்கள் தரும் பதிவுகள், செய்திச் சிதறல்கள் என்பன பயன்தரவல்லன. (க)

## சீனிப் பாணி பறந்து யுவதி காயம்

தென்மராட்சி, செப்.27

கொதித்த சீனிப் பாணி உடலில் பறந்து யுவதி காயமடைந்தார். இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பளை வண்ணாங்கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.நிருபா (வயது 20) என்னும் யுவதியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலகாரத்திற்கு பயன்படுத்துவதற்காக தயாரித்த பாணி அடுப்பிலிருந்து சரிந்து யுவதியின் உடலில் பறந்து காயத்தினை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.(201-207)

## விளையாட்டு விழா

வடமராட்சி,செப்.27

தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் சிறுமலர்கள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூத்த சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி [illegible] பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (201-236)

## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### பயிற்சி கிளை முகாமையாளர்

மேற்படி பதவிக்குச் சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:**

க.பொ.த.சாதாரணதரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண்கணிதம், தமிழ் என்பனவற்றை உள்ளடக்கி 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண் டும்.

பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் காலத்தில் படி வழங்கப்படும். பயிற்சி நிறைவில் கடமைக்கு அமர்த்தும் போது சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 11.10.2010 இற்கு முன்னர் **பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி** என்னும் முகவரிக்கு நேரிலோ பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.

(சி/562307)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 568
திகதி 2010/09/25

சுப்பர் இலக்கம் 13

வெல்லப்பட்ட இலக்கங்கள் 09 39 53 62

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 30,971,184.80 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 263 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 514 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 12,871 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 7,468 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 185,284 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 29,599 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,473,480.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
[illegible]

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 31,257,869.60

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைப் பிரிந்து வெளிநாடு செல்லாதீர் அம்மாக்களிடம் குழந்தைகள் உருக்கம்

## ஏழாலையில் ஊர்வலம் நடத்தினர் சிறுவர்கள்

வலி.வடக்கு,செப்.27

''அம்மாக்களே எம்மைவிட்டு வெளிநாடுகளுக்குச் செல்லாதீர்கள். உங்களுடைய அன்பு எமக்கு வேண்டும்'' என்ற கோரிக்கையுடன் ஏழாலையைச் சேர்ந்த சிறுவர்கள் நேற்று முன்தினம் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

அனைத்துலக சிறுவர் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலக சிறுவர்பகுதியின் ஆதரவுடன் ஏழாலை ஸ்ரீமுருகன் சிறுவர் கழகம் இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது.

'உலகம் ஒளிபெற அனைத்துக் கரங்களையும் ஒன்றிணைப்போம்' என்னும் தலைப்பிலேயே ஊர்வலம் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறுவர் நிதியத் இலங்கையின் (எஸ்.சி.எவ்) யாழ். மாவட்ட பிரதிநிதி மகேந்திரன், உடுவில் பிரதேச சிறுவர் மேம்பாட்டு அலுவலர் திருமதி சந்திரா நக்கீரன், கிராம அலுவலர் ஜெயகரன், சாந்திக நிறுவன இணைப்பாளர் எஸ்.விஜயரெட்ணம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். பெற்றோர்கள் பலரும் சிறார்களுக்கு ஆதரவாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ஏழாலை தெற்கின் பல வீதிகளினூடாகச் சென்று மீண்டும் ஆரம்பித்த இடமான ஐரோப்பிய மண்டபத்தை வந்தடைந்தது.

இருநூறுக்கும் மேற்பட்ட சிறார்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (உ-86)



உலக சிறுவர் தினத்தை யொட்டி ஏழாலை ஸ்ரீமுருகன் சிறுவர் கழகம் நடத்திய ஊர்வலத்தில் பதாகைகளைத் தாங்கியவாறு சிறுவர்கள் ஊர்வலமாகச் செல்வதைப் படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

### சிறுவர்களின் கோஷங்கள்

ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் சிறுவர் கழகம் நடத்திய சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய சிறுவர் ஊர்வலத்தில் ஒலிக்கப்பட்ட கோஷங்கள் சில வருமாறு:

''சாலையோர வியாபாரம் எமக்கு வேண்டாம். பாடசாலை வித்தியாரம் நமக்கு வேண்டும்'', ''ஆசிரியர்களே பெற்றோர் களே எமக்குப் பாதுகாப்பையும், அன்பையும், அரவணைப்பையும் பெற்றுத் தாருங்கள்'', ''மணம் வீசும் மலர்களாம் பிள்ளைகளுக்கு! என்றும் மணம் பரப்ப இடம் தாருங்கள்'', ''போதைப் பழக்கமற்ற தந்தையும் குழப்பமற்ற தாயும் சிறந்த சிறுவர்களுக்கு அவசியமானவர்கள்'', ''பெற்றோர்களே எம்மை ஆதரித்துக் கைகொடுங்கள்'', ''சிறுவர்களாகிய எமக்கு முழுமையான பாதுகாப்பைத் தாருங்கள்'', ''தாய்ப் பாசம் எமக்கு வேண்டும். தாயே வெளிநாடு செல்ல வேண்டாம்.''

## விபத்தில் நால்வர் காயம்

தென்மராட்சி,செப்.27

சாவகச்சேரி கைலாயபிள்ளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

வீதியொன்றின் வளைவில் திரும்பிய மோட்டார் சைக்கிள் வீதியில் வந்த உழவு இயந்திரத்துடன் மோதுவதைத் தவிர்க்க வீதியோரமாக ஒதுங்க முற்பட்டபோது மின்கம்பத்துடன் மோதியது.

அதில் பயணித்தவர்கள் தூக்கி வீசப்பட்டதில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர். கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளின் பின் சில்லு உழவு இயந்திரத்தின் பின் சில்லுக்குள் அகப்பட்டு நசுங்கியது.

அந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுவதைத் தவிரக்க முயன்ற உழவு இயந்திரச் சாரதி வாகனத்தை வெட்டித் திருப்பிய போது அவ்வழியே சென்ற சைக்கிளுடன் விபத்துக்குள்ளானது.

சைக்கிளில் அதில் பயணித்த தாயும் மகளும் வீழ்ந்து காயமடைந்தனர். சைக்கிள் பின் சில்லு உழவு இயந்திரத்தின் முன்சில்லுக்குள் அகப்பட்டு நசுங்கியது. (201-207)

## பயணிகள் மண்டபம் கசூரினாவில் அமையும்

யாழ்ப்பாணம்,செப்.27

காரைநகர் கசூரினா சுற்றுலா மையத்தில் இளைப்பாற்று மண்டபம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கசூரினா வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி இந்த இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்பட உள்ளது. இதுதொடர்பிலான நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதியில் தேநீர்ச்சாலை ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.(உ-26)

## நீரிழிவை வெல்ல 'கழகம்' அமைப்பு

அச்சுவேலி,செப்.27

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' என்ற கழகம் செயற்படத் தொடங்கியுள்ளது. கழகத்தின் ஆரம்ப நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் டாக்டர் ஆர்.பரமேஸ்வரன் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெற்றது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு மக்கள் மத்தியில் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்படவுள்ள நீரிழிவை வெற்றி கொள்வோம் கழகத்தின் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவராக டாக்டர் சிவபாக்கியன் கனகேஸ்வரன், உபதலைவராக பொ.சுந்தரராசன், செயலாளராக ரி.புவிராஜன், பொருளாளராக மருத்துவ ஆய்வு கூட நிபுணர் இ.கிருஷ்ணன், திட்ட இணைப்பாளராக கிராம அலுவலரான கே.ஸ்ரீஸ்காந்தராசா, நூலாசிரியராக டாக்டர் பி.சரேன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (201-11)

## வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானம் பொலிஸிடம் சிக்கியது

வடமராட்சி,செப்.27

பருத்தித்துறை பொலிஸ் பகுதியில் கடந்த போயா தினத்தன்று இரு வீடுகளைச் சோதனையிட்ட பொலிஸார் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர்.

காங்கேசன்துறை மூன்றாம் பிரிவு சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் சுப்பிரிண் டன் எம்.கே.சமரநாயக்காவின் வழிகாட்டலில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த உபபொலிஸ் பொறுப்பதிகாரி சேனரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தச் சோதனை நடவடிக்கையை மேற் கொண்டனர்.

பருத்தித்துறை சிவன் கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த வீடொன்றில் 26 மதுபானப் போத்தல்களும், புலோலி சாரையடிப் பகுதியைச் சேர்ந்த வீடொன்றில் 10 மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். இவ்விரு வீட்டு உரிமையாளர்கள் மீதும் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் அவர்கள் கூறினர். (உ-236)

## இரணைமடு குடிதண்ணீர் விநியோகம்; யாழ்ப்பாணத்தில் விரைவில் அலுவலகம்

யாழ்ப்பாணம்,செப்.27

இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கான அலுவலம் இரு வாரங்களில் யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய இருவரும் இணைந்து இவ்வலுவலகத்தைத் திறந்து வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி- யாழ். குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடமாநில உதவிப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய எந்திரி தி.பாரதிதாசன் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 20 ஆம் திகதி முதல் திட்டப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் கே.எல்.எல்.லால் பிரேம்நாத் திட்டப் பணிப்பாளருக்கான நியமனக்கடிதத்தை கடந்த 17 ஆம் திகதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (201-302)




## மல்லாகம் மகா வித்தியாலய 150 ஆவது ஆண்டு விழா

சுன்னாகம்,செப்.27

மல்லாகம் மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் வரும் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இவ்விரு நாள் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

முதல்நாள் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மே.யோ.சாந்தசீலன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இரண்டாம் நாள் 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழாவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன் கௌரவ விருந்தினராகவும், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மலர் வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா. தனபாலனும், மதிப்பீட்டுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியை வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் திருமதி பா. பாஸ்கரன் பெற்றுக் கொள்வார். (உ-38)

## வறிய மாணவர்களுக்கு உதவியளிப்பது கற்றலை அவர்கள் தொடர ஊக்குவிக்கும்

### கோட்டக் கல்விப் பணிப்பாளர் உரை

சுன்னாகம்,செப்.27

வறிய மாணவர்களுக்கு உதவியளிப்பதன் மூலம் அவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கான சூழலை உறுதிப்படுத்த முடியும்- இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன்.

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் 148 மாணவர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைப் பொதிகளையும், 4 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் சு. ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

வறுமை காரணமாகப் பாடசாலைக் கல்வியை பல மாணவர்கள் இடைநிறுத்தும் சூழ்நிலை உள்ளது. இப்பாடசாலை இடம் பெயர்ந்த பின்னும் இடர்களின் மத்தியில் செயற்படுகிறது. இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் பலரும் இடம்பெயர்ந்தோர். முகாம்களிலிருந்து பல்வேறு வசதியீனங்களுடன் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் வாழ்பவர்களாவர். இவர்களின் நிலை யறிந்து உதவுவதனூடாகக் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்த பாடசாலைச் சமூகம் நடவடிக்கை எடுத்தமை பாராட்டுக்குரியது.

வெளிநாட்டில், சர்வதேச தொண்டு நிறுவனத்தில் பணியாற்றும் சபேசன் அவர்கள் இவர்களுக்கு உதவ முன்வந்தமை முன்மாதிரியான செயலாகும்.

வறிய மாணவர்களின் பொருளாதாரச் சவால்களைக் களைவதன் மூலம் அவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்பதை உறுதிப்படுத்த முடியும். அத்துடன் சமூக மட்டத்தில் பின் தங்கிய நிலையிலிருந்து முன்னேற்றம் காணக் கூடிய பிரஜையாக ஒவ்வொரு மாணவனையும் உருவாக்க இத்தகைய [illegible]

## வீடமைப்புப் பயனாளிகள் தெரிவில் தென்மராட்சியில் பாகுபாடா?

கைதடி,செப்.27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் பல குறைபாடுகள் இடம்பெற்றிருப்பதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனந் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தெரிவில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களை விட வசதி படைத்த பலரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் சில இடங்களில் பிரதேச ரீதியாக அதிகமானோர் தெரிவும் இடம்பெற்றுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

எனவே இது சம்பந்தமாகக் கிராம சேவையாளர்களை அணுகிக் கேட்டபோது இந்த தெரிவிற்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என அவர்கள் கை விரிக்கின்றனர்.

இது பற்றிப் பிரதேச செயலகத்தில் கேட்டால், ''யாழ். செயலகம் சென்று கேளுங்கள். எங்களுக்கும் இத்தெரிவுக்கும் எதுவித தொடர்பும் இல்லை'' எனக் கூறுகின்றனர்.

செயலகத்தில் இருக்கின்ற வீடமைப்புத்திட்ட அலுவலகத்திற்கு எதிர்பார்ப்புகளுடன் பல சிரமங்களின் மத்தியில் செல்லும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கும் பயன் கிடைக்காது ஏமாற்றமே மிஞ்சுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனமெடுத்து மீண்டும் மீளாய்வு செய்து இவ்வீடமைப்புத் திட்டத்தை வழங்க வேண்டும் எனவும் பல பொது அமைப்புக்களாலும் பாதிக்கப்பட்ட மக்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (201-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Super Line இன் *Super Luxury* பஸ்சேவை

இலங்கையின் முதற்தர போக்கு வரத்து நிறுவனமான Super Line இன் பஸ் சேவைகள் யாழ். மாவட்டத்திற்கும் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

★ தினமும் யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ்ப்பாணம் சேவைகள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட இருக்கை வசதிகள்
★ ஒவ்வொரு பயணிக்குமான காப்புறுதி வசதி
★ குறைந்த கட்டண வசதி
★ நட்புறவுடன் பழகும் ஆளணி வசதிகளைக் கொண்டது.

தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம்: 0774338423, 0772067627.
கொழும்பு: 0114579017, 0773686948.


## வடக்கில் சிங்களம் கற்பிக்கும் ஆசிரியருக்கு மொழிப் பயிற்சி

சுன்னாகம், செப்.27

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளது. இதன்படி, சிங்கள மொழித் தேர்ச்சியுடைய வளவாளர்களை முதற்கட்டமாகப் பயிற்றுவிக்கவுள்ளது.

இவர்களில் ஒரு தொகுதியினருக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் சங்கமம் அரங்கில் 10 நாள் வதிவிடப் பயிற்சி நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இப்பயிற்சிகள் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-38)

## சாட்டியில் உணவகம்

வேலணை சாட்டி கடற்கரைக்குத் தினமும் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. எனவே அவர்களின் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வேலணைப் பிரதேச சபை உணவகம் ஒன்றை அங்கு அமைக்கவுள்ளது.

இந்த உணவகத்துக்காக 7 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக வேலணை பிரதேச சபைச் செயலாளர் க.தவராசா தெரிவித்துள்ளார். (201-7)


# Uk யில் படிக்கவும் வேலை செய்யவும் ஓர் வாய்ப்பு !!

2010 நவம்பர் மாதத்திற்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன! விரையுங்கள்!

குறைந்தபட்ச மாணவர்களே தெரிவு செய்யப்படுவர்.
உடனடியாக CAS கடிதம் கொடுக்கப்படும்.

**டிப்ளோமா**

- உயர்தர டிப்ளோமா
- பட்டதாரி டிப்ளோமா
- உயர்தர பட்டதாரி டிப்ளோமா
- கௌரவ பட்டதாரி டிப்ளோமா மற்றும் MSC / MBA பட்டதாரி படிப்பிற்காக

உங்கள் அருமையான சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!!

Tier 4, "A" தராதரத்திற்கு மேலான கல்லூரி, பல்கலைக்கழகங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன. உடனே தொடர்பு கொள்ளவும்.

## COLLEGE OF MANAGEMENT STUDIES (CMS)

Jaffna Branch
Mrs. P. Kokulan - Mob: 077 351 5552 Mr. Shethooran - Mob: 077 888 8616
No. 62, Vembadi Rd, Jaffna. Tel No :- 021 320 1043
**Vavuniya**
Mr. S. Kamaladasan - Mob: 077 605 9662

**Head Office:**
No.50, 2/11 Galle Road, Colombo Plaza, Colombo 6.
Ms. C. Indrarathna. Tel No: 0113158223
web: www.cmslk.com / email:chethi009@yahoo.com





வீடுகளுக்கான கதவு, யன்னல்களுக்கான கேட்டின் உங்கள் விருப்புப்படி வீடுகளுக்கு வந்து அளவு எடுத்து தைத்துத் தரப்படும்

# ஐடியல் கேட்டின்

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய், 0773013239, 0779947466.



# தீபாவளியை முன்னிட்டு TIP TOP சொகுசு பஸ் (AC.Baloon) 27.09.2010 திங்கட்கிழமை தொடக்கம் (யாழ்.கொழும்பு)

ரூபா ~~1200~~/ 900/= குறைக்கப்பட்டுள்ளது

**எமது பிரதான காரியாலயம்-கொழும்பு**
296/A, காலி வீதி, வெள்ளவத்தை.
0112361144, 2364999, 0773236354

**எமது பிரதான காரியாலயம்-யாழ்ப்பாணம்**
வின்சர் தியேட்டர் (சதோச அருகாமையில்)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0217903073, 0777351588, 0773236354

கிளை:
**RB.BOOKING CENTRE**
நவீன சந்தை கீழ்த்தளம் (வைரவர் கோயில் அருகாமை)

| யாழ்ப்பாணம் BOOKING CENTRE | Colombo BOOKING CENTRE |
|---|---|
| 1) | 1) |
| 2) | 2) |
| 3) | 3) |

**யாழ்ப்பாணம் BOOKING CENTRE**

01) VINAYAGAR COMMUNICATION
SITHANKERNY JUNCTION JAFFNA.
0212250001/0778932805

2) IYNKARAN MOTORS MARKET VIEW, JAFFNA ROAD MANIPAY.
0215671073/0215671074

03) LANKA FUEL MART
NO.173, PALALY ROAD
PARAMESHWARA
JUNCTION THINNAWELI
SOUTH JAFFNA.
0212222041

04) BHARATHY. COM
PALALY ROAD KONDAVI
0212225148

05) AJI COMMUNICATION
CHULIPURAM EAST, CHULIPURAM.
0779346534

06) வளர்பிறை பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
0217913186/0776283429

07) MAGNIAJI STORES
NO.866, K.K.S. ROAD, JAFFNA.
0773484992

08) THE PHONE SHOP
MAIN STREET, NELLIYADY
KARAVEDDY.
0772850285/0212263770

**COLOMBO BOOKING CENTRE**

01) COSY RESTAURENT (PVT)
NO.25, STATION ROAD
WELLAWATTE. COLOMBO-06
0112504020/0112581359

2) MICRO COMPUTER TECHNOLOGY
NO.224, 1st FLOOR GALLE ROAD
WELLAWATTE, COLOMBO-06
0112363322

03) ARB AUDIO VIDEO VISION
NO.358, GALLE ROAD,
WELLAWATTE COLOMBO-06
0112505538/0777328279

04) VASANTHAN STORES
NO.101C, HAMDAN LANE
WELLAWATTE COLOMBO-06
0777667503/0773593469

05) VIVIAN TRADE
NO.308C, GALLE ROAD,
WELLAWATTE, COLOMBO-06
0112587639/0773499570

06) BAGAVAN TRAVELS
NO.89, KOTAHANA STREET COL-13
0112435183/0752726961

07) GEETHA COMMUNICATION
NO.79,MESSENGER STREET,
COLOMBO-12
0755843282

08) DATACOM COURRIER SERVICES
NO.3,W.A.De SILVA MAWATHA,
COLOMBO-06
0112596140



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

24.09.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2296

வெற்றி எழுத்து: U
வெற்றி எண்கள்: 4 4 5 8 3 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 4 | 4 | 5 | 8 | 3 | 8 | ரூபா.13,214,394/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 4 | 4 | 5 | 8 | 3 | 8 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 5 | 8 | 3 | 8 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 5 | 8 | 3 | 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 123 |
| 4 பரிசுகள் | | | | | 8 | 3 | 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1222 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 8 | ரூபா. 100/= | பரிசுகள் 12142 |
| 6 பரிசுகள் | | | | | | | 8 | ரூபா. 20/= | பரிசுகள் 120532 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 4 | 4 | 5 | 8 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 4 | 4 | 5 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 125 |
| 9 பரிசுகள் | | 4 | 4 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1226 |
| 10 பரிசுகள் | | 4 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12090 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 48150 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,231,940.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



# Nestle NESPRAY சர்வதேச சிறுவர் தினம் 2010

நெஸ்லே நிறுவனம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம், வலயக் கல்வி அலுவலகங்கள், மாநகரசபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சிறிலங்கா காவல்துறை ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தும் நெஸ்பிறே சிறுவர் உலகம்.

எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில்....

**உங்கள் குழந்தையின் அறிவு, மகிழ்வு மற்றும் வினோதம்**

★ மெரிகோ ரவுண்ட் ★ வினோத விளையாட்டுக்கள் ★ பவுண்சர் ★ பலூன் மாடி
★ பால்வீடு ★ குழந்தைகள் சினிமா ★ சிறுவர் இசைநிகழ்ச்சி
★ மேலும் விசேட அம்சங்கள் பல
★ விசேட வைத்திய சந்திப்பிற்கு குழந்தையை இலவசமாக பங்குபற்ற வைக்க முடிவதுடன் தொலைக்காட்சி நாடகக் கலைஞர்களுடன் களிப்புடையவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
★ குழந்தைக்கான சேமிப்புக் கணக்கை வெல்லவும் வாய்ப்பு

**களிப்படையுங்கள்.... பரிசை வெல்லுங்கள்....!**

நெஸ்பிறே என்றிச் 400 கிராம் பைக்கற்றின் மேல் அட்டையை கொண்டு வர மறக்கவேண்டாம்.

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சுப்பிரமணியம் பூங்காவிற்கும் இடைப் பட்ட வீதியில் குழந்தைகளின் ஊர்வலம் ஆரம்பமாகி சிறுவர்களின் அலங்கரிப்புடன் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும்.

நெஸ்பிறே சிறுவர் உலகைக் காண வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


வாரீர் சிறுவர் உலகை கண்டு களித்திட....
மகிழ்வீர் உங்கள் பிள்ளைகளின் திறமையைக் கண்டு.

(103785)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணியில் 160 ஆண்டுகளைக் கடந்த பாஷையூர் சென் அன்ரனீஸ் மகளிர் வித்தி.

யாழ்.நகரின் கிழக்கே அலைகடல் தாலாட்டும் பாஷையூர்ப் பதியினிலே அருள் பாலிக்கும் புனித அந்தோனியார் திருத்தலத்தின் முன்பாக அறிவுச் சுடர் வீசும் அகல் விளக்காக அழகுடன் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதுதான் யாழ்.பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம். இக்கல்விக்கூடம் 160 ஆண்டுகளாக அறிவுப்பசிக்குக் கல்வி என்னும் விருந்து ஊட்டி வருகிறது. செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி கோலாகலமாக 160 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.



நீண்ட பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலை 1850ஆம் ஆண்டு மேலைத்தேச குருக்களால் ஓலைக் கொட்டில் ஆரம்பிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. கத்தோலிக்க சமயத்தையும், தமிழையும், ஆங்கிலத்தையும் புகட்டி மாணவர்களை அறிவுசார் ஆசார சீலர்களாக வளர்த்து வந்தது.

வண. பிதா சின்னப்பா அடிகளார் 1906ஆம் ஆண்டில் செங்கற்களால் சிறிய பாடசாலை யொன்றை அமைத்தார்.
பேதுருப்பிள்ளை என்னும் ஆசான் கல்விக்கண்ணைத் திறந்து பாஷையூர் கிராம மக்களை வழிப்படுத்தினார். அந்த நாள்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் சனிக்கிழமைகளில் வீடுகளுக்குச் சென்று பாட்டுப்பாடி பெற்றோர், பெரியோரை வணங்கி குருதட்சணை பெறுவது வழக்கமாக இருந்து வந்தது.

மாணவர் வரவு அதிகரிக்கவே வண. பிதா டெலான்ஸ் அடிகளார் 1918 இல் 72 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட ஒரு நிரந்தரக் கட்டடத்தை பாஷையூர் ஆலய வளவுக்குள் கிழக்கு புறமாகக் கட்டி முடித்தார். (அது தற்போது இல்லை) 1924 இல் டானியேலும் அவரைத் தொடர்ந்து ஆசீர்வாதமும் அதிபர்களாகக் கடமையாற்றினர். அந்த நாள்களில் புனித அந்தோனியார் றோ.க.த.க. பாடசாலை என்ற பெயரில் இருபாலாரும் இங்கு கல்வி கற்று வந்தனர். தரம் 1 முதல் 5 வரை மட்டுமே வகுப்புகள் நடைபெற்றன.

1928 தொடக்கம் 1930 வரை திருக்குடும்ப கன்னியர்களான நற்றிவிற்றி, டென்டோனா, மார்த்தா ஆகிய மூவரும் யாழ்ப்பாண




மடத்திலிருந்து வந்து கடமையாற்றிய முதல் அருட்சகோதரிகளாவர். 1930 - 1948 வரை மாசிலாமணி, றொக்தேஷன், அகஸ்ரின் ஆகியோர் அதிபர்களாகக் கடமை புரிந்தனர்.

அருட்சகோதரி மாகிறேற் அதிபராகவும் சகோதரி கில்டகாட் உதவி ஆசிரியராகவும் பாக்கியம் செபஸ்ரியாம்பிள்ளை, விக்ரோறியா, ஜேற்றூட் ஆகியோர் துணை ஆசிரியைகளாகவும் 1949 இல் பொறுப்பேற்று, கடமைபுரிந்தனர். 150 மாணவ மாணவியர் அப்போது கல்வி பயின்றனர்.

ஐந்தாம் வகுப்பு கற்று முடிந்ததும் வேறு பாடசாலைக்குச் சென்றோர் தவிர ஏனையோர் வீட்டில் இருப்பார்கள். அப்பொழுது கன்னியர்கள் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைச் சேர்த்து ஆறாம், ஏழாம் வகுப்புகளை ஆரம்பித்தனர். மாணவர் தொகை அதிகரிப்பைத் தொடர்ந்து 1950ஆம் ஆண்டு வண. பிதா நீக்கிலஸ் அடிகளாரின் பெரு முயற்சியால் இரண்டாவது கட்டடம் கோயிலுக்கு மேற்குப் பக்கமாகக் கட்டப்பட்டது.

ஆசிரியர்கள் 8 பேரையும் 200 மாணவர்களையும் உள்ளடக்கியிருந்த பாடசாலையில் அதிபர் அருட்சகோதரி மாகிறேற்றின் முயற்சியால் 1951 இல் 9 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். அருட்சகோதரி பப்ரிஸ் அதிபராக இருந்த 1953 இல் இப்பாடசாலையில் இருந்து மாணவர்கள் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றியமை குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும்.

நாளடைவில் மாணவர் தொகை அதிகரிக்க மேலுமொரு கட்டடம் கட்டப்பட்டது. ஆண்கள் ஆரம்ப வகுப்புகளில் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏனைய மேல்வகுப்பு ஆண் மாணவர்கள் அருகிலுள்ள கொழும்புத்துறை றோ.க. சாதனா பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

அதன் பின் அருட்சகோதரி லிகோரி அதிபராகக் கடமையேற்று மாணவர்களை இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஊக்குவித்தார். இதன் விளைவாக மாணவர்கள் கேடயங்களையும், வெற்றிக் கிண்ணங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலுமொரு கட்டடம் கட்டுவதற்காகப் பணச்சடங்கு (அற்ஹோம்) செய்து ஊர்மக்களிடம் இருந்து ஒரு தொகைப் பணத்தைப் பெற்றனர்.

அருட்சகோதரி பேணடீன் 1959 முதல் 1971 வரை அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் திறமைச் சித்திகளைப் பெற்றதன் காரணமாக பாடசாலையின் சிறப்பு அயற்கிராமங்களிலும் உணரப்பட்டது. மாணவர்கள் இப்பாடசாலையைத் தேடிவர ஆரம்பித்தனர். இடநெருக்கடி காரணமாக 1971இல் ஆரம்பப் பிரிவில் உள்ள 300 ஆண் மாணவர்களும் கொழும்புத்துறை ஆண்கள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டனர். அதிபர் பேணடீன் இடமாற்றம் பெற்றுச் செல்ல 1972 இல் திருமதி எம்.இம்மனுவேல் பதில் அதிபராக ஒருவருடம் சேவையாற்றினார்.

நிரந்தர அதிபர் இன்மையால் பாடசாலை வளர்ச்சி மட்டம் தடைப்படலாம் என உணர்ந்த மக்கள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அருட்சகோதரி லீயோவை புதிய அதிபராகப் பெற்றனர். 1974 இல் சாதாரணதரப்பரீட்சைக்கு 24 மாணவர்கள் தோற்றி 16 பேர் சித்தியடைந்தனர்.

இக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சீ.எக்ஸ்.மாட்டீனால் இரண்டு மாடிக் கட்டடம் 1977 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதுவே தற்போதைய பாடசாலையின் பிரதான கட்டடமாகும். அத்துடன் கோயிலுக்குக் கிழக்கே அமைந்திருந்த ஆரம்பகால செங்கல் கட்டடம் அகற்றப்பட்டது. மண்ணின் மைந்தனான அருட்திரு. இராயப்பு அடிகளாரால் அடிக்கல் இடப்பட்டு அருட்திரு. மகேந்திரன் அடிகளால் வீதிக்கு கிழக்குப்புறமுள்ள இரண்டு மாடிக்கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு அருட்சகோதரி எம்.மரியகொறற்றி அதிபரானார். 21 ஆசிரியர்களுடன் 750 மாணவர்கள் கல்வி கற்றதுடன் ஏ.பீ.சீ. என சமாந்தர வகுப்புகள் காணப்பட்டன. கழிப்பிடப் பற்றாக்குறை கிராம மக்களின் நிதியுதவியுடன் தீர்க்கப்பட்டது. கலையார்வம் மிக்க அதிபரால் சங்கீத, நடன பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1990 இல் இடமாற்றம் பெற்றார்.

போர்க்காலச் சூழலில் புதிய அதிபராக அருட்சகோதரி கொஸ்கா பணியேற்றார். ஒழுக்கமும் கல்வியும் இரு கண்ணெனக் கொண்ட அதிபராக மாணவர்களை வழிநடத்தினார். இவரைத் தொடர்ந்து உப அதிபராகப் பயணியாற்றிய ஏ.ஜெயராஜகுலேந்திரன் அதிப்ராகப் பொறுப்பேற்றார். தொடர்ச்சியான இடப் பெயர்வுகள் பாடசாலை வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்திய போதும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் விஞ்ஞான ஆய்வுகூட அறை, துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புத் தரிப்பிடம், சிற்றுண்டிச்சாலை என்பன அமைக்கப்பட்டன.

2002 ஆம் ஆண்டு ஞானப்பிரகாசம் புதிய அதிபராக நியமனம் பெற்றார். மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் உயர் நிலைபெற ஊக்கமளித்தார்.

தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் புதிய அதிபராக திருமதி மேரி கலிஸ்ரா செல்வநாயகம் பொறுப்பேற்று இன்றுவரை நற்சேவையாற்றி வளர்ச்சிப் பாதையிலே பாடசாலையை நடத்திச் செல்கிறார், அண்மைக் காலங்களில் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்நிலையில் உள்ளன.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கூடிய கவனஞ் செலுத்தப்படுகிறது. விளையாட்டு, கலைப் போட்டிகளில் வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் குறிப்பிடத்தக்க திறமைகள் பதியப்பட்டுள்ளன. கலாசார, சமய, சமூக, மனித விழுமியங்களின் விளை நிலமாக இப்பாடசாலை விளங்கி வருகின்றது.

பௌதீக வள கட்டமைப்புகள் பேணப்பட்டு வருகின்றன. ஆரம்பப்பிரிவு மேல்மாடிக்கட்டடம், தண்ணீர் தாங்கி, சமயலறை, சுற்றுமதில், நுழைவாயில் வளைவு, கணினிக் கூடம் என்பன நிறுவப்பட்டுள்ளன.

**எஸ்.யேசுதாஸ்**

கல்விப் பணியிலும், சிறந்த பிரஜைகள் உருவாக்கத்திலும் 160 ஆண்டுகள் கடந்து பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம் வீறுநடைபோடுகிறது. இந்தப் பாடசாலை நீண்ட கல்விப்புல பயணத்தில் பல துறவிகள், ஆசிரியர்கள், பல்துறை அதிகாரிகள், சேவையாளர்கள், தலைவர்களை உருவாக்கி மனித சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ந்தும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைப்பையும், வாழ்த்துக்களையும் வழங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சண்முகம்
**ஸ்ரீபாலசுந்தரம்**
(தர்ஷினி இலெக்றிக்கல்ஸ் உரிமையாளர், அச்சுவேலி)

அன்னை மடியில்
08★07★1959

ஆண்டவன் அடியில்
28★08★2010

எங்கே உம்மைத் தேடுவோம் இன்று
ஏக்கங்களே எங்கள் வாழ்க்கையாகிப் போனதையா!
தூக்கமில்லாமல் தவிக்கின்றோம் என்றும் துன்ப
நினைவுகளால் துடிக்கின்றோம்.

கடந்த (28.08.2010) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து சகலவிதத்திலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (27.09.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன உபசாரத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாத்தாவளை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1228 சிவப்பு

துலாம் 50 51 52 54 24-09-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 211,307 | 20/- | 4,226,140/- |
| 2 இலக்கங்கள் | 19,342 | 40/- | 773,680/- |
| 1 இல. + லக்கினம் | 19,188 | 60/- | 1,151,280/- |
| 2 இல. + லக்கினம் | 1,753 | 200/- | 350,600/- |
| 3 இலக்கங்கள் | 529 | 1000/- | 529,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | |
| பிரதான சீட்டிழுப்பின் பரிசுகளின் மொத்தம் | | | 8,120,700/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 567 | | 482,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 252,738 | | 8,603,200/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,943,900/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 37 38 41 43

ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 565 | 500/- | 282,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 700,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 567 | | 482,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 800,000/-


# CANADA Work Permit

## பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை - upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.

Tel : 0776 209 887


## பூநகரி பல.நோ.கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

பூநகரி பல.நோ.கூ.சங்கத்தில் கீழ்க் குறிப்பிடும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.

1) பதவி:- களஞ்சிய முகாமையாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம் - 208/16
சம்பள அளவுத் திட்டம் - 9200-10650
70X10-75X10

**2) தகைமைகள்:-**

அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் களஞ்சிய முகாமையாளர் பதவியில் 01 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த (சாதாரண தரம்) இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் அல்லது வர்த்தக கணிதம், தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவு சங்க களஞ்சிய முகாமையாளர் பதவியில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

3) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

4) விண்ணப்பப் படிவங்கள்- தலைவர், பூநகரி பல. நோ. கூ.சங்கம்-பூநகரி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்புதல் வேண்டும்.

5) விண்ணப்ப முடிவு திகதி-15.10.2010

6) வயது எல்லை - 18-45 வரை

7) தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிக்கும் பொருட்டும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படும் இடத்து நியமனத்தை இல்லாது ஒழிப்பதற்கும் வழிவகுக்கும்.

8) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

9) கணனி அறிவு கவனத்தில் எடுக்கப்படும்.

தலைவர்,
பூநகரி பல.நோ.கூட்டுறவுச் சங்கம்,பூநகரி.


## வடக்கு வாழ் மக்களுக்கு தரமான அலுவலக உபகரணங்கள் மற்றும் சேவைகள்

OLYMPIA
Germany Since 1903



ELECTRONIC TIME & ATTENDANCE RECORDERS

ELECTRONIC CASH REGISTERS

ELECTRONIC CALCULATORS

ROYAL



PROFESSIONAL/ HEAVY DUTY CURRENCY COUNTER

With Counterfeit Note Detection

Paymaster



COUNTERFEIT CURRENCY DETECTOR

With UV lamp for easy identification of fake notes

- 12 மாத உத்தரவாதம் இலவச மேலதிக சேவைகள் மற்றும் பராமரிப்பு
- முதல் தரமான நாடு முழுவதும் விற்பனைக்கு பிந்திய சேவை

exclusive sales & service agents in Sri Lanka
Business Machines Co., Ltd.
'Business Machines Building', No 1, Lake Crescent, Colombo 2.
Tel: 2 304380 Fax : 2304381 E-mail : info@biz-machines.com
Web : www.biz-machines.com
Since 1956

for further details contact -
Authorised Sales & Service Agent for Northern Region
Mr. T. Suresh - Mobile : 0773 143444

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
வடக்கில் அங்கீகாரம் பெற்ற விற்பனை மற்றும் சேவை முகவர்
சுரேஸ் - 0773 143444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியோர வாய்க்காலை புனரமைக்க வலியுறுத்து

கோப்பாய்,செப்.27

கோப்பாய், மானிப்பாய் வீதியில் தொலைபேசி நிலத்தடி கேபிள் இணைப்பு மேற்கொண்டபோது வெட்டப்பட்ட காண்களினால் இவ்வீதி மருங்கில் அமைந்திருந்த வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்கால் பல இடங்களில் மூடப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் வெள்ளநீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே அருகில் உள்ள காணிகளில் வெள்ளநீர் நிரம்புவதால் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கவனமெடுத்து இதனை சீர்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(201-72)

## மாணவர் கல்வி சுற்றுலாவுக்கு நிதி உதவி

தென்மராட்சி,செப்.27

கைதடி-நுணாவில் அரச தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்விச் சுற்றுலாவுக்கு மகேஸ்வரி நிதியத்தினர் 75 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளனர்.

பாடசாலை நிர்வாகத்தினர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்புகொண்டு மாணவர்களின் வறுமை நிலையைச் சுட்டிக்காட்டியதையடுத்து அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் மகேஸ்வரி நிதியத்தினால் இந்தத் தொகை வழங்கப்பட்டது.

நிதி கிடைத்ததையடுத்து பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (201-207)

## கொடிகாமம் பஸ் நிலைய மலசலகூடத்தை திறவுங்கள்

தென்மராட்சி,செப்.27

கொடிகாமம் பஸ் நிலையத்தில் உள்ள மலசலகூடம் அண்மைக் காலமாக மூடப்பட்டுக் காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மலக் கழிவுகளை அகற்றுவதில் ஏற்படும் சிரமங்களால் பிரதேச சபையினால் இது மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொதுமக்கள் பிரதேசசபை அலுவலகத்தில் மலக்கழிவு அகற்றும் வாகனம் இருந்தும் அதனைப் பயன்படுத்துவது இல்லையெனவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலரும் சுகாதாரத் திணைக்களத்தினரும் நகர வர்த்தகர்களுக்கென அமைக்கப்பட்டு மூடப்பட்டுள்ள மலசலகூடத்தினைத் திறக்குமாறு பிரதேச சபைக்கு அறிவித்தும் இதுவரை திறக்காதது குறித்தும் மக்கள் கவலை தெரிவித்தனர். (201-207)

## சுகமஞ்சரி வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,செப்.27

சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பினால் சுகமஞ்சரி சமூக சுகநல காலாண்டு சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியத்துறையிலுள்ள பல பிரிவுகளில் சிறந்து விளங்கும் வைத்தியர்களின் கருத் துக்களின் மூலமும் யாழ்.பல்கலைக் கழக சமுதாய மருத்துவத்துறை மருத்துவ பீடத்தின் தயாரிப்பு ஆலோசனைகளுடனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகை தொற்று நோய்கள், எயிட்ஸ் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (201-315-313)


ஃபுபே செட்
வீட்டுக்கும் மற்றும் ஹோட்டலுக்கு



ரூபா 3950/-யிலிருந்து

டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை லிபர்டி பிளாஸா
2439422

# பாடசாலை நீர் இறைப்பு இயந்திரம் கொள்ளை ஆட்சேபித்து மாணவர், பெற்றோர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப்.27

மட்டக்களப்பு மாநரசபைக் குட்பட்ட மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் கடந்த வெள்ளிக் கிழமை காலை முதல் பாரிய ஆர்ப் பாட்டத்தில் ஈடு பட்டனர்.

வித்தியாலயத்துக்குச் சொந்த மான நீர் இறைக்கும் இயந்திரத் தைக் கொள்ளையர்கள் கொள்ளை யிட்டுச் சென்ற சம்பவத்தைக் கண் டித்தும், உடனடியாகக் கொள்ளை யர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரியுமே இப்போராட்டம் நடத் தப்பட்டது என பாடசாலை அதி பர் எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.

ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் வரை வகுப்புகளைக்கொண்ட இப்பாட சாலையில் 230 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இப்பாட




சாலைக்கு இதுவரை காவலாளி கள் நியமிக்கப்படவில்லை.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலி ஸார் தீவிர விசாரணையை மேற் கொண்டனர். அண்மைக் கால மாக இப்பாடசாலையில் திருட் டுச் சம்பவங்கள் அதிகரித்துள் ளன என அதிபர் தெரிவித்தார்.

யுத்தம் மற்றும் அனர்த்தங் களால் பெரி தும் பாதிக்கப்பட்ட இப்பாடசாலையில் கடந்த கிழக்கு மீட்பு யுத்தத்தின்போது, இடம் பெயர்ந்த அகதிகள் தங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலி ஸாரிடம் வித்தியாலயத்துக்கு இரவு நேரத்தில் பாதுகாப்பு வழங்கு மாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தனர். காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்திலேயே வித்தியால யம் அமைந்துள்ளது. (ளி)

# முஸ்லிம்களின் மறக்கமுடியாத காவியத் தலைவன் அஷ்ரப்

## கத்தமுல் குர்ஆன் நிகழ்வில் உரை

திருகோணமலை, செப்.27

முஸ்லிம் சமூகத்தின் மறக்க முடியாத ஓர் காவியத் தலைவனாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் திகழ்கிறார். முஸ்லிம் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையும், செயலூக்கமும், துணிச்சலும் அவரை ஓர் உன்னத தலைவனாக்கியுள்ளன. அந்தச் செம்மலை முஸ்லிம் மக்களின் நெஞ்சங்களில் இருந்து பிரிக்க முடியாது.''

இவ்வாறு இளைஞர் காங்கிர ஸின் திருகோணமலை நகரக் கிளைத்தலைவர் எம்.சி. முகம்மது அஸ்வர், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பத்தாவது ஆண்டு கத்தமுல் குர்ஆன் நிகழ்வுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைஞர் காங்கிரஸின் செய லாளர் எஸ்.எம்.சமீரின் திருகோண மலை தக்கியாவீதி இல்லத்தில் உள்ள மண்டபத்தில் அண்மை யில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

அஸ்வர் தொடர்ந்து உரையாற்று கையில், ''அஷ்ரப் மட்டும்தானா முஸ்லிம் சமூகத்திற்குச் சேவை செய்தவர் என்று பலர் கேட்கின் றனர். இல்லை ஏனைய தலைவர் களும் சேவை செய்துள்ளனர். எனி னும் யாருடைய தயவிலும் தங்கி யிராமல் தன்னுடைய சமூகத் திற்காக சேவை செய்து, தன்னுயி ரையும் அர்ப்பணித்தவர் இந்த விடுதலை வீரர்'' - என்றார்.

முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினர், சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர், முஸ்லிம் காங் கிரஸின் குச்சவெளிப் பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.றபாய்டின், பட்டணமும் சூழலும் மத்திய குழுச் செயலாளர் ஆசிரியர் ஏ.ஜே. முகமட்சாலி, மத்திய குழுத் தலை வர் எம்.ஏ.எம்.முத்தலிப், பல உயர் அதிகாரிகள் ஆகியோரும் இதில்கலந்துகொண்டனர். (ளி)

# கந்தசாமியின் சேவைக்கு பிரிட்டிஷ் மகாராணி பாராட்டு

மட்டக்களப்பு, செப். 27

மட்டக்களப்பு களுதாவளைக் கிராமத்தில் பிறந்த வீரபத்திரன் - கந்தசாமி தமது உன்னத சேவைக் காக, அண்மையில் பிரிட்டிஷ் மகா ராணியாரால் கௌரவிக்கப் பட்டார்.

கந்தசாமி பிரிட்டிஷ் அரசின் வேலை வாய்ப்புத் திணைக்களத் தில் கடந்த 20வரு டங்களுக்கு மேலாக சிரேஷ்ட ஆலோசகரா கப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் ஆற்றிவரும் சேவை யைப் பாராட்டி வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் மகாராணியாரின் வரு டாந்த தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட் டார். அதில் இவர் தமது பாரியார் சகிதம் கலந்துகொண்டார்.

கந்தசாமி 1970ஆம் ஆண்டு நிர்வாக சேவையில் சேர்ந்து உதவி அரச அதிபராகவும் உதவி உண வுக் கட்டுப்பாட்டாளராகவும் பொது நிர்வாக அமைச்சின் உத விச் செயலாளராகவும் நீதி அமைச் சின் சிரேஷ்ட உதவிச் செயலாள ராகவும் பணிபுரிந்துள்ளார்.

அத்துடன் தென் அமெரிக்கா வின் கயானா நாட்டில் பிரதேச அபி விருத்தி அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணி புரிந்து நிர்வாக அபிவிருத்திப் பணிகளில் நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

இவர் தமது ஆரம்ப காலத்தில் நிர்வாகப் பணிகளில் பிரட்மன் வீரக்கோன் தலைமையின் கீழ் ஈடுபட்டு, அனுபவ முதிர்ச்சி பெற் றுள்ளார். (ளி)

# படுகொலையுண்டோர் நினைவுதினம் கடைப்பிடிப்பு

வெல்லாவெளி, செப்.27

1990ஆம் ஆண்டு செப்ரெம் பர் 20ஆம் திகதி மட்டக்களப்பு சவுக்கடிக் கிராமத்தில் இனவெறி யர்களால் படுகொலை செய்யப் பட்டவர்களின் நினைவுதினம் 20ஆம் திகதி திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஆண்கள், பெண்கள், சிறி யோர் - முதியோர் என்ற எதுவித பாகுபாடுமின்றி குரூரமாக 42 அப்பாவித் தமிழ் மக்கள், 1990 ஆம் ஆண்டு படுகொலை செய் யப்பட்டார்கள்.

இப்படுகொலைச் சம்பவத் தின் 20ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி, கடந்த திங்கட் கிழமை சவுக்கடிக் கிராமம் எங் கும் வெள்ளைக்கொடிகள் கட் டப்பட்டு, இந்து ஆலயங்களி லும், கிறிஸ்தவ தேவாலயங் களிலும் விசேட பூசைகளும் ஆராதனைகளும் நடத்தப்பட் டன. இல்லங்களில் அன்னதான வைபவங்களும் இடம்பெற்றன. (ளி)



திருகோணமலை முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம் இசை நடன கலாலயத்தின் பத்தாவது ஆண்டு சிறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது. மாணவர்களின் இசை நிகழ்வின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# தொழிலாளர்கள் தாக்கப்படுவதை அரசு தடுக்காவிட்டால் மலையகத்தில் பூகம்பம் வெடிக்கும்; தடுக்கமுடியாது

## நாடாளுமன்றில் இராதாகிருஷ்ணன் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, செப். 27

''தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கா விட்டால் மலையகத்தில் பூகம் பம் வெடிக்கும். இதனை எவரா லும் தடுக்க முடியாது'' என நுவ ரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறி யவை வருமாறு:-

இந்த நாட்டில் தமிழர்களும் சிங்களவர்களும் நட்புடன் நட மாடும் நிலை ஏற்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக இந்தச் சபையில் ''புலி, புலி'' என்று கூச் சல் போடுவதை நிறுத்த வேண்டும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் அடிக்கடி தோட்டப்புறத் தமிழர் கள் தாக்கப்படுகிறார்கள். இப் பிரதேசத்தில் எந்த ஒரு சம்பவம் இடம்பெற்றாலும் தோட்டத் தொழிலாளர்களே தாக்கப்படு கின்றனர். தோட்டங்களில் இருந்து விரட்டியடிக்கப்படுகின்றனர். வீடுகளுக்குத் தீ வைக்கப்படு கின்றது.

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பிரதமரும் ஜனாதிபதியும் இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண் டும். இல்லையேல் இதன் தாக்கத் தால் மலையகத்தில் பூகம்பம் வெடிப்பதை தடுக்க முடியாது.

மலையகத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழர்கள் தமது தாய் மொழியில் முறைப்பாடு களைப் பதிவு செய்யவும், நீதிமன் றங்களில் தமிழில் விசாரணை கள் நடத்தப்படவும் வேண்டும்.

அதேபோன்று அரச அலுவல கங்களில் தமிழ்பேசும் அதிகாரி கள் நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பதவிகளுக்கு 2,500 மலையக இளைஞர் - யுவதி களுக்கு நியமனங்களை வழங்க இணக்கம் காணப்பட்டது. இதனை மறுபரிசீலனை செய்து நியம னங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரி வித்தார். (ளி)

# கைக்குழந்தையை விற்பதற்கு கொண்டுசென்ற மூவர் கைது

கண்டி,செப். 27

கண்டி - ரங்கலை பொலிஸ் பிரிவிலிருந்து கைக்குழந்தை ஒன்றை சிலாபம் பகுதிக்கு விற் பதற்காகக் கொண்டுசென்றனர் என்ற சந்தேகத்தில் குழந்தையின் தாய் உட்பட்ட மூவரை கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குழந்தையின் தாய், குழந்தையை விலை கொடுத்து வாங்கவிருந்த வர் மற்றும் தரகர் ஆகியோரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தெல்தெனிய நீதி மன்ற நீதிவான் பிரசன்ன லிய னகே முன் ஆஜர் செய்யப்பட்ட போது மேலதிக விசாரணைக் காக இம்மாதம் 29 ஆம் திகதி வரை தடுத்து வைக்கும்படி நீதி வான் பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ளி)

# சூதாட்ட நிலையம் முற்றுகை பெண்களுடன் 74 பேர் கைது

கண்டி,செப். 27

கண்டிநகரில் நீண்டகாலமாக இயங்கிவந்த 'கசினோ' சூதாட்ட நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை கண்டி குற்றத்தடுப்பு புலனாய்வு பொலிஸாரால் சுற்றிவளைக்கப் பட்டதில் அங்கிருந்த ஒன்பது பெண்கள் உட்பட 74 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முற்றுகையின் போது அங்கு சூதாட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட லட்சக்கணக்கான பணமும் கைற் றப்பட்டுள்ளது. கைதானவர்களில் சூதாட்ட நிலையத்தில் பணிபுரிந்த 25 பேரும் உள்ளடங்குகின்றனர்.

தகவலொன்றுக்கமைய மத் திய மாகாண துஷ்பிரயோக ஒழிப் புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலை மையில் இந்த முற்றுகை மேற் கொள்ளப்பட்டது. (ளி)

# அளவுக்கதிகமான 'பரசிற்றமோல்' எமனானது சிறுமி உயிருக்கு

கொழும்பு,செப். 27

தம்புள்ளை பகுதியில் 'பர சிற்றமோல்' மாத்திரையை அதி களவில் பாவித்த எட்டு வயதுச் சிறுமியின் ஈரல் செயலிழந்ததால் உயிரிழந்துள்ளார். ஹர்ஷிகா செவ் வந்தி எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளையில் உள்ள தனி யார் வைத்தியசாலையில் காய்ச் சலுக்குச் சிகிச்சைக்குச் சென்ற இச்சிறுமியிடம் வைத்தியரால் 'பரசிற்றமோல்' மாத்திரையைப் பாவிக்குமாறு மருந்துச் சிட்டை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

எனினும், காய்ச்சல் குறை வடையாத நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க் கப்பட்ட சிறுமி மேலதிக சிகிச் சைக்காக குருநாகல் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் எனத் தெரி விக்கப்படுகிறது. (ளி)

# சுதேச ஆயுள்வேத சித்த வைத்தியர்களுக்கு ஆயுள்வேத உபகரணங்கள் கையளிப்பு

மூதூர், செப்.27

திருகோணமலைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் அலுவலகத்தின் கீழ் பணியாற் றும் சுதேச ஆயுள்வேத சித்த வைத் தியர்களுக்கு மருத்துவ உபகர ணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத் தில், திருகோணமலைப் பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகத் தகவல் தொடர்பாடல் உத்தியோ கஸ்தர் சர்வேஸ் வரன் தலைமை யில் கையளிப்பு வைபவம் வெள் ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோண மலை யிலுள்ள பொது நூலகங்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட பொதியு டனான இறுவெட்டுகளும் நூலகர் களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் குணநாதன், வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி (நிக்கொட்) திட்ட உதவிப் பணிப் பாளர் புவனேந்திரன், கிழக்கு மாகாண ஆயுள்வேத பணிப்பா ளர் திருமதி தர்மராஜா உட்படப் பல பிரதிநிதிகள் இவ் வைபவத் தில் கலந்துகொண்டனர். (சி)

# வைத்தியர்கள் பற்றாக்குறை

வெல்லாவெளி, செப்.27

களுவாஞ்சிக்குடி ஆதார வைத் தியசாலை, கல்லாறு மாவட்ட வைத்தியசாலை, பாலையடி மண்டபத்தடி நாவக்காடு ஆகிய வைத்தியசாலை போதிய வைத்தி யர்கள் இல்லை.

மண்டூர் , பாலையடிவட்டை ஆகிய வைத்தியசாலை ஒரே யொரு வைத்தியரே கடமை புரி கிறார். சம்பந்தப்பட்டவர்கள் இப் பற்றாக் குறையை நீக்க முன் வர வேண்டும் எனக் கோரிக்கை விடு டப்பட்டுள்ளது. (ளி)

# மாத்தளை மாவட்டத்தில் முதலீட்டு வலயம்

மாத்தளை, செப்.27

மாத்தளை மாவட்டத்தில் முத லீட்டு வலயமொன்றை ஏற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென எல்கடுவ தோட்டக் கம்பனிக்குச் சொந்த மான நாலன்தா தோட்டத்தில் நூறு ஏக்கர் காணி பெற்றுக்கொள்




ளப்படும் என மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ் மன் வசந்த பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீட்டாளர் கள் மூலம் இந்த முதலீட்டு வல யத்தில் பித்தளைப் பொருட்கள், மரவேலைகள், மூங்கில் பொருட் கள், மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரண உற்பத்திகள் மேற்கொள் ளப்படும் என்றும் அவர் கூறி னார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

இந்தியா - ரூ.2.00

கனடா - ரூ.2.50

அமெரிக்கா - ரூ.2.50

யூகே - ரூ.2.50
(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, ம.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் நிலவிவரும் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண 8 அம்சத் திட்டம்

## மத்திய அரசு அறிவிப்பு

டில்லி, செப். 27

காஷ்மீர் கொழுந்து விட்டெரியும் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண 8 அம்சத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் அனைத்துத் தரப்பினருடன் சுமுகத் தீர்வு காண, நீடித்து பேச்சு நடத்துவதற்கு முக்கியஸ்தர்கள் அடங்கிய தொடர்புக் குழுவை நியமிப்பது உள்ளிட்ட 8 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டம் டில்லியில் சனிக்கிழமை நடந்தது. அப்போது இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக காஷ்மீர் மாநிலத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர எட்டு அம்சத் திட்டம் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது என கூட்டத்துக்குப் பின்னர் செய்தியார்களிடம் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய படைகளை திரும்பப் பெறுவது, பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான அறிவிப்பை மறு ஆய்வு செய்வது தொடர்பாக விரிவாகப் பதிலளிக்க அவர் மறுத்து விட்டார்.

கடந்த ஜூன் மாதம் சோபூரில் நடந்த கலவரத்தின்போது கும்பலைக் கலைக்க மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் இறப்பர் குண்டால் சுட்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த நான்கு மாதங்களாக மாநிலத்தில் பெரும் வன்முறை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடந்த மோதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 105 ஐ தாண்டிவிட்டது. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகியதால் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவினரைக் காஷ்மீருக்கு அனுப்புவது என அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக்குழுவினர் கடந்த வாரம் காஷ்மீர் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

பின்னர் டில்லி திரும்பிய இக்குழுவினர், மத்திய அரசிடம் அறிக்கை அளித்ததைத் தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு ஏற்பட 8 அம்சத் திட்டம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்டவையே அந்த 8 அம்சத் திட்டங்களாகும்.

மத்திய அரசின் 8 அம்சத் திட்டத்துக்கு ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஓமர் அப்துல்லா வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் நடவடிக்கையால் மாநிலத்தில் விரைவில் அமைதி திரும்புவதுடன், அனைத்து அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுவிடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய அரசு எடுத்துள்ள முயற்சிகள் பிரிவினைவாதிகளுக்கு சாதகமாக இல்லாமல் காஷ்மீர் மக்களின் நலனுக்கு ஆதரவாக அமைய வேண்டும் என்பதே பா.ஜ.கவின் விருப்பம் என்று அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# திலிபன் நினைவு நாள் திருமா எம்.பி. அஞ்சலி



சென்னை, செப். 27

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் நீத்த திலிபனின் 23ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை வேளச்சேரியில் தாய்மண் அறக்கட்டளை வளாகத்தில் திலிபன் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் எம்.பியுமான திருமாவளவன், திலிபன் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

திலிபன் நினைவு நாளையொட்டி, தென் சென்னை மாவட்ட மருத்துவர் அணி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச மருத்துவ முகாமையும் திருமாவள வன் தொடங்கி வைத்தார்.

# வாகனத்தை தாறுமாறாக செலுத்திய பெண் பொலிஸ் சென்னையில் கைது

சென்னை மெரீனா கடற்கரையில் பெண் பொலிஸ் ஓட்டிய பொலிஸ் வான், தாறுமாறாக ஓட்டி கார், பஸ் ஆகியவை மீது மோதி தடம்புரண்டது. இதையடுத்து அந்த பெண் கைது செய்யப்பட்டார்.

சென்னை ஆயுதப்படை பொலிஸில் பணியாற்றி வரும் பெண் பொலிஸ் ரமா, வாகனம் ஓட்டும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அடையாறு பகுதியில் இருந்து ரமா வேனை ஓட்டி வந்த வேளையில் மெரீனா கடற்கரையில் காமராஜர் சாலையில் தாறுமாறாக ஓடி கார், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை இடித்து தள்ளிவிட்டு மாநகர பஸ்மீதுமோதி அவரது வாகனம் தடம் புரண்டது. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் அந்த போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**இந்தியச் செய்திகள்**

# இலங்கைக் கடற்படையினர் மீது தமிழக மரைன் பொலிஸார் வழக்கு

சென்னை, செப். 27

இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்க சென்ற மீனவர்களைத் தாக்கிய இலங்கைக் கடற்படையினர் மீது இந்திய மரைன் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில், இதுவரை நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்திய அரசு அவ்வப்போது இலங்கை அரசுடன் பேச்சு நடத்தினாலும், சில நாள்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இலங்கை கடற்படையினர், மீண்டும் தாக்குதலைத் தொடர்கின்றனர்.

இதுவரை பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் முறைப்பாடு களை ஏற்று, பொலிஸார் ஒரு வழக்குக் கூட பதிவு செய்ததில்லை.

இந்நிலையில், கடந்த 20 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நள்ளிர வில் நடத்திய தாக்குதலில், தங்கச்சி மடம் மீனவர்கள் கேபா (வயது-25), டொமினிக் (வயது - 43) ஆகி யோருக்கு வலது மற்றும் இடது முழங்கையில் முறிவு ஏற்பட்டது.

மீனவர்கள் ஆரோக்கியராஜ், ஆரோக்கிய ஆசாத், குமார், சுகந் தன், முருகேசன் மற்றும் சின்னத் தம்பி ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மீனவர் கேபாவிடம் விசாரித்த இராமநாதபுரம் மரைன் பொலிஸ் டி.எஸ்.பி. தியாகராஜன், தமிழக மீனவர்களைத் தாக்கிய இலங்கைக் கடற்படையினர் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து மண்டபம் மரைன் பொலிஸார், இலங்கைக் கடற்படையினர் மீது 5 பிரிவு களின் கீழ் கூட்டமாகத் தாக்கு தல், கொடுங் காயம் ஏற்படுத்தும் ஆயுதங்களால் தாக்குதல் போன்ற குற்றங்களுக்காக வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள்

# குழப்பங்களுக்குப் பொறுப்பேற்று அமைப்புக் குழுத் தலைவர் விலகல்

சென்னை, செப். 27

டெல்லியில் நடைபெறவுள்ள பொதுநலவாயப் போட்டி தொடர்பாக குழப்பத்திற்கு மேல் குழப்பம் குவிந்தபோதெல்லாம் வாயே திறக்காமல் இருந்துவிட்டு, போதும் போதும் என்ற அளவுக்கு இந்தியாவின் பெயர் கெட்டுக் குட்டிச் சுவராகியுள்ள கடைசி நேரத்தில் அனைத்துத் தவறுகளுக்கும் தானே பொறுப்பேற்கிறேன் என போட்டி அமைப்புக் குழுத் தலைவரும், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவருமான சுரேஷ் கால்மாடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், போட்டியை நடத்துவது மட்டுமே போட்டி அமைப்புக் குழுவின் வேலை கட்டுமானப் பணியில் நான் ஈடுபடவில்லை. அது எனது பொறுப்பும் அல்ல. அதைக் கண்காணிப்பது மட்டுமே எனது வேலை. ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில், இந்தக் குழப்பங்களுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

அதைவிட முக்கியமாக தவறுகளுக்கு தாங்கள் மட்டும் காரணம் அல்ல; அரசும் கூடத்தான் காரணம் என்று மத்திய அரசையும் வம்புக்கு இழுத்துள்ளார். உரிய நேரத்தில் கட்டட நிர்மாணப் பணிகள் மற்றும் போட்டி ஏற்பாடுகளுக்கு தேவையானவற்றை அரசுத் துறைகள் தரவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதுவே குழப்பங்கள் அதிகரிக்கக் காரணம் என்றும் கூறினார்.

''கடந்த 2002 மான்செஸ்டரில் நடந்த பொதுநலவாயப் போட்டியின்போதும் ஏகப்பட்ட கோளாறுகள் இருக்கத்தான் செய்தன. இந்திய அணியினரை ஒரு பகல்கலைக்கழகத்தில்தான் தங்க வைத்தனர். எனவே டெல்லி பொதுநலவாயப் போட்டியை ஒட்டுமொத்தமாகக் குறை கூறுவது சரியல்ல''- இப்படி அவர் மேலும் கூறினார்.

# விஷம் குடித்த காதலன் அருகில் பிணமாகக் கிடந்தாள் மாணவி!

விஷம் குடித்து மயங்கிய நிலையில் கிடந்த காதலன் அருகே, பிளஸ் - 1 இல் கல்வி கற்கும் மாணவி காயங்களுடன் சடலமாக கிடந்தார். அவர் பலாத்காரம் செய்யப்படிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விழுப்புரம் அருகே உள்ள சின்னசேலத்தையடுத்து உலகிய நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த பிரியங்கா (வயது 16) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டார். தனது மகள் கழுத்தில் காயங்கள் உள்ளதால் இறப்பில் மர்மம் இருப்பதாக பிரியங்காவின் தந்தை சங்கர் பொலிஸில் புகார் கொடுத் துள்ளார். மரணம் தொடர்பில் பிரியங்காவின் காதலர் எனக் கருதப்படும் இளையராஜா என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப் பொலிஸார் காத்திருக்கின்றனர்.

# ஐ.நா. கவுன்ஸிலில் இந்தியா இடம்பெற சீனாவின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்

## நிருபமா ராவ் நம்பிக்கை

நியூயோர்க், செப். 27

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியா நிரந்தரமாக இடம் பெற சீனாவின் ஆதரவு கிடைக்கும் - என்று இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐ.நா. சபைக் கூட்டம் நடைபெற்று வருவதையொட்டி நிருபமா ராவ் நியூயோர்க் சென்றுள்ளார். இந்நிலையில் சீன அரசரி.வியான சீனா மத்திய தொலைக்காட்சி சனலுக்கு கடந்த சனிக்கிழமை அவர் பேட்டியளித்தார்.

அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு -

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்த இடம்பிடிக்க தகுதியுள்ள நாடுகள் குறித்து இப்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தியா இதில் முக்கிய இடம்பெற்றுள்ளது. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தரமாக இடம் பிடிக்க இந்தியாவுக்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளன என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

இந்த விடயத்தில் இந்தியாவின் கருத்துகளை சீனா நிச்சயமாகப் புரிந்துகொண்டு நடக்கும். சீனாவின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோர் சீனா சென்றபோது சீனத் தலைவர்களைச் சந்தித்து இதுதொடர்பாக பேசியுள்ளனர்.

நிரந்தர உறுப்பினராகும் போட்டியில் ஜப்பான் உட்பட பல் வேறு நாடுகள் உள்ளன. இருந்த போதிலும் சீனா இந்தியாவுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் என்று நம்புகிறோம்.

இந்தியாவும், சீனாவும் வேகமாக வளர்ந்து வரும் நாடுகள். ஏற்கனவே பல விடயங்களில் இருநாடுகளுக்கும் இடையே சிறப்பான ஒத்துழைப்பு இருந்து வருகிறது. உதாரணமாக பருநிலை மாறுபாடு தொடர்பான பிரச்சினையில் இருநாடுகளும் ஒரே கருத்துடன் இணைந்து செயற்பட்டன. எனவே இந்த ஒத்துழைப்பு வரும் காலத்திலும் தொடரும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இப்போது சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினராக உள்ளன. மேலும் 10 நாடுகள் சுழற்சி முறையில் தாற் காலிக உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு கவுன்ஸிலில் உறுப்பினராவதன் மூலம் ஐ.நா. சபையில் கொண்டு வரும் தீர்மானத்தைத் தடைசெய்யும் 'வீட்டோ' எனப்படும் வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வரும் முக்கிய அதிகாரம் கிடைக்கும்.

# தேர்தலில் கூட்டணி மாறுகின்ற பேச்சுக்கே இடமில்லை என்கின்றது தமிழகக் காங்கிரஸ்

புதுக்கோட்டை, செப். 27

வரும் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி மாறும் என்ற பேச்சுக்கே இடமில்லை - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வீ. தங்கபாலு தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் சனிக்கிழமை அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியவை வருமாறு -

தி.மு.க. மிகச் சிறந்த தோழமைக் கட்சி. [illegible] கூட்டணி மாறுமா என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அதிக இடங்களைக் காங்கிரஸ் கேட்கும் என குலாம் நபி ஆசாத் கூறினார் என வெளிவந்த செய்தியில் உண்மையில்லை. அவர் பேட்டியளித்த போது நானும் திருநாவுக்கரசரும் உடனிருந்தோம் என்பதால் அவர் அப்படித் தெரிவிக்கவில்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை, கோட்பாடு, இலட்சியங்கள் உள்ளன.

எங்களுக்கெனத் தனிக் கொள்கைகள், கோட்பாடுகள் உள்ளன. அதேபோல தி.மு.க. மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையைக் கொண்டுள்ளது. மற்றக் கட்சிகள் கொள்கைகளில் நாங்கள் தலையிடுவதில்லை.

மத்திய அரசின் திட்டங்களை மாநில அரசின் திட்டங்களாக தமிழக அரசு அறிவித்தாலும், தமிழக மக்களுக்கு எது எந்த அரசுடைய திட்டம் என்பது நன்றாகவே தெரியும். ஆகையால், எங்களுக்குக் கவலையில்லை.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்
ஆதனப்பெயர் மாற்றம்
வட்டாரம் 11
கொத்துக்கட்டி வீதி,
ஆதன இல. 40/20

வட்டாரம் 11, கொத்துக்கட்டி வீதி, ஆதன இலக்கம் 40/20இல் அமைந்துள்ள ஆதனமானது பொன்னம்பலம் இரதிமோகன் கைம்பெண் நவசுஸ்வரி (மறுபெயர் நாகேஸ்வரி) என்பரால் அறுதியாக விற்கப்பட்டு துரைசிங்கம் நகுலேஸ்வரன் பெண் பிறேமபவா என்பவர்களால் 11893/09.08.2010ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றஞ்செய்வதற்காகப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து துரைசிங்கம் நகுலேஸ்வரன் பெண் பிறேமபவா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றஞ் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

*திருமதி ப.சிவலிங்கம்,*
*செயலாளர்,*
*வலி.தென்மேற்கு பிரதேச சபை,*
*மானிப்பாய்.* *(103871)*



## GNANA (ஞானா)
## BEAUTY PARLOUR

**Have a convocation makeup and get on Offer Facial**
அதி நவீன முறையில்
**Bridal / Convocation / Dance makeup**
**Facial for different types of skin with treatment**
**Manicure & Pedicure**
**Hair colouring, Cutting & styles / Head Massage & Treatment**
**Threading / Waxing**
**Wedding / Birthday Cake orders are undertaken**
மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளவும்.
162, ஆடியபாதம் வீதி,
(பொற்பதி சந்திக்கு அருகில்)
கொக்குவில்.
T.P - 2223885 *(103774)*



## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்

**எமது சங்கத்திலுள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.**

**1. பதவி: சாரதி - 312 - 13**
**சம்பளத்திட்டம் (66/2006ன்படி):**
**9950 85x10-90x10= 11700/=**

*தகைமைகள்: 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன், பஸ்/லொறி/ரைக்டர் ஆகியவற்றை ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பதுடன், சாரதி பதவியில் பெற்றுள்ள 4 வருட அனுபவம்.*

1. வயதெல்லை 18 - 45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தை தாம் பணி புரியும் சங்கத்தினூடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்தத் தயாராக இருக்க வேண்டும்.

***விண்ணப்பிக்கும் முறை:*** சங்கத்தால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை சங்கத்தில் பெற்று பூரணமாக்கி சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன் பொதுமுகாமையாளர் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 11.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத்தபாலிலோ அனுப்பி உறுதிப் படுத்திக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
*(சி/562307)* உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.



## ஆசிரியர் க.தவயோகராசா அவர்களின் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 புதிய வகுப்புகள் ஆரம்பம்

2008 இல் - த.பாசுபதன் *(தேசிய நிலை - 01)*
2010 இல்
2009 இல் - ப.கஸ்தூரி *(தேசிய நிலை - 02)*



அ.கீர்த்தனன்
*185 புள்ளிகள்-மா.நி-02*



ர.யதுஷன்
*184 புள்ளிகள்-மா.நி-03*



இ.விந்துயன்
*181 புள்ளிகள்-மா.நி-06*

வருடாவருடம் 40 இற்கு மேலான சித்திகளுடன் தொடர் சாதனையாளர்களை உருவாக்கிய நிறுவனத்தில் உங்கள் பிள்ளைகளையும் இணைத்துச் சாதனையாளராக்குங்கள்.
அல்லாரை வீதி, மீசாலையில் ..... இம்முறை இரண்டு பிரிவுகளாக
ஒவ்வொரு பிரிவுக்கும் வாரத்தில் 14 மணித்தியால வகுப்புகள்
யாழ். நகரில் ...... விசேட வினாவிடை வகுப்புகள் (வெள்ளி, சனி, ஞாயிறுகளில்)
வாரத்தில் 9 மணித்தியாலங்கள் நடைபெறும்.
இடம் : இல.104/01, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.
அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு : 2011 தரம்-4, தரம்-3 வகுப்புகளுக்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
*(103873)* தொடர்புகளுக்கு : 0776466208 இயக்குநர்.


# வெள்ளவத்தையிலிருந்து பத்தரமுல்ல வரை படகுச் சேவை

கொழும்பு, செப். 27

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வெள்ளவத்தையிலிருந்து பத்தரமுல்ல வரை பயணிகள் படகுச் சேவையொன்றை கடற்படை ஆரம்பித்துள்ளது. இதுவரை இப்படகுச் சேவை நாவல வரை நடைபெற்று வந்தது.

பத்து பேர் பயணிக்கக்கூடிய ஆறு சிறிய படகுகளும், 25 பேர் பயணிக்கக்கூடிய ஒரு படகும் இச்சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன என்று கடற்படைப் பேச்சாளர் கப்டன் அத்துல சேனரத் தெரிவித்தார்.

கிருலப்பனை வாய்க்காலினூடாகவே இந்தப் படகுச் சேவைகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் கொழும்பு மாநகரிலுள்ள ஏனைய வாய்க்கால்களினூடாகவும் இப்படகுச் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கடற்படையினர் ஆலோசித்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய வாய்க்கால்களை சுத்திகரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும், பயணிகள் போக்குவரத்துக்கு மாத்திரமின்றி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கிலும் இந்தப் படகுச் சேவையைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார். (சி)

# தீவகம் தெற்கு சனசமூக நிலையங்கள் நன்கொடை நிதி பெறலாம்

யாழ்ப்பாணம், செப்.27

குடாநாட்டில் கடந்த காலங்களில் இயங்காதிருந்து தற்போது மீள இயங்கும் தீவகம் தெற்கிலுள்ள சனசமூக நிலையங்கள் தமக்குரிய வருடாந்த நன்கொடைக் கொடுப்பனவுத் தொகையைத் வேலணைப் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா கேட்டுள்ளார்

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண நிலைமையாலும் இடம்பெயர்வாலும், குறித்த காலப்பகுதியில் இயங்காதிருந்த சனசமூக நிலையங்களுக்குரிய வருடாந்த நன்கொடைக் கொடுப்பனவுத் தொகையை தமது வைப்புக் கணக்கில் வைத்துள்ள பிரதேச சபைகள் அந்தந்த சனசமூக நிலையங்கள் மீள இயங்கும் பட்சத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டள்ளது.

எனவே தீவகம் தெற்கு பகுதியிலுள்ள சம்பந்தப்பட்டசனசமூக நிலையங்கள் உடனடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (201-16)

# வயலில் வேலை செய்த வேளை மயங்கி மரணம்!

யாழ்ப்பாணம், செப். 27

வயலில் வேலை செய்து கொண்டிருந்த முதியவர் திடீரென மயக்கமுற்று மரணமானார். இச்சம்பவம் நேற்று முற்பகல் மட்டுவில் பகுதியில் உள்ள வயற்காணியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வயலில்வேலை செய்து செய்து கொண்டிருந்த இம்முதியவர் திடீரென மயக்கமுற்றுள்ளார். இதனைக் கண்ட அயலவர்கள் இவரை அருகிலுள்ளதனியார்வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள்.

பின்னர் இவர் மரணமடைந்தமை தெரியவந்துள்ளது. கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தன் கதிரவேலு (வயது 58) என்பவரே மேற்படி சம்பவத்தில் மரணமானவராவார். (216-288)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண
பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர்
கலாநிதி
**கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்**
அவர்கள் பேராசிரியர் என்ற உயர் தகைமை அடைந்தமையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையின் வரலாற்றில் இளம்வயதில் இப்பதவியை பெற்றுக்கொள்ளும் பெருமை பெற்ற இவர், சிறந்த ஆய்வாளன், நல்ல விமர்சகன் மட்டுமல்லாது சிறந்த கலை இலக்கிய ஆர்வலன் என்பதும் இவரின் தனிப் பண்புகள்.
இவரின் பணி மென்மேலும் சிறப்புடன் மிளிர்ந்திட எல்லாம்வல்ல இறைவனை வேண்டி பாராட்டிக் கொள்கிறோம்.

அ.சிவநாதன் அரவிந்தன்
(HSBC முகாமையாளர்- யாழ்ப்பாணம்)



## நினைவஞ்சலி

மலர்வு
06
*
11
*
1951



மறைவு
28
*
08
*
2010

**திருமதி ருக்மணிதேவி சுப்பிரமணியம்**

நீ இங்கு இருக்கையிலே குறையேதும் இல்லை - அம்மா
அப்பா இல்லாக்குறை அறியாமல் வளர்த்தாய் - அம்மா
வாழ்வின் நெழிவு, சுளிவு அறிய வளர்த்தாய் - அம்மா
உன் கண் அசைவில் உன் கருத்தை அறிவோம் - அம்மா
நீ இல்லா வாழ்வில் சுவையேதும் இல்லை - அம்மா
எனினும் உன் ஆசை நிறைவேற வாழ்வோம் - அம்மா
இவ் உலகம் எனி உனக்கு வேண்டாம் - அம்மா
கைலாயன் உறையும் இடம் நீயும் உறையும் - அம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிள்ளைகள்
புலோலி. *(சி-571380)* சு.பார்த்தீபன், சு.பிரதீபன்.



## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி மாவட்ட செயலக
அபிவிருத்தி உதவியாளர்
**துரைசிங்கம் விஜயமனோகர்**



அவர்கள் நேற்றுமுன்தினம் 25.09.2010 அன்று அகால மரணமானதால், துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலகம்,
கரைச்சி.

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.



## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட செயலக
அபிவிருத்தி உதவியாளர்
**துரைசிங்கம் விஜயமனோகர்**
அவர்கள் அகாலமரணமடைந்த செய்திகேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விசேட ஆணையாளரும், செயலாளரும்,
உத்தியோகத்தர்களும், நலன்புரிச் சங்கமும்.
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. *(சி/571386)*



## 31ஆம் நாள் நீங்காத நினைவுகளுடன் கண்ணீர்க் காணிக்கை

அன்னையின்
மடியில்
12
★
12
★
1979



ஆண்டவன்
அரவணைப்பில்
28
★
08
★
2010

எமது பாடசாலை ஆசிரியர் நவநீதனின் அன்பு மனைவியும் வலிகாமம் கல்விவலய முகாமைத்துவ உதவியாளருமான

**திருமதி நவநீதன் பிருந்தா**

பாரினில் பிறப்பவர் எல்லாம் இறப்பது நியதிதான் - ஆனாலும்
உமக்கோ வாழும் வயதினில் காலனவன் காலை வாரிவிட்டான்
உங்களுடைய திடீர் இழப்பினை அறிந்து துயருறும் நாம் - உம்முடைய
ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

அதிபர், ஆசிரிர்கள், மாணவர்கள்,
*(103863)* கல்விசாரா ஊழியர்கள், கிளி/பரந்தன் இந்து ம.வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது அரசமைப்பு சீர்திருத்தமே மக்கள் மனங்களை வெல்ல உதவும்

## நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் பட்டி வீரக்கோன்

கொழும்பு, செப்.27

பல தரப்புக்களினதும் இழுத்தடிப்பினாலேயே 13ஆவது அரசியல் திருத்தம் அமுல்படுத்தப்படவில்லை. இது முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென முன்னாள் நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் வலியுறுத்தியுள்ளார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள், சர்வதேச தொடர்புகள் மற்றும் இராஜதந்திர கற்கை நெறிகளுக்கான லஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது சாட்சியமளிக்கையிலேயே முன்னாள் நீதி அமைச்சரும் சமசமாஜக் கட்சியின் முன்னாள் செயலாளருமான பட்டி வீரக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வின் அனைத்துக் கட்சி மாநாடு கூட இலங்கைக்குள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்விற்கான கொள்கைகளைக் கொண்டிருந்தது. ஆனால் இதற்குத் தமிழர்களின் ஒத்துழைப்புக் கிட்டுவதில் தாமதமேற்பட்டது.

அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலமாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உருவாக்கப்பட்டிருந்தாலும் அதனை அமுல் செய்ய முடியவில்லை.

ஆனால் இதில் இந்தியாவும் பங்காளியாகக் கலந்துகொண்டமை பயனாக அமைந்தது. முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூட 13 ஆவது அரசியல் திருத்தத்தை அமுல்படுத்துவதை வழிப்படுத்தியிருந்தார். இதுவே சிங்கள மக்கள் இராணுவ வெற்றியை விரும்புவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. விடுதலைப் புலிகள் தமது தனிநாட்டு நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதற்கும் இதுவே காரணமாக அமைந்தது என்பதையும் மறுக்கமுடியாது.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தச் சீர்திருத்தத்தினை அறியக்கூட விரும்பவில்லை.

இவ்வாறாக பல தரப்புகளின் இழுத்தடிப்பினாலேயே 13 ஆவது அரசியல் திருத்தம் அமுல்படுத்தப்படவில்லை. இதுவே முரண்பாடுகளுக்குக் காரணமாக அமைந்ததால் 13 ஆவது திருத்தத்தினை அமுல்படுத்தி மக்கள் மனங்களை வெல்ல வேண்டுமென்றும் தெரிவித்தார்- பட்டி வீரக்கோன். (க)

# குறைபாடுகள் நிறைந்து காணப்படும் பன்னங்கண்டி அரசாங்க பாடசாலை

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி பன்னங்கண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை போதிய அடிப்படை வசதிகள் அற்றுக் காணப்படுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையில் தற்போது 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். போரின் போது பெரிதும் அழிவடைந்த இப் பாடசாலை மேல் கூரைகள் இன்றியும், கட்டடங்களும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. கதிரைகள், மேசைகள் மாணவர்களின் பயன்பாட்டிற்குப் போதுமானதாக இல்லை.

தற்போது மழைகாலம் என்பதால் மாணவர்கள் தொடர்ச்சியாகப் பாடசாலையில் கல்வி கற்க முடியாது உள்ளது.

இப்பிரதேசத்தில் இப்பாடசாலை மட்டுமே காணப்படுவதால் அதிக மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கிறார்கள். இம்மாணவர்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு பாடசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுத்தருமாறு பாடசாலை சமூகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (க-313)

# கிளிநொச்சியில் தமிழ் இலக்கிய விழா மூன்று நாள்கள் நடைபெற ஏற்பாடு

கிளிநொச்சி, செப்.27

வடமாகாண தமிழ் இலக்கிய விழா கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அடுத்தமாதம் 2,3,4 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளதாக வடமாகாண கல்வியமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

முதல் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனும், இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய திரு.மு.சந்திரகுமாரும், மூன்றாம் நாள் நிகழ்வுகளுக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில்யாழ்ப்பாணத் தில் இருந்து 15 பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் திருமறைக் கலாமன்றம், யாழ். மத்திய கல்லூரி என்பன கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளன. இதே வேளை மன்னார் , வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தும் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி கலை நிகழ்ச்சிகளை வழங்க உள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து 15 நிகழ்வுகள் வழங்கப்பட உள்ளன. இறுதி நாள் அன்று விருதுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் 12 ஆளுநர் விருதுகளும் 9 இலக்கிய விருதுகளும் வழங்கப்படவுள்ளன. இத்தினத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பேரணி ஒன்றும் இடம்பெற உள்ளது. இதேவேளை இந்நிகழ்வு முதலாம் திகதி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும் அத்தினத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வு இடம்பெறவுள்ளதால் 2 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இவ்விழாவைச் சிறப்பாக நடத்தி முடிக்க கிளிநொச்சி அரச அதிபர், வடமாகாண கல்வியமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (க-319)

# மாங்குளம்- முல்லைத்தீவு வீதியில் வேதனையுடன் தொடரும் பயணம்

கிளிநொச்சி, செப்.27

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுக்குச் சென்று தமது கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்கள் தமது பிரயாணத்தை உரியவர்கள் சீர்படுத்தித் தரமாட்டார்களா என ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுக்கு பேருந்தில் சென்றடைய குறைந்தது 5 மணித்தியாலம் தேவைப்படுகின்றது. அதுவும் பலத்த சிரமங்களின் மத்தியிலேயே முல்லைத் தீவைச் சென்றடைவதாகவும் ஒரு நாள் பயணம் ஒரு வாரப் பயணம் போன்று வேதனையைத் தருவதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம் வரையான வீதி சுமாராக இருப்பதாகவும் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுப் பயணமே நரக வேதனையாகவுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரையான கிட்டத்தட்ட 50 கி.மீற்றர் வரையான வீதி 30 வருடங்களுக்கு மேல் தரையே காணாது புளுதியும், மேடு பள்ளமுமாகவே காட்சியளிக்கின்றது.

மழைகாலம் ஆரம்பிக்கின்ற காரணத்தால் இனிவரும் காலம் இவ்வீதி மரண ஆபத்தைத் தந்துவிடுமோ எனவும் அவர்கள் அச்சத்துடன் உள்ளனர்.

உரிய அதிகாரிகள் உடனடியாகச் செயற்பட்டு இந்த மோசமான வீதியைப் புனரமைத்து தமது வேதனைக்கு முடிவுகட்ட வேண்டுமென இவர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (க-20)

# வெடி விபத்தில் சிறுவன் காயம்

விசுவமடு, செப்.27

விசுவமடு நாச்சிக்குடாப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடி விபத்தில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசுவமடு மகா வித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி கற்கும் ஆறுமுகம் கோபி என்ற 14 வயதுச் சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளார். இவர் வேறு இரு சிறுவர்களுடன் அங்கு இருந்த கிளஸ்டர் ரக குண்டொன்றை எடுத்து விளையாடிய போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிய வருகின்றது.

கடந்த 19 ஆம் திகதியே அப்பகுதியில் மீள்குடியேற்றம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (க- 78 )

# கிளிநொச்சி ம.வியின் 16 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பதினாறு மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட வெட்டுப் புள்ளியான 139 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுள் 173 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையினைப் பெற்ற செபஸ்தியான் குறூஸ் தேனுஜாவும் அடங்குவார். இவ்வாறு சித்தியடைந்த மாணவர்களது புள்ளிகளும் மாவட்ட நிலைகளும் வருமாறு:

செபஸ்தியான் குறூஸ் தேனுஜா -173-2, அருள்குமரன் சேரலாதன் -170-4, வின்சலாஸ் தர்சனா - 165-6, குணானந்தன் தனுசியா - 162-9, ஸ்ரீரங்கநாதன் கௌதமன்-160 -16, தயாளன் கோபிராஜ் - 159-18, சாந்தராஜ் ஜதுர்ஷா- 152-34, அழகரத்தினம் தர்மிதா- 150-38, சுப்பிரமணியம் செந்தூரிக்கா- 149-42, ஆறுமுகம் துவாரகி- 45-57, நேசன் டிலக்ஷன்- 145-57, டானியல் சாரூன் - 143-65, ஸ்ரீரமணன் பானுஜா- 143-65, விமலநாதன் மதுசன்- 142 -68, விக்கினேஸ்வரன் தனுத்திகா - 142-68, விநாயகமூர்த்தி ஹரிகாலன் - 139-83. (க-405)

# தொழில் செய்வதற்குரிய பணவசதி இல்லை உதவிக்கரம் நீட்டுகின்றனர் செம்மலை மீனவர்கள்

கிளிநொச்சி, செப்.27

சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ளதால் மகிழ்ச்சியாக உள்ளோம். ஆனால் கடற்றொழிலை மட்டுமே நம்பியிருக்கும் எங்களுக்குரிய கடற்றொழில் உபகரணங்களைக் கொள்முதல் செய்து தொழில் செய்வதற்குரிய பண வசதி இல்லாததால் தொடர்ந்தும் வறுமையின் பிடியிலேயே சிக்கித் தவிப்பதாக முல்லைத் தீவு செம்மலை கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது 24 மணி நேரமும் கடலுக்குச் சென்று தொழில் புரிவதற்குப் பாஸ் நடைமுறையுடன் கூடிய வசதியை கடற்படையினர் செய்து தந்துள்ளனர். ஆனால் பொருத்தமான மீன்பிடி முறைகளைப் பாவித்து தொழில் செய்யும் வசதி எமக்கு இல்லை. இதனால் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இதைக் கருத்திற் கொண்டு எமக்கு படகுகள் மற்றும் உபகரணங்களை வழங்கி தமது வாழ்வாதாரத்தைச் செம்மைப்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

முன்னர் 65 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் படகுகள் வைத்திருந்து தொழிலில் ஈடுபட்டதாகவும் ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் இன்று 9 படகுகள் மட்டுமே தொழிலில் ஈடுபடுவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

வழிச்சல், திருக்கை வலை, கரை வலை போன்ற பெருந் தொழில்களை வாங்குவதற்கு பணமில்லாத காரணத்தால், சிறு தொழில்களான தூண்டில், சூடை வலை என்பவற்றையே பாவித்து தொழில் புரிந்து தமது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருப்பதாகவும் தமது அவல நிலையைப் போக்குவதற்கு உரிய தரப்பினர் உதவ மாட்டார்களா எனவும் அவர்கள் கவலையுடன் வினா தொடுக்கின்றனர். (க-20)

# பரிதாபகரமான நிலையில் பன்னங்கண்டி மக்கள்

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி, 3ஆம் வாய்க்கால், பன்னங் கண்டி கிராம மக்களின் வாழ்க்கை நிலை தற்போது பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அங்கு மீள்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இக்கிராம மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு தறப்பாள், தடிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இனி வரப்போகும் மழைக்காலத்தில் தொடர்ச்சியாக இத்தறப்பாள்ள கொட்டகைகளில் வாழ முடியாது. நாம் எமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்து பல மாதங்கள் ஆகியும் எம்மீது யாரும் அக்கறை கொள்ள வில்லையென இவர்கள் கவலை தெரிவிக் கின்றார்கள்.

இப்பகுதியில் விதவைப் பெண்களும் கணவன்மார் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதால் [illegible] (க-313)

# இலங்கை இந்துக்களின் பிரச்சினையை உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்வேன்

## ஆர். எஸ். எஸ். அமைப்பின் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

இலங்கையில் உள்ள இந்துக்களின் பிரச்சினை தமிழர்களின் பிரச்சினை அல்ல என்ற விடயத்தை உலக நாடுகளிடையே கொண்டு செல்லவுள்ளதாக ராஷ்ரிய சுயம் சேவக சங்க (ஆர்.எஸ்.எஸ்.)த்தின் தென் மாநிலச் செயலாளர் சு. இராஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையில் செயலாளர் எஸ். சக்தி கிரீவன் தலைமையில் இந்து மதத்தைப் பாதுகாப்பது தொடர்பான கூட்டம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இராஜேந்திரன் மேலும் உரையாற்றும் போது:

இங்குள்ள பிரச்சினையைத் தமிழர்களின் பிரச்சினை எனக் கூறித் தமிழக அரசியல்வாதிகள் தங்களது பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய தேசமான பாரதத்தில் தமிழகம் ஒரு சிறிய பகுதி. பல மொழி பேசும் மக்கள் இனங்களைக் கொண்ட அந்த நாட்டில் இலங்கைப் பிரச்சினை, தமிழர்களின் பிரச்சினை எனக் கூறுவது பயனற்றது. இந்துக்கள் வாழும் தேசம் பாரதம். இந்துக்களின் பிரச்சினைதான் இலங்கைப் பிரச்சினை என்ற உண்மையைத் தெளிவாக எடுத்து விளக்க வேண்டும். உலகின் பல பகுதிகளிலும் பெருமளவு இந்துக்கள் வாழுகின்றார்கள். இந்து சமயத்தை உள்ளடக்கிய நாடுகளும் உண்டு. அங்கெல்லாம் இது இந்துக்களின் பிரச்சினை என்ற உண்மையை எடுத்துக் கூறி இங்குள்ள பிரச்சினைக்கான தீர்வை எட்ட அந்த நாடுகளின் உதவிகளைப் பெற வேண்டும். ஆர்.எஸ்.எஸ். அதற்கான முயற்சிகளைச் செய்யவுள்ளது. இந்து சமயமும் இந்துக்களும் பாதுகாக்கப்பட வேண்டும்- என்றார். (க-7)

# மட்டக்களப்பில் சுற்றுலா தகவல் நிலையம்

கொழும்பு, செப். 27

மட்டக்களப்பு நகரத்தில் 'நெக்டப்' திட்டத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா தகவல் நிலையத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைத்தார்.

இதனையடுத்து, மட்டக்களப்புவாவியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த படகு ஓட்டப் போட்டியையும் அமைச்சர் ஆரம்பித்து வைத்ததுடன், மட்டக்களப்பு மடுவில் அமைக்கப்பட்டுள்ள சூழல் கற்கை நிலையம் மற்றும் சுற்றுலாத்துறையாளரைக் கவரும் உல்லாசத் தீவையும் திறந்துவைத்தார்.

# தகவலுக்கு ரூ. 25 லட்சம் பொலிஸ் தரப்பு அறிவிப்பு

பேலியாகொடையில் ஆயுத முனையில் ஆறரைக் கோடி ரூபா ரொக்கப் பணம் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்வதற்குச் சரியான தகவல்களை வழங்குவோருக்கு 25 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை தனியார் வங்கியொன்றிலிருந்து அதன் ஏனைய கிளைகளிலுள்ள தன்னியக்க ரெலர் இயந்திரத்துக்கு (ATM) பணம் வைப்பிலிடுவதற்காக வான் ஒன்றில் ஆறரைக் கோடி ரூபா பணம் கொண்டு செல்லப்பட்டது.

குறித்த வானை மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுததாரிகள் வழிமறித்து பணத்தையும், பாதுகாப்பு ஊழியர்களின் துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பணிப்பின்பேரில் 5 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் குழந்தைகள்

தென்கச்சி
கோ.சுவாமிநாதன்.



தமிழ்நாட்டின் முதல் மந்திரியாக காமராசர் இருந்த வேளை ஓகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் முற்பகல் 11 மணி அளவில் பல பேர் அவர் வீட்டு வாசலிலே பார்த்துப் பேசிவிட்டுப் போய்க் கொண்டிருந்தனர்.

அந்த நேரம் ஒரு சின்னப்பையனும் சிறுமியும் அவர் வீட்டு வாசலில் வந்து தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தனர். அந்தப்பக்கம் வந்தவர் "இங்கே நிற்காதீர்கள் போங்கள்!" என்று சொன்னவுடன் பிள்ளைகள் இருவரும் பயத்துடன் விலகிப் போனார்கள். பின்னர் மறுபடியும் வந்து நிற்கின்றனர்.

யாரோ ஒரு பிரமுகரை வழியனுப்ப வந்த காமராசர், அந்தப் பிள்ளைகளைக் கண்டு "என்ன... யாரைப் பார்க்க வந்தீர்கள்..?" என்று கேட்டுக் கொண்டே குழந்தைகளுக்கருகில் நடந்து செல்கின்றார்.

அந்தப் பிள்ளைகளின் முகத்தில் மகிழ்ச்சி. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்தச்சிறுமி "எங்களது அண்ணாவுக்குப் பரீட்சைக்குப் பணம்கட்ட அம்மாவிடம் வசதியில்லை..." என்று சொல்லி முடிப்பதற்குள்ளே இவர் ஆதரவாக அச்சிறுமியின் தோளிலே தட்டிக் கொடுத்தபடி "அம்மா தான் அனுப்பினாரா?" என்று கேட்கிறார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம்... அம்மா தினமும் அப்பளம் செய்து வீடு வீடாகப் போய் விற்றுவிட்டு வருவார். அதில்தான் எங்களை எல்லாம் படிக்கவைக்கிறார்...." என்று அந்த இரு குழந்தைகளும் கூறினர்.

இதற்குப் பிறகும் அவரால் அதைக் கேட்டுக் கொண்டு இருக்க முடியவில்லை. அடிக்கடி மாடி ஏறி இறங்க முடியாது என்பதற்காக முன்பக்க அறையிலிருந்த அவர், திடீரென மாடி ஏறிப் போய் ஒரு உறையுடன் திரும்பி வந்து அந்தக் குழந்தைகளைக் கூப்பிட்டு சிறுமியின் கையில் அதைக் கொடுக்கிறார்.

"அண்ணாவின் பரீட்சைக்குப் பணத்தை கட்டுங்கள். அம்மாவின் சொற்கேட்டு நல்ல பிள்ளைகளாக நடக்க வேண்டும்" எனச் சொல்லிஅனுப்பி வைத்தார்.

மறு நாள் காமராசர் அம்பியுடன் பேசிக் கொண்டிருந்த போது அவரது உதவியாளன் வந்து "நேற்று வந்த குழந்தைகள் மறுபடியும் உங்களைப் பார்க்க வேண்டுமாம்" என்று கூறினார். உடனே அவர் "வரச்சொல்.....வரச்சொல்! " என்றார்.

சிறுவர்கள் இருவரும் உள்ளே வந்து ஒரு பற்றுச் சீட்டைக் கொடுத்து "ஐயா பரீட்சைக்குப் பணம் கட்டியாச்சு... இந்தப் பற்றுச்சீட்டை அம்மா உங்களிடம் காட்டிவிட்டு வரச்சொன்னார்" என்று சொல்லி அவரது காலிலே விழுந்து வணங்கினார்கள்.

காமராசருக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம். நெகிழ்ச்சி ஒரு பக்கம். குழந்தைகளை தூக்கி நிறுத்தி செல்லமாக தட்டிக் கொடுத்து வாயில் வரை வந்து வழியனுப்பி வைக்கிறார்.

"ஏழைக் குழந்தைகள்... பொய் சொல்ல மாட்டார்களென அப்பொழுதே நினைத்தேன்... நல்ல பிள்ளைகள்...." என்று சொல்லிக் கொண்டு திரும்பி உள்ளே வருகிறார் காமராசர்.

# ஞானமும் தானமும்

சுகி சிவம்.

மனிதனுக்கு வேண்டிய தெய்வ சம்பத்து (செல்வம்) எவை என்று பட்டியலிட்ட கீதை மூன்றாவதாக ஞானயோகத்தில் நிலை நிற்பதைச் சொல்கிறது.

நிலைத்தது எது? அழிவது எது? என்று தேடிக்கண்டு பிடிப்பது ஞானியின் வேலை. அழியக்கூடிய எதன்மீதும் பற்று வைக்காது அழியாத ஒன்றின்மீது கலையாத பற்று வைத்து நிலையாக நிலைப்பதே ஞானயோகம்.

நம்முடைய உடம்பு வேறு; நாம் வேறு. இந்த வேறுபாடே பலருக்குத் தெரியாது. உடம்பு அழியக் கூடியது; ஆனால் அதன் உள்ளே இருப்பது அழிய முடியாதது. அதை ஆன்மா என்கிறது கீதை. உடம்பின் மீது கவனம், பற்று, வெறி கொண்ட ஒவ்வொருவரும் அசுரரே. ஆன்மா பற்றிய அறிவு, தெளிவு அதன் வழியில் சிந்திப்பவர் தேவரே. ஆன்மாவுக்கு மரணம் இல்லை என்பதால் ஆன்மா ஞானியும் மரணம் அடை வதில்லை. அமரர் என்று தேவர்களைச் சொல்கிறோம். இதன் பொருள் மரணம் என்பதாகும்.

பகவான் ரமணரைப் போன்றவர்கள் ஞானயோகத்தில் நிலை நின்று அப்படி அமரர் ஆனவர்கள். அவர்களுக்கு உடம்பின்மீது ஆசை கிடையாது. திருவண்ணாமலையில் பாதாள லிங்கம் அருகே ரமணர் தவம் செய்தபோது உடம்மை எலி கடித்ததுகூட அவருக்குத் தெரியாது.

பிற்காலத்தில் அவர் முதுகில் இருந்த புண்ணைக் கீறி மருத்துவர்கள் ரண சிகிச்சை செய்தபோது மயக்க மருந்து பெறாமல் மௌவுனமாகச் சிகிச்சை செய்து கொண்டார். வலி இல்லையா? என்ற போது "நான் வேறு, என் உடம்பு வேறு" என்று பதில் சொன்னார் பகவான் ரமணர்.

நோய் வந்தால், "எனக்கு உடம்பு சரியில்லை" என்போம். 'எனக்கு' என்று நம்மை உடம்பில் இருந்து பிரித்துச் சொல்வதால் உடம்பு நானல்ல என்பது நம் முடிவு. 'நான் சரியில்லை' என்றா சொல்கிறோம்? ஆங்கிலத்தில் "I am not well" என்பார்கள். உடம்புதான் நான் என்கிற அறியாமை ஆங்கிலத்திற்கு உண்டு. அதனால் ஆங்கிலேயர்களுக்கும் உண்டு.

பத்து இந்திரியங்கள், ஐந்து பூதங்களால் ஆன உடம்பு மரணத்திற்குப் பிறகும் பூமியில் இருக்கும். ஏதோ ஒன்று அதிலிருந்து வெளியேறுகிறது. எனவே அழியக்கூடிய உடம்பு நான் அல்ல. அழியாததாக உடம்பு மாறி உடம்பினுள் புகும் ஆன்மா நான் என்கிற ஞானம் பெறுவதே ஞானயோகம்.

பிறகு மனம்தான் நான் என்று எண்ணத்தோன்றும் உண்மையில் மனம் என்ற ஒன்றே இல்லை என்பது பகவான் ரமணர் முடிவு. வெங்காயம் உரிக்க உரிக்க ஏதுமற்றதாகி விடுகிறது. அதுபோல் நமது பழைய எண்ணங்களின் ஒவ்வொரு பதிவையும் வெங்காயத்தோல் போல உரிக்க, உரிக்க எண்ணங்களற்ற நிலை தோன்றும். எண்ணங்களின் குவியலாகிய மனம் இல்லாமலேயே போய்விடும். 'மனத்தைக் கொல். மனோ நாசம் பெறு' என்பதே ஞானயோகம்.

ஒவ்வொரு எண்ணம் தோன்றும் போதும் இது யாருக்குத் தோன்றியது? என்று கேட்டுக் கொண்டால் 'எனக்கு' என்று விடைவரும். 'எனக்கு' என்றால் எண்ணம் வேறு, நான் வேறு என்ற தெளிவும் வரும். எண்ணமோ, எண்ணத்தின் குவியலாகிய மனமோ நான் அல்ல என்று விளங்கும். ஒவ்வோர் எண்ணத்தையும் நான் யார் என்ற கேள்வி மூலம் அதன் உற்பத்தி இடத்திலேயே கொல்ல வேண்டும் என்கிறார் ரமணர். பிறகுஅந்தக் கேள்வியையும் கொல்ல வேண்டும். அதுவே பூரண ஞானம்.

இன்று அதிகமான மக்கள் அஞ்ஞானிகள்; அல்லது அசுரர்கள். காரணம் நிலையான அழிவற்ற ஞானத்தின்மீது பலருக்கும் நாட்டமில்லை. அவர்களது ஆர்வம், அக்கறை, சிந்தனை யாவுமே நிலையற்றவை மீது நிலை பெற்றுள்ளன.

ஆன்மா பற்றிய தேடல், மரணம் பற்றிய ஆய்வு லட்சம் பேரில் ஒருவருக்கு இருக்குமா? இருப்பவர் தெய்வ சம்பத்து உடையவர்...

தேவனாகும் பண்புகளைப் பட்டியலிடும் கீதை ஞானயோகத்தில் நிலை நிற்பதை அடுத்துத் தானத்தை வற்புறுத்துகிறது. பொருள்மீது பற்றுள்ளவர்கள் அதை இழக்க விரும்பாது அசுர வேலைகளை வெட்கமின்றிச் செய்கிறார்கள். கொடுப்பதில் உள்ள இன்பம் உணர்ந்து கொடுக்கிறவன் தேவன். தனத்தில் இருந்து விளைவது தானம். ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுக்கும்போது அதனுடன் உள்ள பந்தம் அறுகிறது. பற்றும் பந்தமும் அற்று விட்டால் தெய்வநிலை இயல்பாகவே வரும்.

கர்ணன் சின்னக் குழந்தையாக இருந்தபோது விண்வெளிக்குச் சென்ற முனிவர்கள் குழந்தையைப் பார்த்துக் கையைத் தட்டிக் குழந்தையை எடுக்கும் நினைப்பில் கை நீட்டினர். அவர்கள் தானம் ஏதோ கேட்பதாக நினைத்து குழந்தை தன் நகைகளை நீட்டியதாக கதை உண்டு. அந்தக் கொடை உணர்வு அவனைத் தேவனாக்கியது.

தனி வாழ்வில் ஒழுக்கம் சிதைந்தவர்கள் கூடக் கொடுக்கும் இயல்பு காரணமாகத் தேவனைப்போலப் பூஜிக்கப்படுவதை உலகத்தில் பார்க்கிறோம். எனவே, தானம் ஒருவனைத் தேவனாக்கும் என்கிற கீதையில் குரல் அழுத்தமானது.

பற்றுள்ளவர்கள் பிறரிடம் இருந்து என்ன கிடைக்கும் என்று பார்க்கிறார்கள், பறிக்கிறார்கள். அவர்களை உலகம் மதிப்பது இல்லை. அதற்கு மாறாக இகழ்கிறது. வாங்குபவர்களை உலகம் பாராட்டுமா? கொடுப்பவர்களை உலகம் பாராட்டுமா?

பாடசாலை, மருத்துவமனை கட்ட நிதி தந்தவர்களை உலகம் வாழ்த்துகின்றது.

வருணன், வாயு ஆகியோரைத் தேவர்கள் என அழைக்கக் காரணமே மழை, காற்று ஆகியவற்றைக் கொடுப்பதாலாகும். உயிர்க் குலத்தின் தேவைகளைத் தருகிறவர்கள் தேவர்கள் எனப்பட்டனர். கொடுக்கிறபோது சுயநலம் கொல்லப்படுகிறது. தான், தனது என்கிற எண்ணம் அழிகிறது. 'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்ற குறள்வழித் தேவநாதம் அங்கு முழங்குகிறது.

## சிந்தனைத் துளிகள் சில...

- ★ பிறர் குறை காண்பவன் அரை மனிதன். தன் குறைகாண்பவன் முழு மனிதன்.
- ★ மொழியென்பது ஒரு கருவியல்ல. அது மனித உள்ளம் படிக்கும் தேன்கூடு.
- ★ அமைதியாய் இரு நீ யாரையும் கவர்ந்து கொள்வாய்.
- ★ உன்னைத் திருத்துவது உனக்கு எவ்வளவு கஷ்டமாக உள்ளது என்பதை நீ புரிந்து கொள்வாய். ஆனால் மற்றவர்களைத் திருத்துவதற்கு உனக்கு அதிக சந்தர்ப்பம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்வாய்.
- ★ அறிவைப் பெறுவதற்கு ஒருவன் கல்வி கற்க வேண்டும். ஆனால் ஞானத்தைப் பெறுவதற்கோ அவன் எதையும் ஆராய்ந்து அறிய வேண்டும்.
- ★ இன்று நீங்கள் நீங்களாகவே வாழ வேண்டும். அப்பொழுது தான் நாளையும் நீங்கள் நீங்களாக வாழ முடியும்.
- ★ உங்களைக் கோபமுறச் செய்பவன்... உங்களை வென்று விடுகிறான்.
- ★ அன்பின் செயல்கள் சிறியவையாகவும் அற்புதமாகப் பேசப்படுகின்றவையாகவும் இருக்கும். ஆனால் அவற்றின் எதிராழிகள் முடிவற்றவை.
- ★ அழகு எப்போதும் அன்பைக் காட்டுவதில்லை... மாறாக அன்புதான் ஒருவரின் அழகை எடுத்துக் காட்டுகிறது.
- ★ நீங்கள் பிறருக்குத் தரும் பரிசுப் பொருளை விட மேன்மையானது நீங்கள் பழகும் விதம் தான்.
- ★ அளவில்லாத ஆசை நமது நல்ல குணங்களை எல்லாம் அழித்து விடும்.
- ★ செல்வத்தை மறைக்கலாம். ஆனால் வறுமையை மறைக்க முடியாது.
- ★ உன் அறிவு மேசை விளக்காக அல்ல கலங்கரை விளக்காகப் பயன்படட்டும்.
- ★ காகிதத்தைப் புரட்டாதே. கருத்தைப் புரட்டு.
- ★ மனிதா, மற்றவனிடத்தில் உடற் சுகத்தை பாராதே. மாறாக உளச் சுகத்தைப் பார்.
- ★ பணம், பணம் என்று அலையாதே. பணமே உன்னைக் கீழ் நிலைக்குத் தள்ளிவிடும். ஏழ்மையாக இருந்தாலும் கூட நீ உண்மை பேசு. அதுவே உன்னை உயர்த்தும்.
- ★ இன்பத்தில் பங்கு கொள்பவன் போல துன்பத்திலும் ஓடி வந்து உதவுபவனே உண்மையான நண்பன் என்பதை மறவாதே.
- ★ நண்பனுக்கு உதவ, கைம்மாறு கிடைக்கும் என உதவுபவன் நண்பனே இல்லை.
- ★ ஒருவனுடைய ஒழுக்க மென்பது முகம்பார்க்கும் கண்ணாடியில் தெரிவதில்லை.
- ★ சந்தேகங்களை வளர்த்துக் கொள்வது மனிதனின் புற்றுநோயாகும்.
- ★ நாளை என்ற பொழுது இன்னும் சில மணித்துளிகளில் நேற்றாகப் போய்விடும்.
- ★ மென்மையாகவும் அன்பாகவும் பேசுவதற்கு காசு, பணம் தேவையில்லை.

## மூலிகைகளும் நோய்களும்

அரசமரம்:
இதன் பட்டைகளை மலமிளக்கியாகவும் பால்வினை நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

மங்குஸ்தான் பழம்:
தீராத வயிற்றுப்போக்கு, சீதபேதி போன்ற நோய்களுக்கு இதன் பழத்தின் சதை சிறந்த மருந்தாகும்.

அதிமதுரம் :
இருமல், மூக்கடைப்பு,வயிற்றுக்கோளாறு, மார்பு நோய் ஆகியநோய்களுக்கு சிறந்த மருந்தாகும்.

சூரியகாந்தி:
பேதியைக் குணப்படுத்தும், காய்ச்சல், வயிற்றுவலி, வலியுடன்கூடிய சிறுநீர் கழிதல், கண்வலி, இருமல் இவ்வாறான நோய்களுக்கு சிறந்தது.

ஓமம்:
விக்கல், நுரையீரல் நோய், இதயத் துடிப்பு, வலியுடன் கூடிய இருமல், மலச்சிக்கல், வயிற்றுவலி போன்ற நோய்களுக்கு இதன் கசாயம் சிறந்த பலன் தரும்.

பீர்க்கங்காய்:
மூச்சுத்திணறல், மூச்சுப்பிடிப்பு, வாந்தி, கபம் போன்ற நோய்களுக்கும் பேதி மருந்தாகவும் பயன்படுத்த முடியும்.

மருதாணி:
தசைவலி, தலைவலி, மாதவிடாய்க் கோளாறு, வெள்ளைபடுதல் போன்ற நோய்களுக்குச் சிறந்த மருந்து.

பலாமரம், பழம்:
வயிற்றுவலி, கல்லீரல் நோய், தொண்டைக் கம்மல், காய்ச்சல், கக்குவாண், இருமல் போன்ற நோய்களுக்கும் பசியினைத் தூண்டுவதற்கும் சிறந்த மருந்தாகும்.

தொட்டாற்சிணுங்கி:
மூலநோய், சிறுநீர் உறுப்புக் கோளாறு இவற்றுக்கு இதன் இலைகள் பயன்படுத்தப்படுகிறது.

முருங்கை:
விக்கல், வாந்தியைத் தூண்டும், சளிபோக்கும், ஃபுளுக்காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி போன்ற நோய்களுக்கு சிறந்த மருந்தாகும்.

இலுப்பை:
மலமிளக்கி, வீக்கத்தில் ஏற்படும் வலி, இருமல், பால்ச்சுரப்புக்கும் மலட்டுத்தன்மைக்கும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

கறிவேப்பிலை:
வாந்தி, சீதபேதி, தோல்வீக்கங்கள், பூச்சிக்கடி, சிறுநீர்ப் போக்கு போன்ற நோய்களுக்குப் பயன்படுத்தலாம்.

அலரி:
[illegible]நோய்க்கும் உடல் மெலிவுக்கும் இதன் இலைகள் பயன்படுத்தலாம். தொழுநோய் நாட்பட்ட புண்களுக்கும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர்

கலாநிதி

**திருநாவுக்கரசு வேல்நம்பி**

அவர்கள் வணிக முகாமைத்துவப் பீடத்தின் முதலாவது பேராசிரியர் என்ற உயர்தகைமை அடைந்தமையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் வணிகத்துறை மட்டுமல்லாது, சிறந்த பேச்சாளன் கவிஞன், சிறந்த இலக்கிய விமர் சகன், மனம் நிறைந்த சமூக சேவையாளன், தனித்துவம் மிக்க வழிகாட்டி, சிறந்த நிர்வாகி எனப்பல் பரிமாணங்களையும் தனக்குரியதாக்கிக் கொண்டுள்ள இவர் பண்பு சிறப்புடன் போற்றுதற்குரியது.

இவரது பணி மென்மேலும் எமது சமூகத்திற்கு நிறைவுடன் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மேலும் பல உயர்வுகளை இவர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

அ.சிவநாதன் அரவிந்தன்
(HSBC முகாமையாளர்- யாழ்ப்பாணம்)
(103870)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவி

*செல்வி கஜனி சிறிபாலா*

புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டுவதோடு மேலும் சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம். அவர் சித்திபெறுவதற்கு வழிகாட்டிய வித்தியாசாலை அதிபர், வகுப்பாசிரியர், அறிவாலயா கல்வியகம், ஏஞ்ரி கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.
(சி/571385)
வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட செயலக அபிவிருத்தி உதவியாளர்

**துரைசிங்கம் விஜயமனோகர்**

அவர்கள் நேற்றுமுன்தினம் 25.09.2010 அன்று அகாலமரணமெய்தினார்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம்,
...ண்டாவளை.
(103880)
பிரதேச செயலாளரும்,
உத்தியோகஸ்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



**துரைசிங்கம் விஜயமனோகர்**

**(அபிவிருத்தி உதவியாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி)**

*எழுத நினைக்கையில் உன் எழில்வதனமெம் எதிரே விரியுதடா*
*அழுத விழிகளால் உன்முகம் தேடியெம் நெஞ்சம் எரியுதடா*
*அன்பின் முதல்வனே அருமை நண்பனே அகிலம் இருளுதடா*
*ஆறாத் துயரினில் துடியாய்த் துடிக்குமெம் விழிகள் பெருகுதடா*
*ஒன்றுறக் கூடியோர் குடும்பமே போலநாம் இன்புறப் பணி புரிந்தோம் - இனி*
*நீயிலா வெற்றிடம் உலகையே விஞ்சுமோ? எண்ணியே விம்முகின்றோம்.*

25.09.2010 அன்று எமைவிட்டுப் பிரிந்த எமது செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர் துரைசிங்கம் விஜயமனோகர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் திடீர் மறைவால் வாடும் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும் :
அரசாங்க அதிபரும், திட்டப்பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்,
மா.ப.பு. செயலகம்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.
(103876)

# குமரணிக்குளம் புனரமைப்பு

சாவகச்சேரி, செப். 27

வரணி, தாவளை, இயற்றாலை, குமரணிக்குளம் மீளப்புனரமைக்கப்பட்டு வருகிறது. இக்குளம் விவசாயத் திணைக்களத்தால் 13 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகிறது.

இந்த வேலைகள் வரணி விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களால் செய்யப்பட்டுவருகிறது. வரணிப்பிரதேசத்தில் 125 குளங்களுக்கு மேல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-131)

# சண்டிலிப்பாய் இந்து அதிபராக விமலன்

யாழ்ப்பாணம், செப்.27

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக குருசாமி விமலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நல்லூரைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் 1999ஆம் ஆண்டு முதல் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் கடந்த 21 ஆம் திகதி முதல் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த 5 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய வ. ஸ்ரீகாந்தன் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்தே அவரது இடத்துக்கு விமலன் நியமிக்கப்பட்டுள்ளார். (த-9)


## ஆனந்தி திருமணசேவை
## மணமகள் தேவை

★நோர்வே குடியுரிமை பெற்ற கிரக பாவம் 63, உத்தராடம்,உதயச் செவ்வாய்,1980இல் பிறந்தவருக்கும்

★ ஜேர்மன் குடியுரிமை, அத்தம், 1966இல் பிறந்த கிரக பாவம் 74¼, 7இல் செவ்வாய் உள்ளவருக்கும் ,உள்நாடு அல்லது வெளிநாடுகளில் மணமகளைத் தேடுகின்றோம். அஞ்சல், நேரடி, ரெலிபோன் 0212228708 மூலம் தொடர்பு கொள்ளுங்கள். வீ.ஏ.சிவராசா, சோதிடர், 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தரம் 6 இல் இருந்து B-A வரை ஆங்கிலத்தில் பேச, இலக்கணம், கடிதம், கட்டுரை. மாலை வகுப்புகள் By விக்னேஸ்வரன்,ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை. 077 - 6751649

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் றோட்டில்4 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0777 - 71505

## CANTEEN
## உதவியாளர் தேவை

நகரின் மத்தியில் இயங்கும் தனியார் கல்லூரி ஒன்றுக்கு Canteen உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0779688006

## சங்கீத் களஞ்சியம்

கால்நடை வளர்ப்பிற்கான மாஸ், மருந்து மற்றும் கோழிக்குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

நாளை (28-09-2010) கோழிக்குஞ்சு விநியோகிக்கப்படும்.

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
உரிமையாளர்
T.P- 0778448659

## தவறிவிட்டது

கிட்டினன் இராசதுரை என்பவரது தே.அ.அ.இல:593433480 V, சாரதி அனுமதிப்பத்திரம்,மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், சிவில் நிர்வாக குழு அடையாள அட்டை என்பன புத்தூருக்கும் மந்திகைக்குமிடையே தொலைந்து விட்டது.கண்டெடுத்தவர்கள் T.P- 0776967383 உடன் தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு : சென்றல் ரயர் வேக்ஸ், மந்திகை.

## P4 கணனி விற்பனைக்கு

Intel pentium IV 3.0 HT processor, Intel , Mother board, 1GB DDR1 Ram, 160 GB HDD, 128 Mb Geforce VGA, 5.1 Sound card, View Sonic Monitor உடன் விற்பனைக்குண்டு

விலை ரூபா 22,000/-

தொடர்புகளுக்கு : [illegible]


## மரண அறிவித்தல்கள்

### அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை



யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (26.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(103875)
தகவல் :
மகள் : பவளராணி.

### கந்தன் கதிரவேலு



கைதடி மேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கதிரவேலு நேற்று (26.09.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - நாகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நன்னியின் (மனோன்) அன்புக் கணவரும் புகழ்ராஜ் (லண்டன்), கமல்ராஜ் (வவி), ராஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காண்டீபன் (இ.போ.ச.), நிரோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிலோஜனின் பாசமிகு பேரனும் நாகம்மா, செல்லையா, நாகமணி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (27.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.
(103884)
தகவல் :
குடும்பத்தினர்.

### முருகன் கனகன்

**(ஓய்வுபெற்ற புகையிரத கட்டடப்பகுதி ஊழியர்)**



தெல்லிப்பழை, கட்டுவன் மேற்கைப் பிறப்பிடமாகவும் அரசடி, நல்லூர், முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கனகன் நேற்றுமுன்தினம் (25.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் - தெய்வி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடேசு - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும் துரையம்மாவின் அன்புக் கணவரும் யோகராசா (ஜேர்மனி), ஆனந்தராசா, தியாகராசா (லண்டன்), நளாயினி (நோர்வே), சுதாயினி, விஜயதாஸ் (ஜேர்மனி), ஜீவதாஸ் (சாது), யசோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கசிபோ, ரஜித்தா, பேளின், றமேஸ், முத்துக்குமார், விசியா, சுபோதினி, சதீஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்.
(103883)
தகவல் :
குடும்பத்தினர்.

### துரைசிங்கம் விஜயமனோகர்



ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் விஜயமனோகர் (மனோ, அபிவிருத்தி உதவியாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி) நேற்றுமுன்தினம் (25.09.2010) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தீபாஜினியின் (முகாமைத்துவ உதவியாளர், கரைச்சி பிரதேசசபை) அன்புக் கணவரும் துரைசிங்கம் - காலஞ்சென்ற சந்திரவதனா தம்பதியரின் அன்பு மகனும் பரமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், திருவையாறு ம.வி) - விஜயகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயறஞ்சனா (டென்மார்க்), விஜயரேணுகா (ஆசிரியை, விபுலானந்த ம.வி., திருகோணமலை), விஜயபாஸ்கர் (ஆசிரியர், மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கோமாரி, அக்கரைப்பற்று) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்சாயினி (ஆசிரியை, கிளி/திருவையாறு மகா.வி.), சுஜீபன், கோபாஜினி (கல்வியியல் கல்லூரி, மட்டக்களப்பு), லதாஜினி (மக்கள் வங்கி, கிளிநொச்சி), ரஜீபன் (மாணவன், கிளி/மத்திய கல்லூரி), ரவீந்திரகுமார், அமிர்தநாதன் (டென்மார்க்), செல்வன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு), விஜயகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபேக்கா, விதுசன் ஆகியோரின் அன்பு மாமனும் நிலக்ஸின் அன்புச் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருவையாறு,
கிளிநொச்சி.
(103881)
தகவல் :
தீபாஜினி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைக் கோட்ட உதைபந்தாட்டம்; விறுவிறுப்பாக ஆடிச்சாதித்தது மகாஜனா

வலி.வடக்கு,செப்.27

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சம்பியனாகியது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.



இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் இரு அணிகளும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைத்த போதிலும் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற முனைப்புடன் இறங்கி மோதிக் கொண்ட நிலையில் மகாஜனாக் கல்லூரி வீரர் தி.ஜனதீபன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

போட்டி சூடுபிடித்த நிலையில் மீண்டும் ஒரு கோலை மகாஜனாக் கல்லூரி வீரர் சு.புருஷோதி பெற்றுக் கொள்ள மகாஜனாக் கல்லூரி வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மகாஜனாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வெற்றி பெற்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)

## தியாகிகள் தின உதைபந்தாட்டம்

# பாடும் மீன், ஞானமுருகன் கழகங்கள் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றின

யாழ்ப்பாணம்,செப்.27

தியாகிகள் தின உதைபந்தாட்டப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்று சம்பியன் ஆகின.

தியாகிகள் தினத்தினை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதியாட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற 9 பேர் பங்குகொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டு வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

இதனைத் தொடர்ந்து 11 பேர் பங்கு கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இடம்பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடிய ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை தன தாக்கிக் கொண்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கலந்து கொண்டார். (ஐ-23)




## 'உதயன்' வெள்ளிவிழாவை ஒட்டி

# யாழ். மாவட்டக் கழகங்களுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.27

'உதயன்' வெள்ளிவிழாவை முன்னிட்டு கழகங்களுக்கு இடையில் மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத் தப்படவிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் ஆண், பெண் அணிகளுக்கு இடை யில் இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளதாக உதயன் வெள்ளி விழாக் குழுவினர் தெரி வித்தனர்.

வெற்றியீட்டும் கழகங்களுக்கும் வீர, வீராங்கனைகளுக்கும் பெறுமதிமிக்க கேடயங்களும் கிண்ணங்களும் வழங்கப்பட இருக்கின்றன.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் உதயன் கூடைப்பந்தாட்டப்போட்டி எனக் குறிப்பிட்டு உத யன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத் துக்கு அனுப்புமாறு வெள்ளி விழாக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஐ)

## மாவட்டத் தடகளப் போட்டி

# ஆண்கள் பிரிவில் வென்றோர்

வலி.வடக்கு,செப்.27

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:-

***100 மீற்றர்***

அ.எட்வேட் எடின் (யாழ்ப்பாணம்), எம்.வீ.பி.ரூபசிங்கா (வவுனியா), கே.சர்மிலன் (வவுனியா)

***200 மீற்றர்***

எம்.வீ.பி.ரூபசிங்கா (வவுனியா), எஸ்.சிவசங்கர் (யாழ்ப்பாணம்), எம்.நிசாந்தன் (மன்னார்)

***400 மீற்றர்***

எம்.வீ.பி.ரூபசிங்கா (வவுனியா), எம்.சுபாஸ்கரன் (வவுனியா), எம்.பிறேம்தாஸ் (மன்னார்)

***800 மீற்றர்***

பி.ஜி.பன்னவெல (வவுனியா), எஸ்.சிவதீபன் (வவுனியா), ஆர்.கஜேந்திரன் (வவுனியா)

***1500 மீற்றர்***

பி.ஜி.பின்னவெல (வவுனியா), என்.சிவனேசன் (வவுனியா), ஆர்.ரஜீகரன் (யாழ்ப்பா ணம்)

***5000 மீற்றர்***

ஆர்.ரஜீகரன் (யாழ்ப்பாணம்), எ.சசிகரன் (வவுனியா), எம்.ரகுபரன் (வவுனியா)

***10000 மீற்றர்***

ஆர்.ரஜீகரன் (யாழ்ப்பாணம்), ஜே.கஜேந்திரன் (வவுனியா), எம்.ரகுபரன் (வவுனியா)

***110 மீற்றர் தடை தாண்டல்***

கே.ஜெயகரன் (யாழ்ப்பாணம்), எம்.கேசவன் (வவுனியா), கே.சோபன் (யாழ்ப்பாணம்)

***400 மீற்றர் தடை தாண்டல்***

கே.சோபன் (யாழ்ப்பாணம்), கே.ஜெயகரன் (யாழ்ப்பாணம்), என்.ஜி.யூ.எல்.நாரன்விட்ட (வவுனியா).

(வளரும்) (ஐ-86)

## தனபாலன் வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்

# நெல்லியடி ம.ம.வி., ஸ்கந்தா, சென். ஜோண்ஸ் முதல் நடந்த ஆட்டங்களில் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம்,செப்.27

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சென்.ஜோண்ஸ் கல்லூரி ஆகியன வெற்றிபெற்றன.

சென்.ஜோண்ஸ் கல்லூரியின் மறைந்த தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட 19 வயதுப் பிரிவினருக்கான 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கைதடி நவில்ட் பாடசாலை அணி மோதியது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

உமைசுதன், ஆரணியன் ஆகியோர் முறையே 25,12 ஓட்டங்களையும் தர்சன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கைதடி நவில்ட் பாடசாலை அணி வீரன் திருக்குமரன் 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி நவில்ட் பாடசாலை அணி 5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் திருக்குமரன் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர்களான பிரகாஸ் 4 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஆரணியன் 2 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந் தவரோதயாக்கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் புருஸ்தேஸ்மன் 17 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி வீரர் ஜனகன் 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 3.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன், ஜனகன் ஆகியோர் முறையே 12,13 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி வீரரான புருஸ்தேஸ்மன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மகாஜனாக்கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

யாழ். இந்துக் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

நிருஷன் ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி வீரரான அஜித்தன் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

61 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 3.1 ஓவர்கள் நிறைவில் எதுவித விக்கெட் இழப்பின்றி 63 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் கரிவதனன், விதுஷன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 22,17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (ஐ-23)





பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதியப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி, பாரதி விளையாட்டுக் கழக அணி ஆகியவை மோதிக் கொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பியன்ஸ் லீக் கிண்ணம்

# வென்றது சென்னை



முரளி

டேர்பன், செப். 27

தென்னாபிரிக்கத் தலைநகர் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நேற்று நடைபெற்ற 'சம்பியன்ஸ் லீக் ருவெனரி-20' இறுதி ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அபாரமாக வென்று கிண்ணத்தைத் தனதாக்கியது.

எயார்ரெல் நிறுவனம் நடத்திய 'சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றது. நேற்றைய இறுதி ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோரியர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வோரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 128 ஓட்டங்களைப் பெற்றது. ஜேக்கப் 34 ஓட்டங்களையும் தைசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஆர்.அஸ்வின் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு விஜய்யும் ஹசியும் உறுதியான அடித்தளத்தை இட்டுக் கொடுத்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 103 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியாக விளையாடிய முரளி விஜய், 47 பந்துகளில் அரைச் சதம் தொட்டார். 58 ஓட்டங்களைப் பெற்ற போது போஜேயின் பந்துவீச்சில் கிருஜ்யிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ரெய்னா சொதப்பிய போதும் அணித் தலைவர் டோனி பொறுப்புடன் ஆடி வெற்றிக்கு வழி வகுத்தார்.

இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்த ஹசி 51 ஓட்டங்களை விளாசினார். 19 ஓவர்கள் முடிவில் 132 ஓட்டங்களைப் பெற்ற சென்னை அணி, 8 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. ஆட்ட நாயகனாக முரளி விஜய் தெரிவானார். தொடர் நாயகனாக அஸ்வின் தெரிவானார். இவர்கள் இருவரும் சென்னையைச் சேர்ந்தவர்கள்.

(உ)



## வீரர்கள் விலகல்

டெல்லியில் நடைபெறப்போகும் பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் காணப்படும் குளறுபடிகள் காரணமாகவும், ஊழல் குற்றச்சாட்டு காரணமாகவும் தினமும் ஒவ்வொரு நாட்டு வீரர்கள் தங்கள் அதிருப்தியை தெரிவித்து வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலையில் இங்கிலாந்தை சேர்ந்த நட்சத்திர டைவிங் வீரர் பீட்டர் வாட்டர் பீல்டு போட்டியில் இருந்து வெளியேறி உள்ளார். இவர் 2002 ஆம் ஆண்டு மான்செஸ்டர் போட்டியில் தங்கப்பதக்கமும், மெல்போர்ன் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் வென்றவர்

# ஷேவாக்கை வீழ்த்தினால் இந்தியாவை மடக்கலாம்

## ஜோன்சன்

மெல்போர்ன், செப். 27

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், ஷேவாக்கின் விக்கெட்டைக் கைப்பற்றுவதையே இலக்காகக் கொண்டுள்ளேன். அவரை வீழ்த்தினால் இந்திய அணியை குறுகிய ஓட்டங்களுக்குள் மடக்கிவிடலாம்''

- இவ்வாறு ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளரான ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி மொகாலியில் ஆரம்பமாகிறது.

இத்தொடர் குறித்துக் கருத்துக் கூறும்போதே ஜோன்சன் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், அதிரடித் துடுப்பாட்ட வீரரான ஷேவாக்கின் விக்கெட்டை விரைவில் வீழ்த்தவேண்டும். இல்லையெனில் ஓட்ட மழை பொழிந்துவிடுவார்.

இவருக்குப் பந்துவீசும்போது நுணுக்கங்களை முழுமையாகக் கடைப்பிடித்து வீசினால்,ஓட்டக் குவிப்பைத் தடுத்துவிடலாம்.

எனவே, இத்தொடரில் ஷேவாக்கின் விக்கெட்டையே இலக்காகக் கொண்டுள்ளேன்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக இருந்தபோதிலும், ஷேவாக், காம்பீர் போன்ற முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை சொற்ப ஓட்டங்களில் வெளியேற்றினால் போதுமானது. இதனால் தோனி, டிராவிட் உள்ளிட்ட நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டு, விரைவில் ஆட்டமிழந்து விடுவார்கள். இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு பந்துவீசினால், சொற்ப ஓட்டங்களில் வெளியேற்றிவிடலாம்.

- இவ்வாறு ஜோன்சன் கூறினார்.

## துளிகள்

சாம்பயன்ஸ் லீக் கோப்பையை கைப்பற்றிய சென்னை அணி இந்திய மதிப்பில் ரூ. 12 கோடி பரிசுத் தொகையைத் தட்டிச் சென்றது. இரண்டாவது இடம் பெற்ற வாரியர்ஸ் அணி, ரூ. 6 கோடி பரிசாக பெற்றது.

விஜய்க்கு 'கோல்டன் பேட்' சாம்பியன்ஸ் லீக் தொடரில் இம்முறை அபாரமாக பேட் செய்த சென்னை அணியின் முரளி விஜய் அதிக ரன் எடுத்து சாதித்தார். இதற்கான தங்கத்திலான 'கோல்டன் பேட்' விருதை பெற்றார். விஜய் 6 போட்டிகளில் 294 ரன் எடுத்துள்ளார். இரண்டாவது இடத்தில் வாரியர்ஸ் அணியின் டேவி ஜேக்கப்ஸ்(286 ரன்) உள்ளார்.

# டிரோக்பாவின் பெயரில் பிரான்ஸில் மைதானம்

ஐவரிகோஸ்ட் உதைபந்தாட்ட அணித்தலைவரும் செல்சி வீரருமான திடையர் டிரோக்பாவின் பெயரில் பிரான்ஸில் புதிய உதை பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.



திடையர் டிரோக்பா இளம் வயதில் பிரான்ஸில் உள்ள 'லெவால் லிஸ் ஸ்போர்ட்டிங்' என்ற கழகத்திற்காக விளையாடி வந்தார்.

1997இல் ஆண்டு 15ஆவது வயதில் ஐரோப்பிய உதைபந்தாட்ட வாழ்க்கையை டிரோக்பா இங்கிருந்துதான் ஆரம்பித்தார். தற்போது ஐவரிகோஸ்ட் அணியின் தலைவராக இருப்பதுடன் உலகின் முன்னணி உதை பந்தாட்ட உள்ளூர் அணிகளில் ஒன்றான செல்சியின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் டிரொக்பா திகழ்கிறார். தங்கள் அணியிலிருந்து உதைபந்தாட்ட வாழ்க்கையை ஆரம்பித்த டிரோக்பாவைக் கௌரவப்படுத்துவற்காக லெவால்லிஸ் அணி விரும்பியது.

எனவே, அந்த அணி சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மைதானத்திற்கு 'ஆப்டர் திடையர் டிரோக்பா' என்று பெயர் சூட்ட முடிவு செய்துள்ளது.

நாளைமறுதினம் (29ஆம் திகதி) இந்த புதிய மைதானத்தின் திறப்பு விழா நடக்கவுள்ளது. இதில் டிரோக்பா கலந்துகொண்டு மைதானத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

# பயிற்சிப் போட்டியில் ஆஸி. பலமான நிலை

சண்டிகர், செப்.27

பயிற்சி போட்டியில் வாட்சன், காடிச் சதம் கடந்து அசத்த, முதல் நாளில் ஆஸ்திரேலியா 319 ரன்கள் குவித்தது. ஸ்ரீசாந்த், உனாட்கட் போன்ற இந்திய இளம் வீரர்கள் பந்துவீச்சில் சொதப்பினர்.

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி, இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதற்கு முன்னதாக சண்டிகரில் மூன்று நாள் பயிற்சி போட்டியில் விளையாடுகிறது. இதில் காம்பீர் தலைமையிலான இந்திய கிரிக்கெட் சபை பதினொருவர் அணியை எதிர்கொள்கிறது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங், துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

### அபார தொடக்கம்

ஆஸ்திரேலிய அணிக்கு வாட்சன், சைமன் காடிச் அபாரமான தொடக்கம் தந்தனர். இருவரும் இளம் வீரர்களின் பந்துவீச்சை எளிதாக சமாளித்து ரன்கள் சேர்த்தனர். 60 மற்றும் 62 ஓட்டங்கள் எடுத்த நிலையில் காடிக் கொடுத்த பிடியை சிகர் தவான், ரகானே நழுவ விட்டனர். பின்னர் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய காடிச், 15 பவுண்டரிகள் உதவியுடன் முதல் தர கிரிக்கெட்டில் 51வது சதம் கடந்து அசத்தினார். இவர் 104 ரன்கள் எடுத்த நிலையில் காயமடைந்ததால் துடுப்பாட்டத்தை இடையில் கைவிட்டு வெளியேறினார்.

### வாட்சன் சதம்

பின்னர் வாட்சனுடன் இணைந்த அணித் தலைவர் பொண்டிங் ஓட்டங்களைக் குவித்தார். வாட்சன், 60 ஓட்டங்கள் எடுத்த நிலையில், முதல் தர கிரிக்கெட்டில் 6000 ரன்களை கடந்து சாதித்தார். தொடர்ந்து சதம் கடந்து அசத்திய இவர், 115 ரன்கள் (16 பவுண்டரி) எடுத்த நிலையில், பயுஸ் சாவ்லா சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார்.

### ஓட்டக் குவிப்பு

பின்னர் பொண்டிங், கிளார்க் இணைந்து அணியின் விக்கெட்டுக் சரியாமல் சுவர் போல் நின்றாடினர். ஆஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில், ஒரு விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. பொண்டிங் 42, கிளார்க் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில், பரக்யான் ஓஜா மட்டும், ஆஸ்திரேலிய வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தார். இவர் 21 ஓவர்கள் பந்து வீசி, 23 ஓட்டங்கள் மட்டும் விட்டுக்கொடுத்தார். ஸ்ரீசாந்த், உனாட்கட் மற்றும் பயுஸ் சாவ்லா போன்ற இளம் வீரர்கள் சொதப்பினர்.


### ஆடுகளம் சரியில்லை

முதல் நாள் ஆட்டம் குறித்து இந்திய அணியின் தலைவர் காம்பர் கூறுகையில்,''பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை சிறப்பாகத்தான் செய்தார்கள். காயத்திலிருந்து மீண்டு வந்த ஸ்ரீசாந்த், முடிந்தவரை சிறப்பாக செயல்பட முயற்சித்தார். ஆனால் ஆடுகளம்தான் பந்துவீச்சிற்குச் சுத்தமாக எடுபடவில்லை. டெஸ்ட் தொடரில் ஜாகிர் கான், இஷாந்த் சர்மா இருவரும், ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பார்கள்''- என்றார்.

# அசைக்க முடியாத தலைவர் டோனி

'டுவெனரி-20' அரங்கில் அசைக்க முடியாத தலைவரா டோனி திகழ்கிறார். உலக கோப்பை , ஐ.பி.எல்., மற்றும் சாம்பயன்ஸ் லீக் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறிய ஒரேத அணித் தலைவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். 2007 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு உலக கோப்பையைப் (டுவெனரி-20') பெற்று தந்தார். அடுத்து 2008 ஐ.பி.எல்., தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை இறுதியாட்டத்திற்குக் கொண்டு சென்றார். 2010இல் சென்னை அணிக்கு ஐ.பி.எல்., கோப்பை பெற்று தந்தார். தற்போது சாம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதி ஆட்டத்திற்கும் சென்னை அணியை அழைத்து சென்றுள்ளார்.

# வார சஞ்சிகை ஒன்றின் மீது டேவிட் பெக்காம் வழக்கு



தன்னை விலைமாது ஒருவருடன் இணைத்துப்பேசிய வார சஞ்சிகையொன்றின் மீது வழக்குத்தொடர உள்ளதாக இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் தெரிவித்துள்ளார்.

மேற்படி தகவல்கள் உண்மைக்கு புறம்பானவையெனவும் தாம் மேற்படி ஊடக நிறுவனத்திற்கு இச் செய்தியின் பிரசுரத்திற்கு முன் அறிவித்தார் எனவும் பெக்காமின் சட்ட ஆலோசகர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

டேவிட் பெக்காம் பரபல முன்னாள் பாடகி விக்டோரியாவை மணந்துள்ளார். இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளன. பெக்காம் மன்சஸ்டர், ரியல் மெட்ரிட் கழகங்களின் முன்னாள் நட்சத்திர வீரராவார். தற்போது அவர் அமெரிக்க [illegible] கெலக்ஸி கழகத்திற்காக விளையாடி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை கடல் பகுதி ஊடான இரகசிய தொடர்பை தடுப்பது அவசியம்

## நல்லிணக்க ஆணைக்குழு முன் கடற்படைத் தளபதி சாட்சியம்

இலங்கையின் வடபகுதிக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரகசியமான கடல் வழித் தொடர்புகள் எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு இந்திய-இலங்கை கடல்எல்லையில் சிறிலங்கா உன்னிப்பான காண்காணிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

- இவ்வாறு சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசார சமரசிங்க தெரிவித்துள்ளார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தனது சாட்சியத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

இந்திய மீன்பிடிப் படகுகள் மீதான கண்காணிப்பைத் தொடர்வதும்- உள்ளூர் மீன்பிடி சமூகத்தின் மீதான கண்காணிப்பைப் பேணுவதும், போருக்குப் பிந்திய கடற்படைத் தந்திரோபாயத்தின் மிகமுக்கியமான அம்சங்களில் ஒன்றாக இருக்கிறது.

நோர்வேயின் ஏற்பாட்டிலான போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருந்து போதும் கூட விடுதலைப் புலிகள் தமது கடல்வழி இரகசியத் தொடர்புகளைக் கைவிடவில்லை. சிறிலங்கா கடற்பரப்பில் 2003 பெப்ரவரி 06ஆம் திகதி ஆயுத தளபாடங்களை ஏற்றி வந்த இந்திய இழுவைப் படகு ஒன்றைக் கண்டுபிடித்தோம்.

அப்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த நோர்டிக் உறுப்பினர் ஒருவர் எமது அதிவேகத் தாக்குதல் படகில் இருந்தார். அந்த இந்திய இழுவைப் படகின் மீது சந்தேகம் கொண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் அதில் ஏறிச் சோதனையிட்டார்.

அதில் வெடிபொருள்களுடன் ஒரு 20 மி.மீ அல்லது 30 மி.மீ போராயுதம் ஒன்று இருந்ததை அவர் கண்டுபிடித்தார். அப்போது படகில் இருந்தவர்கள் கண்காணிப்புக் குழு உறுப்பினரை அச்சுறுத்திப் படகுக்கு வெளியே குதிக்கச் செய்தனர். நாம் அந்த வெளிநாட்டவரை மீட்டோம். படகை நாம் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக புலிகள் அதை தகர்த்து அழித்து விட்டனர்.

நான்காவது ஈழப்போரில் கடற்படையினரின் நடமாட்டங்களுக்கு குறிப்பாக- திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணங்களுக்கு கடற்புலிகள் வலுவான அச்சுறுத்தலாக இருந்தனர். படையினரின் பாதுகாப்பான பயணங்களுக்கு ஜெட்லைனர் துருப்புக் காவியே உதவியாக இருந்தது.

கடற்படை இரண்டு ஆழ்கடல் ரோந்துப் படகுகள், ஒரு அதிவேக பீரங்கிப் படகு, 20 அதிவேகத் தாக்குதல் படகுகள், 22 அரோ வகைப் படகுகள், 02 கரையோர ரோந்துப் படகுகள், ஒரு எம்.ஐ.24 தாக்குதல் உலங்கு வானூர்தி, ஒரு பீச்கிராப்ட் கண்காணிப்பு விமானம் ஆகியவற்றை கடற்பயணங்களின் போது பாதுகாப்புக்குப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

அத்துடன் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால், சூட்டாதரவை வழங்குவதற்காக இராணுவத்தினர் கரையோரத்தில் ஆட்டிலறி பீரங்கிகளை நிறுத்தியிருந்தனர். கடற்படையினர் வடக்கு,கிழக்கு கடற்பரப்பில் மட்டும் பிரச்சினைகளைச் சந்திக்கவில்லை. வடமேற்கு கடற்பரப்பிலும் கூட பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருந்தது.

போர் நடைபெற்ற போது தெற்கிலிருந்து நாம் வடக்கை தனித்து விட்டிருக்கவில்லை. கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் கடல்வழியான தொடர்பை கடற்படையினர் பேணி வந்தனர்.

நான்காவது கட்ட ஈழப்போரில் பொது மக்களுக்கான உணவு மற்றும் எரிபொருளை ஏற்றிச் சென்ற கப்பல்களுக்கு அனைத்துலக செஞ்சிலுவைக் குழு பாதுகாப்பு வழங்கவில்லை.

அதேவேளை சிறிலங்காவைக் கடந்து செல்லும் கப்பல்களுக்கு சிறிலங்காவே பாதுகாப்பு அளித்தது. இந்தப் பாதை வழியாக தினமும் 150 கப்பல்கள் வரை பயணிக்கின்றன.

போரின் உச்சக் கட்டத்தில் காலி மற்றும் கொழும்புத் துறைமுகங்களின் மீதும் புலிகள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர்

புலிகள் சரக்குக் கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்திய போதும் அனைத்துலக சமூகம் அதற்கு எதிராக வெளிப்படையான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

புலிகளின் மிதக்கும் ஆயுதக்களஞ்சியங்கள் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட பின்னர் அவர்கள் தமது நடவடிக்கைகளை இந்தியாவில் இருந்து பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்கு மாற்றினர்.

அனைத்துலக கடல்சார் அமைப்பின் இலக்கங்களைக் கொண்ட புலிகளின் பத்து கப்பல்களைக் கடற்படையினர் மூழ்கடித்தனர்.

அனைத்துலக சமூகம் விசாரணைகளை நடத்தி அந்தக் கப்பல்கள் யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தன என்று கண்டுபிடித்திருக்க முடியும்.

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட 2006- 2008 காலப்பகுதியில் கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி பதவிகளில் இருந்துள்ளேன்.

நான்காவது ஈழப்போரின் போது கடற்படை ஒவ்வொன்றும் 7 மில்லியன் டொலர் பெறுமதியான ஏழு அதிவேகத் தாக்குதல் படகுகளை இழந்ததுடன் 13 வர்த்தகக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

இறுதிக்கட்ட தரைச்சமரின் போது 700 இற்கும் அதிகமான படகுகளில் புலிகளின் பகுதியில் இருந்து மக்கள் தப்பி வந்தனர். இதன்போது பொது மக்களின் படகுகளில் இருந்து புலிகளின் படகுகளைப் பிரித்தறிவதற்கு நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தினோம்.

பொதுமக்களை கவசமாகப் பாவித்து புலிகள், கடற்படையினரின் இரண்டு சிறிய கப்பல்களை வெற்றிகரமாக மூழ்கடித்தனர். சுமார் 500 இந்திய மீன்படிப் படகுகள் திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் சிறிலங்கா கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்றன. அவர்களின் இந்த அத்துமீறல் தீவிரவாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது.

இந்த நேரத்தில் தாக்கி விட்டு மறையும் கடற்புலிகளின் படகுகளை தரையில் வைத்து அழிக்க முடியாது- அவர்கள் பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் மறைந்து கொள்வார்கள்.

இந்திய சிறிலங்கா கடல் எல்லையில் இருந்து 2 கடல் மைல் தொலைவில் 2007 டிசம்பர் 26ம் திகதி அதிவேகத் தாக்குதல் படகு ஒன்றை கடற்புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் மூழ்கடித்தனர்.

இந்தப் படகில் இருந்த 14 கடற்படையினரில் ஒருவர் மட்டுமே உயிர்தப்பினார்.

தற்கொலைத் தாக்குதல் நடத்த வரும் புலிகள் வித்தியாசமான மனோநிலை கொண்டவர்கள். அவர்களின் தற்கொலைப் படகு குறிப்பட்ட இலக்கை தாக்கத் தவறினால் மீண்டும் மீண்டும் வருவார்கள்.

இரகசியமான இந்திய தொடர்பு வழியை நிரந்தரமாக தடுப்பது மிகவும் முக்கியமானது. அதேவேளை உள்ளூர் மீனவர்கள் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

உள்ளூர் மீன்படிப் படகுகளைக் கண்காணிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் பல இடங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கம் கருதி மீன்பிடி நடவடிக்கைகளைக் கடற்படையினர் தடைசெய்ய வேண்டியிருந்தது.

குறிப்பாக துறைமுகங்கள் மற்றும் கரையோர நிலைகளின் பாதுகாப்புக் கருதி அவ்வாறு செய்யப்பட்டது. கடற்படையினரின் கண்காணிப்புடனேயே மீன்படிக்க அனுமதிக்கப்பட்டது.

இந்தக் கட்டுப்பாடுகள் வடக்கில் குறிப்பாக கடற்தொழில் சமூகத்தைப் பெரிதும் பாதித்தது. ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர் மீன்பிடி நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ)

---

## சீதுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சீதுவை ரயில்வே நிலையத்துக்கு அருகாமையில் வைத்து ரயில் கடவையைக் கடக்க முற்பட்டவேளையே இவர்கள் ரயிலில் மோதுண்டு பலியாகினர் என்று ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என ரயில்வே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தையடுத்து படுகாயங்களுக்குள்ளான (வயது - 32) நபரும் ஏனையவர்களும் உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் எனவும் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என நீர்கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீதுவைப் பிரதேசத்தில் ரயில் பாதைகளில் பாதுகாப்பு கடவைகள் இல்லாமையால் விபத்துக்கள் அதிகரித்த வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு நியூயோர்க் செல்கிறார் என அவர் தெரிவித்தார்.

அவர் இன்று 27 ஆம் திகதி நாடு திரும்பியதும் அரசுடன் இணைவார். பின்னர் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பில் விமானப் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று தகவல் வெளியாகி உள்ளன. (அ-சி)

---

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதி படையினரால் துப்புரவு செய்யப்பட்டு மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்ற வகையில் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலைகள், பொதுக் கட்டங்கள் என்பன தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

நாளை யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் பஸில், மூன்று நிகழ்வுகளில் கலந்து கொள்ள உள்ளார். அரியாலைப் பகுதியில் ஏர்பூட்டும் நிகழ்வில் கலந்து கொள்ளும் அவர் பின்னர் திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்களத்தில் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வில் பங்குபற்றுவார்.

அதன் பின்னர் அவர் வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

அறிவிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி நிரலுக்கு நடுவே வலி. வடக்கிலும் மீள் குடியமர்வை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார் என நம்பப்படுகிறது. (உ-9)

---

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பியைத் தாம் நியமித்ததாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பதவி வழியில் அங்கம் வகிக்கும் தாமும் நாடாளுமன்றப் சபைக் கூட்டங்களுக்குச் செல்லப் போவதில்லை என அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் நியமித்த பிரதிநிதி ஒருவர் நாடாளுமன்றச் சபையில் அங்கம் வகிக்க மறுப்புத் தெரிவித்தால் சபாநாயகருக்கு அதற்குப் பதிலாக ஒருவரை நியமிப்பதற்கான அதிகாரம் 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பதவி வழியாக நியமனம் பெற்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றச் சபையைப் பகிஷ்கரித்தால் சபை இயங்க முடியாது. அதுமட்டுமல்ல அதற்குப் பதிலாக எவரையும் யாராலும் நியமிக்கவும் முடியாது. இந்த நிலையில் 18ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மேலுமொரு திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றப் சபைப் பிரதிநிதிப் பதவியை ஏற்க மறுப்புத் தெரிவித்ததை அடுத்து சபாநாயகர் மற்றுமொரு பிரதிநிதியை நியமிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்டுள்ளார். அதற்கு அது தன்னுடைய வேலை இல்லை எனவும் தாம் ஏற்கனவே ஒருவரது பெயரை சிபார்சு செய்துள்ளதாகவும் சபாநாயகருக்கு எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். (அ-சி)

---

## போர்த்துக்கல் பிரதமருடன் மஹிந்த சந்திப்பு

கொழும்பு, செப். 27

ஐக்கிய நாடுகள் அமர்வில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் போர்த்துக்கல் பிரதமர் ஜோர்ஸ் போக்ஸ் ரேட்ஸைச் சந்தித்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் இரு நாட்டு பொருளாதார மற்றும் ராஜ தந்திர நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ஏற்கனவே பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரை யாடல்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

---

## திருமலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் கள் என்று சந்தேகிக்கப்படும் கைதிகளி டம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் வி.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சிறைச்சாலையில் சுமார் 250 கைதிகள் வரைதடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்க நியமித்த நிபுணர்கள் குழுவை தொடர்பு படுத்தியே இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை முன் வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் நமது நாட்டின் இறைமைக்கும், சுய கௌரவத்துக்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலேயே இக்குழு நியமனம் இடம்பெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நமது நாட்டின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதினால் வெளிவிவகார அமைச்சர் இச்சபையின் நம்பிக்கையை இழந்துவிட்டார். - என்று அந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்து கொடுக்கப்படும்.

**AXSHAYA CONSTRUCTION, JAFFNA.**

T.P.: 0776679564, 0213207202

போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன

* அழகியற் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல் விலை 150
* பொது உள சார்பு வழிகாட்டி விலை 350
* S.L.A.S. விலை ரூபா 300

அடுத்த வாரம் கிடைக்கும்.

பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா வவுனியா, ஆகிய புத்தகசாலைகளில் கிடைக்கும்.

**THE COLLEGE OF CHEMISTRY**

A/L DAY CLASS 2011

Sat., Sun. - 7.30-9.30 / Tu, Th 3. - 4.30

DIAS B.sc. (Hons) Spl in Chem

32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**பொருளியல்**

NB.கஜீதரன்

2011 A/L பிரிவிற்கான Model Paper Class ஆரம்பம் 28.09 (Tue)

Tue - Thu 4 - 5 pm

**NEC**

பருத்தித்துறை வீதி, யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org